## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2010–2011

### 1. முன்னுரை

*‘ஏழைகள் வாழவேண்டும்,*
*எரியாத குடிசை வேண்டும்*
*வயிறார உணவு,*
*மானமாரத்துணி,*
*அறிவாரக் கல்வி*
*இவைகளைத் தரவேண்டும்.*
*உழைப்பிற்கு வாய்ப்பும்*
*உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும்.’*

–பேரறிஞர் அண்ணா

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் பேரறிஞர் அண்ணாவின் எண்ணங்கள் நிறைவேறி வருகின்றன. இம்மாநில வரலாற்றில், ஊரக ஏழை மக்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் ஆற்றப்பட்ட பணிகளைப்போல முன் எப்போதும் செய்யப்பட்டதில்லை. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம நூலகம்,



விளையாட்டு மைதானம், கிராமகுளம், மேம்படுத்தப்பட்ட இடுகாடு/சுடுகாடு, குடிநீர் வசதி, தெருவிளக்குகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள், 2011ம் ஆண்டிற்குள் அமைக்கப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ், 31.3.2010 வரை ரூ.3,352.58 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்ட ஊரக ஏழை மக்களில், 56 சதவிகிதத்தினர் ஆதி திராவிடர்களாகவும், 76 சதவிகிதத்தினர் பெண்களாகவும் உள்ளனர். இந்தியாவிலேயே இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலம் தமிழ்நாடு என மேதகு உச்சநீதி மன்றம் பாராட்டு தெரிவித்துள்ளது. சாலை வசதிகளைப் பொறுத்தவரை, 2006ம் ஆண்டில் 29,280 கிலோமீட்டராக இருந்த தார் சாலைகள் 2010ம் ஆண்டில் 54,620 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளன. மகளிர் சுயஉதவிக்குழுக்கள் இயக்கத்திற்கு அளிக்கப்பட்ட உத்வேகத்தினால், 1989 முதல் 2006வரையிலான 17 ஆண்டுகளில் ரூ.1,765 கோடி கடனுதவி வழங்கப்பட்டதிலிருந்து, கடந்த 4 ஆண்டுகளில் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடனுதவி ரூ.6,364 கோடியாக உயர்ந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3.3.2010 அன்று துவக்கி வைக்கப்பட்ட ‘கலைஞர் வீட்டு வசதித்திட்டம்’ மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டங்களிலேயே மிகப்பெரியதாகும். இத்திட்டம் 2010–11 முதல் 2015–16 வரையிலான 6 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடிசைகளையும் நிலையான கான்கிரீட் வீடுகளாக மாற்ற வேண்டும் என்ற

நோக்கம் கொண்டதாகும். 2010–11ம் ஆண்டில் 3 லட்சம் குடிசைகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு ரூ.1,800 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்திய திட்டங்கள் தமிழகத்தின் கிராமப் பகுதியின் நிலத்தோற்றத்தையே மாற்றியமைத்துள்ளன.

வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பை உருவாக்குதல், சுகாதாரம், திறன் மேம்பாடு, மகளிருக்கான சமூக, பொருளாதார மேம்பாடு, சுனாமி மறுவாழ்வு, அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை அளித்தல் போன்ற நோக்கத்திற்காக மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் அயல்நாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்தது ஆகும். இத்துறை பல்வேறு ஊராட்சி அமைப்புகளையும் திறம்பட்ட உள்ளாட்சி அமைப்புகளாக மாற்றும் பொறுப்பையும் கொண்டுள்ளது. இத்துறையின்கீழ் 12,620 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்களுக்கு இணையாக) மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. பயிற்சிப் பிரிவு உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலகு மற்றும் சுனாமி திட்ட அமலாக்கப் பிரிவு ஆகியவைகளும் இத்துறையின்கீழ் உள்ளன. மாநிலத்



தேர்தல் ஆணையத்துக்கும் இத்துறை நிர்வாக உதவி புரிகிறது.

## 2. ஊராட்சி அமைப்புகள்

### 2.1 ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தமிழக உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சான்றாகும். அந்த காலகட்டங்களில் சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளைக் கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்த கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிர்வாக தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் “குடவோலை முறை” எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும்

நிலப்பிரபுத்துவ நிர்வாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேய பேரரசின் நிர்வாக வசதிக்காக தலசுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகார பரவலாக்கம் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்து சட்டம் 1950'' ஆகும். 1957 ஆம் ஆண்டு ‘‘உள்ளாட்சி நிர்வாக சீரமைப்பு’’ குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து ‘‘மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1958’’ மற்றும் ‘‘மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டம், 1958’’ ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன.

அ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சிமுறை.

ஆ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.

இ) கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல். இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக/ மறைமுகமாக தேர்ந்தெடுத்தல்.



ஈ) மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தல்.

உ) மாவட்ட போர்டுகளை கலைத்தல்.

ஊ) மாவட்ட வளர்ச்சிக் குழுவை ஆலோசனை வழங்கும் அமைப்பாக்குதல்.

இந்த இரண்டடுக்கு முறை 1975 வரை நல்லமுறையில் செயல்பட்டு, அவற்றிற்கு முறையாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முறையே 1.2.1977 மற்றும் 12.9.1979 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு 1986 முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த தேர்தல்கள் நடைபெறும் வரை, ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிர்வகித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன. மீண்டும் 1996ம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல் நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிர்வகித்தனர்.

## 2.2 அரசமைப்பு (73வது திருத்தம்) சட்டம் 1992.

ஊராட்சி அமைப்புகள் பல மாநிலங்களில், பல வடிவங்களில் செயல்பாட்டில் இருந்த போதிலும் முறையாக தேர்தல்கள் நடத்தப்படாமை, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லாமை, போதுமான அதிகாரங்கள் வழங்கப்படாமை மற்றும் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் இவ்வமைப்புகள் மக்களிடம் நற்பெயரைப் பெற இயலவில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு அரசமைப்புச் சட்டத்தின்படி ஊராட்சி அமைப்புகள் நிலையானதாகவும், நீடித்ததாகவும், வலுவானதாகவும் விளங்கிட ஏதுவாக 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு 73–ஆவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக, ஊராட்சி அமைப்புகளில் பல அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதனடிப்படையில், 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டு 22.4.1994 முதல் இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்தது.

அரசமைப்பு (73வது திருத்த) சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவை ஊராட்சி அமைப்பு முறையில் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தன. அவையாவன:



அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் – கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில். (தமிழ் நாட்டில் 12,620 கிராம ஊராட்சிகள், 385 வட்டார ஊராட்சிகள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.)

ஆ) ஐந்தாண்டுகளுக்கொரு முறை கட்டாய உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவதற்கு முன்போ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாகவோ தேர்தல்கள் நடத்தப்படும்.

இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பின் மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, உறுப்பினர் பதவியிடங்கள், தலைமை பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

ஈ) உறுப்பினர் மற்றும் தலைமை பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல்.

உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை தொடர்ந்து நடத்துவதற்கு சுயசார்புடைய அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.

எ) மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்குமான ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை ஏற்படுத்துதல்.

ஏ) கிராம ஊராட்சியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய ‘‘கிராமசபை’’ கோட்பாட்டை அறிமுகப் படுத்துதல்.

### 2.2.1 அரசமைப்பு சட்டத்தின் 73–வது திருத்தம் குறித்து தமிழகத்தின் நிலைப்பாடு

அரசமைப்புச் சட்டத்தின் 73வது திருத்தத்தின் சில இனங்களில் தமிழக அரசுக்கு தொடர்ந்து மாறுபட்ட



கருத்துக்கள் இருந்து வருகின்றன. இந்த புதிய அமைப்புகளின் பதினான்கு ஆண்டுகால செயல்பாட்டின் மூலம் அடைந்த அனுபவம், இந்த மாறுபட்ட கருத்துக்களை உறுதிப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958ன் படி, கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுவின் பதவி வழி உறுப்பினர்களாக இருந்தார்கள். அதனால் இரண்டடுக்கு ஊராட்சி அமைப்புகளிடையே ஒன்றுக்கொன்று இயைந்த நிலை இருந்து வந்தது. எனவே அவை ‘ஊராட்சி ஒன்றியம்’ என்ற பெயரில், கிராம ஊராட்சிகளின் ஒருங்கிணைந்த ஒன்றியமாக உண்மையில் செயல்பட்டன. கிராம ஊராட்சித் தலைவர்களே ஊராட்சி ஒன்றியக்குழுவின் பதவி வழி உறுப்பினர்களாகவும் இருந்ததால், ஒன்றிய குழுவிற்கு தனியாக வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனியாக வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் (மாநில அளவில் மொத்தம் 6,570) மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு (656) வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் உருவாக்கப்பட்டு, உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கப்பட்டு, மூன்றடுக்கு ஊராட்சிகளிடையே மோதலும், ஒற்றுமையின்மையும் ஏற்பட வழி வகுத்துள்ளது. அரசமைப்பு பிரிவுக்கூறு 243 சி(3)–ன்படி, ஒரு மாநிலம், சட்டவடிவின் மூலம், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுவில் பிரதிநிதித்துவம் பெறவும், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், மாவட்ட

ஊராட்சியில் பிரதிநிதித்துவம் பெறவும் வழி வகை செய்துள்ளது. ஆனால் இந்த முறையினால், ஊராட்சி ஒன்றியக்குழுக்களும், மாவட்ட ஊராட்சிகளும் இயங்க முடியாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருப்பதாலும் மற்றும் இரண்டு வேறுபட்ட அதிகார மையங்களாக உருவாகி, ஒற்றுமையின்மை ஏற்பட வாய்ப்புள்ளதாலும் இந்த அமைப்பு திருப்திகரமாக இல்லை. எனவேதான், தமிழ்நாட்டில், அரசமைப்பு பிரிவுக்கூறு 243 சி(3) பயன்படுத்தப்படவில்லை. மூன்றடுக்கு அமைப்புகளிடையே தொடர்பின்மை காரணமாக ஒவ்வொரு அமைப்பும், இதர இரண்டு அமைப்புகள் செய்யும் பணிகளை தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போகும் நிலை உருவாகி உள்ளது. இந்த நிலை, பணிகளை தேர்வு செய்வதில் பல அதிகார மையங்களையும், தேவையற்ற வேலைப் பளுவினையும், காலதாமதம் ஏற்படும் நிலையையும், பெரும்பாலும் உருவாக்குகிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958ன் கீழ், கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக்குழுவின் பதவி வழி உறுப்பினர்களாக இருந்த நிலையையே மீண்டும் உருவாக்க வேண்டுமென்பதை அரசு வலியுறுத்தி வருகிறது.

1958 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவரை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கலாம். பெரும்பாலான நேரங்களில், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களுக்கு



நேரிடையான தேர்தல்கள் நடந்தன. இந்த முறையில் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மிகுந்த நன்மதிப்பை பெற்றிருந்ததோடு, உள்நோக்கம் கொண்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வாய்ப்பு இல்லாததாலும், இந்த நடைமுறை நன்றாக செயல்பட்டு வந்தது. ஆனால், 73–வது அரசமைப்பு சட்டத் திருத்தத்திற்கு பிறகு, ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவரை மறைமுகமாக தேர்ந்தெடுக்க அரசமைப்பு சட்டமே வழி வகுக்கிறது. கிராம ஊராட்சித் தலைவர்கள் தேர்தலை பொறுத்தவரை மட்டுமே நேரிடை அல்லது மறைமுக தேர்தல் மூலமாக தேர்ந்தெடுப்பது மாநில அரசின் விருப்பத்திற்குட்பட்டது. இதே போன்று, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறை மாநில அரசின் விருப்பத்திற்கே விடப்பட வேண்டும் என மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

அரசமைப்பு சட்ட திருத்தத்தில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு திருத்தமும் (73வது) நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு ஒரு திருத்தமும் (74வது), ஆக அரசமைப்பு சட்டத்திற்கு மொத்தம் இரண்டு திருத்தங்களுக்குப் பதிலாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளை சேர்த்து ஒரே அரசமைப்பு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்க வேண்டும் என்ற கருத்தினை தமிழ்நாடு அரசு நெடுங்காலமாக கொண்டுள்ளது. இத்தகைய பிரிவினால் மாவட்ட ஊராட்சி,

மாவட்டத்திலுள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளை ஒருங்கிணைக்கும் ஒரு அமைப்பாக இல்லாமல் அதனுடைய எல்லை ஊரகப் பகுதிகளுக்கு மட்டுமே உள்ளது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏறக்குறைய 42% நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் மிகவும் நகர்ப்புற தன்மை கொண்ட கோயம்புத்தூர் (69.1%), கன்னியாகுமரி (66%), நீலகிரி (58%), தேனி (54%) மற்றும் மதுரை (52%) போன்ற மாவட்டங்களைக் கொண்ட இம்மாநிலத்தில் மாவட்ட ஊராட்சி, மாவட்டம் முழுவதும் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைக்கும் மற்றும் கண்காணிக்கும் அமைப்பாக இருக்க வேண்டும் என்ற வாதம் வலுவற்றதாகும். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மாவட்ட ஊராட்சிகளில் பதவி வழி உறுப்பினர்களாகவும் மாவட்ட ஊராட்சித் தலைவரை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கும் முறையும் இருந்தால் அது அர்த்தமுள்ளதாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும் இருந்திருக்கும். ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மாவட்ட திட்டக்குழு மூலமாக இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும், ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சிகளின் உறுப்பினர்களுக்கு மாவட்டத் திட்டக் குழுவில்



பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தால் அதன் அமைப்பில் குறைபாடு உள்ளது.

மாவட்ட ஊராட்சிகளை நீக்கவும், இரண்டடுக்குமுறை ஊராட்சிகளை ஏற்படுத்தவும், அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவர தமிழ்நாடு அரசு வலியுறுத்தும் என 2006–ல், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்ட போர்டுகளுக்கும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட அரசியல் வேறுபாடுகள் காரணமாக, 1961 ஆம் ஆண்டு மாவட்ட போர்டுகள் கலைக்கப்படும் வரை தமிழகத்தில் அதிகாரமிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட போர்டுகள் இருந்தன. மாவட்ட போர்டுகளுக்கு பதிலாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகியவற்றின் தலைவர்களைக் கொண்ட மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற ஒரு ஆலோசனை வழங்கும் மற்றும் திட்டமிடும் அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களே, மக்களுக்கு மிக அருகாமையிலும் மற்றும் சுயாட்சி அமைப்பில் முக்கிய இடத்தினை பிரதிபலிக்கும் வகையிலும் 'உள்ளூர்' அமைப்பு என்ற நிலையில் உள்ள இரண்டு அடுக்குகள் ஆகும் என

தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது. இந்த இரண்டு அடுக்குகளும் மேலும் வலுவூட்டப்படவும், துடிப்புள்ள அமைப்புகளாக மாற்றப்படவும் அவசியம் உள்ளது. மாவட்ட போர்டுகளை கலைத்ததற்கான காரணங்கள் இப்பொழுதும் பொருந்தும் என்பதே இந்த அரசின் கருத்தாகும். ஆலோசனை வழங்கும் மற்றும் திட்டமிடும் அமைப்பாக செயல்படும் மூன்றாவது அடுக்கான மாவட்ட ஊராட்சிக்கும் இந்த நிலை பொருந்தும். அதே நேரத்தில், பிற மாநிலங்களும் தங்களின் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் இது குறித்து மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கலாம் என்பதை இந்த அரசு நன்கு அறியும். உதாரணமாக, சில மாநிலங்கள், கிராம மற்றும் மாவட்ட ஊராட்சிகளே தேவையென்றும், இடைப்பட்ட அமைப்பு (வட்டார அல்லது தாலுக்கா ஊராட்சி) அவசியமில்லையெனவும் கருதுகின்றன. இருப்பினும், தற்போதைய அமைப்பில் ஒரு அடுக்கு கூடுதலாகவே உள்ளது என்பதே பொதுவான கருத்தாகும்.

மாநிலங்களைப் பொறுத்தமட்டும், சட்டமன்றம் கட்டாயம் இருக்க வேண்டுமெனவும், சட்டமேலவை, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் விருப்பப்படி அமைத்துக் கொள்ளவும் அரசமைப்பு சட்டத்தில் வழி வகையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கிராம ஊராட்சிகளை அனைத்து மாநிலங்களுக்கும் கட்டாயமாக்குவதுடன், வட்டார அளவில் அல்லது மாவட்ட அளவில் அல்லது இரண்டு அளவிலும்



ஏற்புடைய ஊராட்சிகளை மாநில அரசுகள் தங்களின் விருப்பப்படி அமைத்துக் கொள்ள அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு வரலாம். இந்த அரசு, அரசமைப்பு சட்டத்தில் இத் திருத்தங்களைக் கொண்டுவர வலியுறுத்தும்.

## 2.3 உள்ளாட்சித் தேர்தல்கள்

### 2.3.1 2006ல் நடைபெற்ற ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஏப்ரல் 1994ல் இயற்றப்பட்டாலும், 1996ல் புதிய அரசு பதவியேற்றபின்பு தான், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996ல் நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2001ல் நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூன்றாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2006ல் நடத்தப்பட்டன.

மூன்றடுக்கு ஊராட்சிகளில் தேர்தல் நடத்தப்பட்ட பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள் **அட்டவணை 1–**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை – 1
## ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 40,879 |
| 2 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 |
| 3 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,570 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 656 |
| 5 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 |
| 6 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 |
| 7 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 |

### 2.3.2 பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

இந்திய அரசமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243D-ல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் பெண்களுக்கான பதவியிடங்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு தொடர்புடையவை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல் பிரிவுகள் 11, 20, 32, மற்றும் 57 ஆகியவை ஆகும். இதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995, இணைந்து நிறைவாக்குகிறது. இந்த விதிகளில் பதவியிடங்களுக்கான



இட ஒதுக்கீடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் வார்டுகள், இப்பிரிவினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து அப்பிரிவினரின் மக்கள்தொகை விழுக்காட்டிற்கு ஈடான எண்ணிக்கையில் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த விதிகளின் கீழ், சுழற்சி முறையின் கால அளவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995 விதி 7–ஐ, அரசாணை நிலை எண்.105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 1.9.2006 மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, அக்டோபர், 2006 உள்ளாட்சித் தேர்தலில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பதவியிடங்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் அனைத்தும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் சுழற்சி செய்யப்படவில்லை. ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர்களுக்கு செய்யப்பட்ட இந்த ஒதுக்கீடு அரசு மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை தொடரும்.

எனினும், பதவியிடங்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பின் காரணமாக நீண்டகாலமாக தேர்தல்கள் நடைபெறாதிருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளின் தலைவர் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டை சுழற்சி செய்வதில்லை என அரசு தெளிவாக முடிவு செய்தது. அக்டோபர் 2006ல் நடைபெற்ற சாதாரணத் தேர்தல்களின்போது இந்த நான்கு ஊராட்சிகளின் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு, தீர்வு காண இயலாது எனத் தோன்றிய இந்தப் பிரச்னைக்கு இந்த அரசு தீர்வு கண்டது. இந்த ஊராட்சிகளிலுள்ள பல்வேறு வகுப்பினரும் தங்களது கடந்த கால கருத்து வேறுபாடுகளை மறந்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஊராட்சித் தலைவர்களை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டனர் என்பது மன நிறைவளிக்கிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம் **அட்டவணை–2–**ல் கொடுக்கப்பட்டுள்ளது.



**<u>அட்டவணை – 2</u>**

**<u>பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்</u>**

| வ எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவியிடங்கள்/ தலைமை பதவியிடங்கள் | பெண்களுக்கான இட ஒதுக்கீடு | | ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீடு | | பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | மாவட்ட ஊராட்சி தலைவர்கள் | 29 | 10 | 34% | 7 | 24% | 0 | 0% |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36% | 87 | 23% | 4 | 1% |
| 3 | கிராம ஊராட்சி தலைவர்கள் | 12,618 | 4,275 | 34% | 3,143 | 25% | 156 | 1% |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 656 | 226 | 34% | 154 | 23% | 8 | 1% |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,570 | 2,302 | 35% | 1,534 | 23% | 64 | 1% |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 | 32,638 | 33% | 24,630 | 25% | 983 | 1% |

### 2.3.3 பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றம் செய்தல்

பல உறுப்பினர் வார்டுகள் முறையானது கிராம ஊராட்சிகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. வேறு

எந்த ஊரக மற்றும் நகரபுற உள்ளாட்சி அமைப்புகளிலும் இம்முறை இல்லை. இதன் காரணமாக, தேர்தல் நேரத்தில் வாக்களிக்கும் போதும் மேலும் வாக்கு எண்ணிக்கையின் போதும் பல இன்னல்களை உருவாக்குகிறது. கிராம ஊராட்சிகளிலுள்ள தற்போதைய பல உறுப்பினர் வார்டு முறையின் காரணமாக, உறுப்பினர்களிடையே ஒரு பொறுப்பற்ற நிலையும் காணப்படுகிறது. மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தலைமையிலான மூன்றாவது உயர்நிலைக் குழு, கிராம ஊராட்சிகளில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றம் செய்திட பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையின் அடிப்படையில், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பிரிவு 12 திருத்தியமைக்கப்பட்டு, கிராம ஊராட்சிகளில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை நீக்கம் செய்து அவற்றிற்கு பதிலாக ஒரு உறுப்பினர் கொண்ட வார்டுகளாக 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் எண். 20ன் வாயிலாக மாற்றியமைக்கப்பட்டது. மேற்கண்ட ஒரு உறுப்பினர் வார்டு முறையானது 2011ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல்களின் போது கிராம ஊராட்சிகளில் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

## 2.4 அதிகாரப் பகிர்வு

உள்ளாட்சி நிர்வாகம் என்பது மாநில அரசிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொருள் ஆகும். இது இந்திய அரசமைப்பு சட்டத்தின் 7–வது அட்டவணையில் பட்டியல்–



2ல் இனம் 5–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சிகளுக்கான அதிகாரப் பகிர்வு குறித்த அடிப்படைக் கோட்பாடுகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 243ஜி–யில் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவின்படி, அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வரைமுறைகளை மீறாமல், ஒவ்வொரு மாநிலமும், ஊராட்சி அமைப்புகள் சுயாட்சி அமைப்புகளாக விளங்குவதற்கு என்னென்ன பொறுப்புகளையும் அதிகாரங்களையும் வழங்க வேண்டுமோ, அவற்றை வழங்குவதற்கு மாநில சட்டப் பேரவையின் மூலம் சட்டம் இயற்றலாம். இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தில் கூறப்படும் நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஒவ்வொரு நிலையில் உள்ள ஊராட்சி அமைப்புகளும் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வரையறுத்து வழங்குவது குறித்து இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை மேம்படுத்த திட்டம் தயாரிப்பது மற்றும் பதினோராவது அட்டவணையில் குறித்துள்ளபடி ஊராட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்க வேண்டிய 29 இனங்கள் குறித்த நடவடிக்கைகள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகள் வழங்குவது ஆகியவை குறித்தும் இப்பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிர்வாக அமைப்புகளாக செயல்படவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அதே நேரத்தில், மாநில தன்னாட்சி என்பது தமிழ்நாடு அரசின் உறுதியான மற்றும் வழிகாட்டி கொள்கையாகவும் உள்ளதால், மத்திய ஊராட்சித்துறை அமைச்சகத்தின் சில கருத்துக்கள் மாநில அரசுக்கென ஒதுக்கப்பட்ட அதிகார வரம்பில் தலையிடுவதாக தோன்றுகிறது. உதாரணமாக (i) ஒவ்வொரு மாநிலத்திற்கும் மாநில அதிகாரத்திலிருந்து ஊராட்சி நிர்வாகத்திற்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டிய அதிகாரப்பகிர்வை கண்காணிப்பதற்குமென ஒரு ஆலோசனைக்குழுவை அமைக்க முயற்சிப்பது. (ii) மாநில முதல் அமைச்சருக்கும், மத்திய ஊராட்சித்துறை அமைச்சருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கோருதல்; (iii) 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற மாவட்ட ஊராட்சி தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்காக நடத்தப்பட்ட தேசிய மாநாட்டில் உள்ளாட்சி நிர்வாகத்தை மாநிலப்பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்ற தீர்மானம் இயற்ற முயற்சித்தது; மற்றும் பிற.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்திட மூன்று



உயர்நிலைக்குழுக்கள் அமைக்கப்பட்டது என்பது பெருமைக்குரியதாகும். 1996–ம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் முதன் முறையாக நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, மாநிலத் திட்டக்குழுவின் அப்போதைய முழு நேர உறுப்பினரான திரு.எல்.சி.ஜெயின் அவர்களைத் தலைவராகக் கொண்டு மூன்று அடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசால் முதல் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1997ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசுக்கு சமர்ப்பித்தது.

எல்.சி.ஜெயின் குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வண்ணம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை மட்டுமல்லாது அரசின் பிற துறைகளான வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம், சமூக நலம், வருவாய், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற துறைகளும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை பரிந்துரைக்கும் பொருட்டு, பல்வேறு அரசியல் கட்சிகளைச்

சார்ந்த பதவியிலிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனுபவமிக்கவர்களை உள்ளடக்கிய இரண்டாவது உயர்நிலைக் குழுவை அரசாணை (நிலை) எண்.320, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 11.11.1997–ன் படி அப்போதைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் அரசு அமைத்தது. இக்குழு, அரசுக்கு 1,209 பரிந்துரைகளை 11.01.1999 அன்று சமர்ப்பித்தது. இவைகளில் 718 பரிந்துரைகளை ஏற்று அவற்றை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகளை அரசு வெளியிட்டது.

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டும் என்ற இந்த அரசின் உறுதியினைத் தொடர்ந்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், குறிப்பிட்ட மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் இப்பொருள் குறித்த சில வல்லுனர்களை உள்ளடக்கிய மூன்றாவது உயர் நிலைக் குழு, அரசாணை நிலை எண். 6 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி–1) துறை நாள் 22.1.2007–ன்படி அமைக்கப்பட்டது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை ஆய்வு செய்து இவ்வமைப்புகள் மேலும் திறம்பட செயலாற்ற ஏதுவாக கூடுதல் அதிகாரங்களை



வழங்க பரிந்துரைகள் செய்திட இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.

### 2.4.1 திரு மு.க. ஸ்டாலின் தலைமையிலான உயர் நிலைக்குழு

உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கும் பொருட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மூன்றாவது உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் முதல் கூட்டம் 7.3.2007 அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பங்கேற்புடன் உள்ளாட்சி பிரதிநிதிகள் கருத்தரங்கம் 18.3.2007 அன்று நடைபெற்றது. மேலும், மண்டல வாரியாக, ஈரோடு (24.07.2007), திருச்சி (25.07.2007), திருவண்ணாமலை (03.08.2007), விருதுநகர் (23.08.2007) ஆகிய இடங்களில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இக்குழுவின் இரண்டாவது கூட்டம் 19.09.2007 அன்று நடைபெற்றது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது தொடர்பாக பிற துறை செயலாளர்களுடன் கலந்துரையாடல் 11.10.2007 மற்றும் 12.10.2007 ஆகிய தேதிகளில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்குழு, 39 பொருள்களின் கீழ் 99

பரிந்துரைகள் அடங்கிய தனது அறிக்கையை **10.12.2007** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்தது.

### 2.4.2 திரு மு.க.ஸ்டாலின் குழுவின் பரிந்துரைகள்

மூன்றாவது உயர்நிலைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபை செயல்பட வேண்டும்.
- தனிநபர் பயன் பெறும் அனைத்துத் திட்டங்களின் பயனாளிகள் பட்டியல் கிராம சபையால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.
- கிராம ஊராட்சிகளிலுள்ள பல உறுப்பினர் வார்டு முறையை நீக்கி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ளது போலவே ஒரு உறுப்பினர் உள்ள வார்டு முறையைக் கொண்டுவருதல்.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகாலத்தில் நிலைத்த தன்மையினை கொண்டு வரும் நோக்கில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதிலும், நிறைவேற்றுவதிலும் உள்ள விதிமுறைகளை கடுமையாக்குதல்.



- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் **1–**ஆம் தேதியினை “உள்ளாட்சிகள் தினமாக” கொண்டாடுதல்.
- நலிவுற்ற கிராம ஊராட்சிகள் குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் மற்றும் சுகாதாரம் ஆகியவைகளுக்கான தங்களது செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக மாநில நிதி ஆணைய மானியத்தை உயர்த்துதல் மற்றும் மத்திய நிதி ஆணைய மானியம் முழுவதையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல்.
- ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான தலவரி, தலமேல்வரி, முத்திரைத்தாள் கட்டணம் மீதான மேல்வரி மற்றும் கேளிக்கை வரிகளை இனி மாநில அளவில் திரட்டி அவற்றை மாவட்டங்களுக்கு சீராக பகிர்ந்தளித்தல்.
- ஊராட்சி அமைப்புகள் செயல்பாட்டில் பெரிய அளவில் சுதந்திரம் அளிக்கும் வண்ணம் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரம்பினை உயர்த்துதல்.
- கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்.

- மூன்றடுக்கு ஊராட்சிகளின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)–ஐ ஊதியம் வழங்கும் அலுவலராக்குதல்.
- அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி வழங்குதல்.
- ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி.
- ஊராட்சி அமைப்புகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் முக்கிய அலுவலர்களுக்கு வாகனங்கள்.
- நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல்.
- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்பு குறித்து திட்டமிடுதல்.
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நூலகங்கள் மற்றும் விளையாட்டு மையங்கள் அமைத்தல்.
- கிராம அளவில் பிற துறைகளுக்கான பயனாளிகளை தேர்வு செய்வதிலும், திட்டங்களைச்



செயல்படுத்துவதிலும் கிராம ஊராட்சியே கிராம அளவிலான குழுவாக செயல்படுதல்.

உயர்நிலைக் குழுவின் பெரும்பாலான பரிந்துரைகளை அரசு ஏற்கனவே ஏற்று உரிய ஆணைகளையும் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் நிதிகளை பகிர்ந்தளிப்பதின் அடிப்படையில், பல்வேறு மாநிலங்களைத் தர வரிசைப் படுத்தியதில், தமிழ்நாடு 2006–07ல் நான்காவது இடத்தினையும், 2007–08ல் முதலிடத்தையும், 2008–09ல் மூன்றாவது இடத்தையும் மற்றும் 2009–10ல் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2.5 உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு வரையறை செய்தல்

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைப்பு, பிரித்தல் மற்றும் இணைத்தல் குறித்து பல கோரிக்கைகள் அரசால் பெறப்பட்டுள்ளன. இதுபோன்ற கோரிக்கைகள் குறித்து இறுதி பரிந்துரையை அரசுக்கு அனுப்புமுன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/துறைத் தலைவர்கள் பொதுமக்களின் கருத்துக்களை கேட்பதற்கு பின்பற்ற வேண்டிய

வழிமுறைகள் குறித்து அரசாணை நிலை எண்.131 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி1) துறை நாள் 16.3.2007–ல் உத்திரவிடப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிலுள்ள எவரும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்கனவே, பொதுமக்கள் கருத்தறியும் கூட்டங்கள் நடத்தியுள்ளனர். இதுவரை சில மாநகராட்சிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளை மட்டும் அருகிலுள்ள அந்தந்த மாநகராட்சிகளோடு இணைப்பதற்காக முடிவெடுக்கப்பட்டுள்ளது. வரும் 2011ம் ஆண்டில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச்சார்ந்த 25 கிராம ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியோடு இணைப்பதற்கும், வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த 61 கிராம ஊராட்சியை வேலூர் மாநகராட்சியோடும், ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த 7 கிராம ஊராட்சிகளை ஈரோடு மாநகராட்சியோடும், தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த 10 கிராம ஊராட்சிகளை தூத்துக்குடி மாநகராட்சியோடும் மற்றும் திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த 8 கிராம ஊராட்சிகளை திருப்பூர் மாநகராட்சியோடும் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



சட்டமன்ற தொகுதிகளின் எல்லைகள் மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் 278 ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகள் முழுவதும் ஒரே சட்டமன்ற தொகுதியின் எல்லைக்குள் வருமாறு அமைந்திருந்தன. சட்டமன்ற தொகுதிகளின் எல்லைகள் மறுசீரமைக்கப்பட்ட பின்னர், இந்த எண்ணிக்கை 213ஆக குறைந்துள்ளது. தற்போது, 172 ஊராட்சி ஒன்றியங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் அமையப்பெற்றுள்ளன. எனவே, முழு ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமே ஒரு சட்டமன்ற தொகுதியின் கீழ் வரும் வகையில் ஊராட்சி ஒன்றிய எல்லைகளை சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், ஊராட்சி ஒன்றிய எல்லைகளை சீரமைப்பதன் காரணமாக தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியில் உள்ள எவரும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள். மறு சீரமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் அக்டோபர் 2011ல் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தலின் போது நடைமுறைக்கு வரும். எதிர்வரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை முன்னிட்டு, 1.1.2010 முதல் ஏற்கனவே இருந்து வரும் நிர்வாக அலகுகளின் எல்லைகளை மாற்ற விதிக்கப்பட்ட தடையின் காரணமாக, இப்பணி தற்காகலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 2. 6 ஊராட்சி உறுப்பினர்களின் தகுதியின்மை

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951–ல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தகுதியின்மையை குறிக்கும் வழிவகைகளைப் போல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ல், பிரிவுகள் 34, 35, 37, 38, 39 மற்றும் 41 –க்கு திருத்தங்கள் வெளியிட்டுள்ளது. இதன்படி, ஊராட்சி உறுப்பினராக இருக்கக் கூடியவரின் தகுதியின்மை குறித்து, அரசு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தை கலந்தாலோசித்து முடிவு செய்யும். மேலும், 41–A, 41–B, 41–C மற்றும் 41–D என புதிய பிரிவுகள் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஊராட்சி உறுப்பினரின் தகுதியின்மை தொடர்பாக விசாரணை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2. 7 கிராம சபை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடித்தள சனநாயக அமைப்பாக இருப்பது கிராம சபையாகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல் படுத்துதல், பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கவும் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுப்பதற்கும், செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை



அவசியமாகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறையாவது, அதாவது சனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த அரசு ஆணையிட்டுள்ளது.

கிராம சபை கூட்டம் நடத்தும் முறையினை செம்மைப்படுத்தும் நோக்கில், இந்த அரசு, தமிழ்நாடு கிராம சபை (குறைவெண் வரம்பு, கூட்டங்கள் கூட்டுதல், நடத்துதல் மற்றும் வழிமுறை) விதிகள் 1998ல் அரசாணை (நிலை) எண்.130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி4) துறை நாள் 25.9.2006 மூலம் தேவையான திருத்தங்கள் செய்து ஒவ்வொரு ஊராட்சியிலுள்ள வார்டுகளிலும், சுழற்சி முறையில் கிராம சபை நடத்திட உத்திரவிட்டுள்ளது. மேலும், பெரிய ஊராட்சிகளில் வாக்காளர்களில் 10 சதவீதத்தினர் கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற குறைவெண் வரம்பினை செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் குறைவெண் வரம்பினை தளர்த்தி, **அட்டவணை–3**ல் குறிப்பிட்டபடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை – 3
## கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு

| வரிசை எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காவது மகளிர் இடம் பெற வேண்டும். மேலும், கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மக்கள் தொகை எத்தனை சதவீதம் உள்ளதோ அத்தனை சதவீத தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென துணை குறைவெண் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்தின் வருகை மற்றும் நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மூன்றாவது உயர்நிலைக்குழு, கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கான செலவினத்தை ரூ.500லிருந்து, ரூ.1,000ஆக உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. மேற்காணும் பரிந்துரையை அரசு ஏற்று, அரசாணை எண்.160, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1) துறை, நாள்: 30.09.2008ல் கிராம ஊராட்சித் தலைவர்கள், கிராம ஊராட்சியின் ஒப்புதலுடன் ஒரு கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கு ரூ.1,000/- வரை செலவு செய்ய அனுமதித்துள்ளது.

## 2. 8 கிராம ஊராட்சிகள்

மாநிலத்தின் 31 மாவட்டங்களில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் 12,620 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் இரண்டு புதிய கிராம ஊராட்சிகள், அதாவது பெருமாத்தூர் மற்றும் இந்திரா நகர் ஆகியவை கடலூர் மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் 16.8.2008 அன்று உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சராசரியாக 421 கிராம ஊராட்சிகளும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சராசரியாக 32 கிராம ஊராட்சிகளும் உள்ளன. நீலகிரி (35), கன்னியாகுமரி (99), தேனி (130), கரூர் (158) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை குறைவாகவும், விழுப்புரம் (1,104), திருவண்ணாமலை (860), வேலூர் (753), கடலூர் (683), காஞ்சிபுரம் (648) ஆகிய மாவட்டங்களில் கிராம

ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளன. தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை மிகப் பெரிய அளவில் மாறுபடுகிறது. சில ஊராட்சிகளில் மக்கள் தொகை **500–**க்கும் குறைவாகவும், சில ஊராட்சிகளில் **25,000–**க்கு அதிகமாகவும் உள்ளன. இதனை **அட்டவணை–4**ல் காணலாம்.

**அட்டவணை–4**

**மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைபாடு (2001 மக்கள்தொகை கணக்கெடுப்பு)**

| மக்கள்தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 500 க்கு கீழ் | 66 |
| 501 முதல் 1,000 வரை | 1,177 |
| 1,001 முதல் 3,000 வரை | 7,243* |
| 3,001 முதல் 5,000 வரை | 2,569 |
| 5,001 முதல் 10,000 வரை | 1,379 |
| 10,000க்கு மேல் | 186 |
| **மொத்தம்** | **12,620 *** |

*கடலூர் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டு கிராம ஊராட்சிகளையும் சேர்த்து.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், **1994** பிரிவு **110** மற்றும் **111**ன்படி பல்வேறுபட்ட பொதுநலக் கடமைகள் மற்றும் செயல்பாடுகள் கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதால் கிராம ஊராட்சி, மூன்றடுக்கு ஊராட்சிகளில் முதன்மை வகிக்கின்றது. கிராம ஊராட்சிகள் தங்கள் கடமைகளை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக கூடுதல்



அதிகாரங்கள் வழங்க, இந்த அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றது. கிராம ஊராட்சியின் நிதி நிலைமையை உயர்த்தவும் இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை, **500**க்கும் குறைவானதாகவும் **25,000**க்கும் அதிகமானதாகவும் வேறுபட்டு உள்ளதாலும், மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வு மக்கள் தொகையோடு தொடர்புடையதாக உள்ளதாலும், சிறிய கிராம ஊராட்சிகளுக்கு குறைவான மானியமும் பெரிய ஊராட்சிகளுக்கு அதிக மானியமும் கிடைக்கின்றன. பெரிய ஊராட்சிகளின் தேவைகள் அதிகம் இருப்பினும், அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிகளை நிர்வகிப்பதற்கு அவைகளின் பரப்பளவுக்கு தொடர்பில்லாத சில நிலையான செலவினங்கள் உள்ளன. எனவே, ஒரு கிராம ஊராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதி ஆணைய மானியமானது அந்த ஊராட்சியின் மாறிவரும் செலவினங்களுக்கு இணையாக இல்லாவிடினும், நிலையான செலவினங்களை ஈடுகட்டும் அளிவிற்காவது இருக்க வேண்டும். தங்களது மின்சாரக் கட்டணத்தைகூட செலுத்த முடியாத சில கிராம ஊராட்சிகளும் இருந்தன. மேலும், சில கிராம ஊராட்சிகள் தங்களுடைய ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் சம்பளம் கூட குறித்த காலத்தில் வழங்க இயலாத நிலையிலும் இருந்தன.

இவ்வகையான நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கு உதவிடும் வகையில், மாநில நிதி ஆணைய மானியத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை சமன்பாடு நிதியாக ஒதுக்கீடு செய்ய மாநில நிதி ஆணையங்கள் பரிந்துரை செய்தன. ஆனால் சமன்பாடு நிதியை ஒதுக்கீடு செய்வது மாவட்ட ஆட்சியா்களின் விருப்புரிமையின் அடிப்படையில் இருந்ததால் நிதியை பிரித்து வழங்குவதில் ஒரு ஒழுங்குமுறை இல்லாதது கடந்த காலங்களின் அனுபவமாக காண முடிகிறது.

எனவே, அரசு, அரசாணை நிலை எண் 199 நிதி (நிதிக்குழு–IV) துறை நாள் 25.5.2007ன்படி மாநில நிதி ஆணைய மானியத்தில் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்த பட்சமாக ரூ.3 இலட்சத்தினை மக்கள் தொகையைக் கணக்கில் எடுக்காமல் ஒதுக்கீடு செய்தும், மீதம் உள்ள தொகையினை மட்டும் கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து வழங்கவும் ஆணையிட்டுள்ளது. அரசின் இந்த முடிவின் மூலம், கிராம ஊராட்சிகளின் வருவாயில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைக்கவும், அதே சமயம், நலிவுற்ற கிராம ஊராட்சிகள் தன்னளவில் வலுவான நிலையினை மேம்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 119, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி2) துறை, நாள் 26.2.2007ன்படி, 12வது நிதி ஆணைய மானியம் முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கு



வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. **அட்டவணை 5–**ல் இதன் விவரங்களை காணலாம்.

**<u>அட்டவணை–5</u>**

**<u>வரவினத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளின் வகைபாடு</u>**

| வ. எண் | வருவாய் அளவு | குறைந்தபட்ச மாநில நிதிக்குழு மானியம் விடுவிக்கப்படுவதற்கு முன்னா் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை (2003–04 முதல் 2005–06 வரையிலான 3 ஆண்டுகளுக்கான சராசரி வருவாய் அடிப்படையில்) | குறைந்தபட்ச மாநில நிதிக்குழு மானியம் விடுவிக்கப் படுவதற்கு பின்னா் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை (2009–10ம் ஆண்டு வருவாய் அடிப்படையில்) |
|---|---|---|---|
| 1 | ரூ.50,000 வரை | 10 | 0 |
| 2 | ரூ.50,000 முதல் ரூ.1 லட்சம் வரை | 178 | 0 |
| 3 | ரூ.1 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை | 7,422 | 1,021 |
| 4 | ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை | 3,1 81 | 7,146 |
| 5 | ரூ.10 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை | 1,489 | 3,902 |
| 6 | ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை | 252 | 393 |
| 7 | ரூ.50 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை | 60 | 121 |
| 8 | ரூ.1 கோடி முதல் ரூ.3 கோடி வரை | 24 | 32 |
| 9 | ரூ.3 கோடிக்கு மேல் | 2 | 3 |
| மொத்தம் | | 12,618 | 12,618 |

மேற்படி அட்டவணை மூலம், பெரும்பாலான ஊராட்சிகளின் சராசரி வருமானம் உயர்ந்துள்ளது மட்டுமின்றி, பல கிராம ஊராட்சிகளுக்கிடையே இருந்த சமச்சீரற்ற வருவாய் நிலை, இந்த அரசின் நடவடிக்கையால் குறைந்துள்ளது என்பதும் தெரியவருகிறது.

### 2.8.1 கடமைகள்

தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் சட்டம், 1994ன் பிரிவுகள் 110 மற்றும் 111–ல், கிராம ஊாட்சிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி விவரித்துள்ளன. கிராம ஊராட்சிகளின் சில முக்கிய கடமைகளாவன:

அ. ஊராட்சியிலுள்ள அனைத்து கிராமச் சாலைகளையும் அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.

ஆ. வீட்டு மனைப் பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்

இ. கட்டிடம் உள்ள பகுதியில் உள்ள பொது இடங்கள் மற்றும் பொதுச் சாலைகளில் தெருவிளக்குகள் அமைத்தல்.

ஈ. வடிகால்கள் கட்டுதல்.

உ. கிராமங்களிலுள்ள தெருக்களை சுத்தப்படுத்துதல் மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.



ஊ. பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

எ. கிணறுகள், குளங்கள் மற்றும் குட்டைகள் வெட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல். மேலும் குடிநீர் வழங்கும் நீர் நிலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

ஏ. சுடுகாடு மற்றும் இடுகாடுகளைப் பராமரித்தல்.

ஐ. பூங்கா மற்றும் படிப்பகங்களைப் பராமரித்தல்.

ஒ. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துதல்.

ஓ. அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாக வரையறை செய்யப்படும் பிற கடமைகள்.

### 2.8.2 நிதி ஆதாரங்கள்

கிராம ஊராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்களாவன:

#### அ) வரி வருவாய்

மூன்றடுக்கு ஊராட்சிகளில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டும் தான் வரி விதிக்கும் அதிகாரம் உள்ளது. வீட்டு வரி,

தொழில் வரி, விளம்பர வரி ஆகியவை பொதுவாக விதிக்கப்படும் வரிகள்.

**ஆ) வரி அல்லாத வருவாய்**

கட்டிடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம், அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம், குடிநீர் கட்டணம், வண்டி நிலையங்களுக்கான கட்டணம், மீன் பாசி குத்தகை, 2சி மரப்பட்டா, பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளிலிருந்து பெறப்படும் வருமானம், படகுகளிலிருந்து வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை போன்றவைகள் ஆகும்.

**இ) ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்**

கிராம ஊராட்சி உட்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் விடுவிக்கப்படும், மாநில அளவில் ஒருங்கிணைக்கப்படும் முத்திரைத்தாள் மீதான மிகுவரி, கேளிக்கை வரி போன்ற பல்வேறு இனங்கள் இவ்வருவாயில் அடங்கும். இவ்வருவாய், கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மற்ற வருவாய் இனங்களில் சிறு கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100%), குத்தகைத் தொகை (50%), மற்றும் சமூகக்



காடுகளில் உள்ள மரங்களுக்கான ஏலத்தொகை அகியவை அடங்கும்.

**ஈ) மானியம்**

மத்திய நிதி ஆணைய மானியம், மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான மானியம் ஆகியவை.

**2.8.3 நிர்வாக அதிகாரங்கள்**

கிராம ஊராட்சிக்கு கிராம ஊராட்சித் தலைவரே செயல் அலுவலர் ஆவார். தலைவர் மற்றும் துணைத்தலைவர் இருவரும் இணைந்து காசோலை வழங்குவதற்கு கையொப்பமிட வேண்டும். இவர்களுக்கு இடையே சுமூகமான உறவுகள் இல்லையென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் கிராம ஊராட்சியிலுள்ள வேறொரு உறுப்பினரை தலைவருடன் இணைந்து காசோலையில் கையொப்பமிடுவதற்கு நியமிப்பார்.

அரசாணை நிலை எண் 203, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (PRI) துறை நாள் 20.12.2007ன்படி தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பணிகளின் வகை மற்றும் நிலை) விதிகள் 2007–ஐ அரசு கொண்டு வந்தது. அதன்படி கிராம

ஊராட்சிகள் பொது நிதியிலிருந்து ஒரு பணியினை ரூ.2 இலட்சம் வரை மேற்கொள்ள கிராம ஊராட்சியே நிர்வாக அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர், ரூ.1 லட்சம் வரையான பணிகளுக்கு மட்டுமே கிராம ஊராட்சி நிர்வாக அனுமதி வழங்க இயலும். ரூ.2 லட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரையிலான மதிப்புள்ள பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே நிர்வாக அனுமதி வழங்க தகுதிவாய்ந்த அலுவலர் ஆவார். ரூ.50 இலட்சத்துக்கு மேல் உள்ள பணிகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரே நிர்வாக அனுமதி வழங்க தகுதி வாய்ந்த அலுவலர் ஆவார். இருப்பினும், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி தேவையாகும். ரூ.2000/– வரையிலான அவசரப் பணியை ஒரு முறையும், ஒரு ஆண்டில் ரூ.5000/–க்கு மிகாமலும், தொழில் நுட்ப அனுமதி பெறாமல் அவசர பணிகளை மேற்கொள்ள கிராம ஊராட்சிகளுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சித் தலைவர், தனது காசோலை மூலம் ஊராட்சிகள் சில்லரை செலவினம் மேற்கொள்ள ரூ.500/– வரை எடுத்துக் கொள்ளலாம்.

கைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை முறையாக மேற்கொள்ளத் தேவையான அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு ஆண்டில் ஒரு கைப்பம்பு பராமரித்திட ரூ.600/– மற்றும் ஒரு விசைப்பம்பு பராமரித்திட



ரூ.7500/–க்கு மிகாமல் மதிப்பீட்டுக்காகவோ, பட்டியலுக்காகவோ பொறியாளரை அணுகாமல் செலவினம் மேற்கொள்ளலாம். தெருவிளக்கு உபகரணங்களை குறிப்பிட்ட தரத்துடன் ஊராட்சிகளே வாங்கிக்கொள்ளலாம்.

### 2.8.4 உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது

அரசாணை நிலை எண். 111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி2) துறை, நாள் 5.9.2006–ன்படி உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2006–07ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் சிறந்த பூர்வாங்கப் பணிகள், புதுமையான முயற்சிகள் போன்ற இனங்களில் கடந்த 5 ஆண்டுகளில் மிக சிறப்பாக பணியாற்றியுள்ள ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரூ.5 இலட்சத்துக்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழும் பதக்கமும் வழங்கப்படும். விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சியின் தலைவர் மறைவுக்குப் பின்னரும் விருது வழங்கப்படும். 2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளுக்காக 15 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முறையே 10.10.2007 மற்றும் 19.12.2008 அன்று உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்பட்டது. 2008–09ம் ஆண்டுக்கான

உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்காக 15 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

2008–09ஆம் ஆண்டுக்காக உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது பெற தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளின் விபரங்கள் **அட்டவணை–6ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–6**

**2008–09ஆம் ஆண்டுக்கு உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது பெற தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகள்**

| வ. எண். | கிராம ஊராட்சியின் பெயர் |
|---|---|
| 1. | கோட்டவரதம்பட்டி, சேலம். |
| 2. | திருப்பணிச்செட்டிக்குளம், தூத்துக்குடி. |
| 3. | வச்சக்காரன்பட்டி, விருதுநகர். |
| 4. | ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| 5. | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி. |
| 6. | பொம்மநாயக்கன்பாளையம், ஈரோடு |
| 7. | ஒரத்தூர், கடலூர். |
| 8. | குன்னத்தூர், கோயம்புத்தூர். |
| 9. | சோ.குப்பம், ,விழுப்புரம் |
| 10. | பேர்உறட்டி, நீலகிரி. |
| 11. | மேலபெருமலை, திருவாரூர். |
| 12. | அத்தியூர், பெரம்பலூர். |
| 13. | அரியனேந்தல், இராமநாதபுரம் |
| 14. | கலிக்கம்பட்டி , திண்டுக்கல் |
| 15. | பூனப்பள்ளி, கிருஷ்ணகிரி. |



### 2.8.5 சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கான விருது

தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில், பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007-08ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும், இத்தகைய சிறந்த நிறுவனங்களுக்கு விருது வழங்க, அரசாணை எண் 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (மாஅதி 2) துறை, நாள் 02.07.2007ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த விருது, ரூ.5 இலட்சம் ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் கொண்டதாகும். ஒவ்வொரு ஆண்டும், 5 சிறந்த வணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்படும்.

2007–08ம் ஆண்டிற்கு சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் விருதுக்காக 5 நிறுவனங்களையும், 2008–09ம் ஆண்டிற்கு 4 நிறுவனங்களையும் தேர்ந்தெடுத்து அரசு ஆணையிட்டது. 19.10.2009 அன்று மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் விருது வழங்கப்பட்டது. 2009–10ஆம் ஆண்டிற்கு ஐந்து நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2007–08, 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டில் சமூகப் பொறுப்புணர்வு விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட

நிறுவனங்கள் விவரம் **அட்டவணை 7–**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை –7</u>**

**<u>சமூக பொறுப்புணர்வு விருது வழங்கப்பட்ட நிறுவனங்கள்</u>**

| வ எண் | 2007-08 | 2008-09 | 2009-10 |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு காகிதம் மற்றும் செய்தித் தாள் நிறுவனம், கரூர் மாவட்டம். | சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை. | நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், நெய்வேலி, கடலூர் மாவட்டம். |
| 2. | எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம், காரைக்கால், பாண்டிச்சேரி. | ஸ்டில் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட், சேலம். | உறூன்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |
| 3. | சீனிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை, சென்னை. | ஆர்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட், நுங்கம்பாக்கம், சென்னை. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். |
| 4. | செயின்ட் கோபெயன் கிளாஸ் இந்தியா லிமிடெட், ஸ்ரீ பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். | ஸ்ரீ ராமலிங்கா மில்ஸ் லிமிடெட், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | டைட்டான் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 5. | சக்தி மசாலா தனியார் நிறுவனம், ஈரோடு மாவட்டம். | | சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் தனியார் நிறுவனம், சரவணம்பட்டி, கோயம்புத்துார் மாவட்டம். |



### 2.8.6 கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்

கிராம ஊராட்சிக் கணக்குகளை முறைப்படுத்தவும் மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான வழிமுறைகளை நிர்ணயிப்பதற்குமான அரசின் ஆணை, அரசாணை எண்.**92**, ஊரக வளர்ச்சித் துறை, நாள் **26.3.1997**ல் வெளியிடப்பட்டது. இந்த அரசு ஆணை வெளியிட்டது, கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்வதில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய முன்னேற்ற நடவடிக்கையாகும். இதற்கு முன்னர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராம ஊராட்சித் தொகுப்பு நிதி என்கிற முறையில் கிராம ஊராட்சிகளின் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வந்தன. இதன்படி ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் கிராம ஊராட்சிகளில் பல்வேறு கணக்குகளை முன் ஆய்வு செய்த பின்னர்தான் நிதி விடுவிக்கப்படும். இந்த முறை மாற்றப்பட்டு, மேற்காணும் ஆணையின்படி கிராம ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவரும் ஊராட்சிக் கணக்குகளை சுதந்திரமாகப் பராமரிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. இருப்பினும் கிராம ஊராட்சிக் கணக்குகளைப் பராமரிக்கும் இப்புதிய முறையில் சில பலவீனங்கள் கண்டறியப்பட்டன. மாநில நிதி ஆணையத்தின் மானியம் மற்றும் மத்திய நிதி ஆணையத்தின் மானியம், நிபந்தனைகளுக்குட்பட்ட மானிய செலவினத்திற்காக கிராம ஊராட்சிகளுக்கு

விடுவிக்கப்பட்ட மானியம் பல சந்தர்ப்பங்களில் நிலுவையிலுள்ள மின்சாரம் மற்றும் குடிநீர்க் கட்டணங்களுக்கான தொகையினை செலுத்தாமல் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த பணிகளுக்கு செலவிடப்பட்டது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மின் கட்டணம் மற்றும் குடிநீர் பராமரிப்பு செலவினத்திற்குப் பதிலாக முக்கியமல்லாத இனங்களுக்கு செலவு செய்வதைத் தவிர்க்க கிராம ஊராட்சிகளுக்கு நிதி விடுவிப்பதற்கு முன்னர் மாவட்ட அளவிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கான நிலுவைக் கட்டணத் தொகை முழுமையும் நேரடியாக செலுத்திவிட்டு, மீதமுள்ள தொகையினை கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்க அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இந்த நடைமுறையில் கீழ்க்காணும் குறைபாடுகள் ஏற்பட்டன.

அ) மாவட்ட அளவில் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களின் சரிபார்த்தலின்றி தொகை செலுத்தப்படுவதால் பல சந்தர்ப்பங்களில் தமிழ்நாடு மின்சார வாரியம் அளித்த தவறான / இரட்டிப்பான பட்டியலுக்கும் தொகை விடுவிக்கப்பட்டுள்ளன.

ஆ) கிராம ஊராட்சித் தலைவர்கள் மின்சாரம் / குடிநீர் பட்டியலுக்காகத் தொகையினைத்



தாங்களாகவே நேரடியாக செலுத்தாத காரணத்தால் ஊராட்சியின் மின் கட்டணங்களைக் குறைத்திடும் வகையில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் திட்டப் பணிகளுக்கான நிதியையும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான தொகையினையும், பணியினை அளவு மற்றும் மேலளவு செய்யாமலும், பட்டியல்களை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அவர்களின் ஒப்புதல் பெறாமலும், காசோலையை விடுவித்தது பல சந்தர்ப்பங்களில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஊராட்சித் தேர்தலுக்கு முன்னர் அதிக அளவில், அனுமதியின்றி பணம் எடுத்த நிகழ்வுகளும் உள்ளன. எனவே கிராம ஊராட்சிக் கணக்குகளை மேலும் முறைப்படுத்தவும், மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான வழிமுறைகளை நெறிப்படுத்துவதற்குமான அரசின் ஆணை, அரசாணை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17.8.2007ல் வெளியிடப்பட்டது.

இந்த அரசாணையில்,

அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய தொகையினை கிராம ஊராட்சித் தலைவர்கள் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள நிதியிலிருந்து செலுத்த

அதிகாரமளித்தும் மற்றும் அதே சமயத்தில் அதிக முக்கியமல்லாத செலவினத்திற்கு செலவிடத் தடை விதித்தும்;

ஆ) சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஒப்புதல் இல்லாமல் திட்ட நிதி / தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதிக் கணக்குத் தொகையினை எடுப்பதைத் தவிர்த்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 178, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 25.11.2008 மற்றும் அரசாணை (நிலை) எண் 180, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 01.12.2008 ஆகியவற்றின் மூலம், கிராம ஊராட்சிக் கணக்குகளை பராமரிப்பதில் கூடுதல் நெறிமுறைகளை வெளியிட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்திய அரசின் ஊராட்சித் துறை அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்படும் கிராம ஊராட்சிகளுக்கான ஒரே சீரான கணக்கீட்டு முறையை எல்லா மாநிலங்களிலும் திணிக்கும் முயற்சியை எதிர்க்கும் நிலைப்பாட்டை தமிழ் நாடு அரசு எடுத்துள்ளது. இந்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு முறை மிகவும் சிக்கலானதாகவும், எளிதில் புரிந்துகொள்ள முடியாததாகவும், கணக்கு பராமரிப்பில் அனுபவம் பெற்ற அலுவலர்களால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியதாகவும்



உள்ளது. இந்த பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு முறை நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை. உதாரணமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் குறிப்பாக கிராம ஊராட்சியில் உள்ள பணியாளர்களின் கல்வித்தகுதி மற்றும் இதர திறன்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் ஊராட்சி மன்றத் தலைவர்களே அந்தந்த கிராம ஊராட்சிக்கு செயல் அதிகாரம் பெற்றவர்கள் ஆவர். ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவருக்கும் உதவி செய்ய ஒரு ஊராட்சி உதவியாளரும் ஒரு மக்கள் நலப் பணியாளரும் உள்ளனர். ஆனால் இவர்கள் இருவருமே பொதுவாக பள்ளி இறுதி வரையே படித்தவராக உள்ளனர். மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு முறை அவர்களுக்கு மிகவும் கடினமானதாகவும், மேற்கண்ட கணக்கீட்டு முறையை ஏற்று செயல்படுத்துவதால் அதற்குண்டான பயன்கள் இல்லாத நிலையே உள்ளது. தமிழ்நாட்டில் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வரும் கணக்கீட்டு முறை எளிதாகவும் பராமரிப்புக்கு ஏற்றதாகவும், அதிகமான மாநிலத்திட்டங்களை செயல்படுத்துகின்ற ஒரு மாநிலத்திற்கு ஏற்ற கணக்கீட்டு முறையாகவும் உள்ளது என்ற நிலைப்பாட்டை தமிழக அரசு உறுதியாக எடுத்துரைத்துள்ளது. எந்தவொரு ‘முன்மாதிரி மற்றும் சிறந்த உதாரணங்களை’ வரவேற்கும் அதே சமயத்தில், ஒரே சீரான கணக்கீட்டு முறையைப் புகுத்துதலை தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது.

### 2.8.7 ஜமாபந்தி முறையை நீக்குதல்

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் இல்லாத போது, ஊராட்சி நிர்வாகம் தனி அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த நிலையில், ஊராட்சி கணக்குகளை ஆண்டுதோறும் தீர்வு செய்யும் முறை 1992ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 73வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆகியவற்றின் தொடர்ச்சியாக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 1996ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பின்னர், உள்ளாட்சி நிதி செலவினங்களை கண்காணிக்கும் வகையில் நிர்வாகமுறை வலுப்பெற்றுள்ளது. மேலும், கிராம ஊராட்சிக் கணக்குகளை தணிக்கை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தணிக்கை அலுவலர்களாக அமர்த்தப்பட்டனர். கிராம ஊராட்சி கணக்குகளை தணிக்கை செய்வதை கண்காணிக்கவும், தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்யவும் அதன் முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும் உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிராம ஊராட்சிக் கணக்குகளை சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராமசபை விளங்கி வருகிறது. இந்நிலையில், அலுவலர்களால் ஆண்டுதோறும் கிராம ஊராட்சிக் கணக்குகளை தீர்வு செய்யும் முறையால் ஊராட்சிகளின்



சீரிய நிர்வாகத்திற்கு எந்த பங்களிப்பும் இருக்காது என்பதுடன் இந்நடைமுறை ஒரு வழக்கமான சடங்காகவே இருப்பதைக் காணமுடிந்தது. எனவே, அரசாணை எண் 175, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா2) துறை, நாள் 14.11.2008ன் மூலம், ஊராட்சிக் கணக்குகளை ஆண்டு தோறும் தீர்வு செய்யும் முறையை நீக்கம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

### 2.8.8 கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி

வட்டார வளர்ச்சி அலுவலர்களும் கிராம ஊராட்சித் தலைவர்களும் அடிக்கடி தொடர்பு கொள்வது அவசியமாகிறது என்ற சூழ்நிலையில் பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் தொலைபேசி இணைப்பு இல்லாமல் இருப்பது திட்டங்களை செயல்படுத்துவதிலும், ஊராட்சிகளை நிர்வாகம் செய்வதிலும் பெரிய தடையாக உள்ளது. எனவே, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒரு தொலைபேசி இணைப்பு வைத்துக் கொள்ளவும், தொலைபேசி மாதாந்திரக் கட்டணம் ரூ.750/– என வரையறை செய்தும் அரசாணை எண்.118, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 02.07.2007–ல் வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,620 கிராம ஊராட்சிகளில், இதுவரை 12,572 கிராம ஊராட்சிகளில் தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 48 கிராம ஊராட்சிகளுக்கு மட்டும் புவியியல் சார்ந்த பிரச்னைகளின் காரணமாக தொலைபேசி இணைப்புகள் வழங்க

இயலவில்லை. தொலைபேசி இணைப்பு கிடைக்கப்பெற்ற கிராம ஊராட்சிகள் , டயல்–அப் இணைப்பு மூலம் இணையதள வசதியைப்பெற வழி வகை உள்ளது.

### 2.8.9 தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான பிரச்னைகள்

தெருவிளக்குகள் பராமரிப்பு மற்றும் குடிநீர் வழுங்கல் ஆகியவற்றைப் பராமரிக்கும் இரண்டு பெரிய பொறுப்புகளையும் கிராம ஊராட்சிகள் மேற்கொண்டுள்ளன. வருவாயில் ஏறக்குறைய 70 சதவீதத் தொகை மின் கட்டணம் செலுத்துவதற்கு செலவிடப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் முறையாக மீட்டர் அளவுகள் செய்யாமல் வணிக ரீதியில் மின் கட்டணம் வசூலிக்கிறது என்றும், 45 நாட்களுக்கு மேல் கட்டணம் செலுத்தாமல் நிலுவையிலுள்ள தொகைக்கு 12 சதவீத வட்டி வசூலிப்பதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கான மதிப்பீட்டை தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களிடமிருந்து பெறுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதும் கண்டறியப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கிராம ஊராட்சிகளிடையே நிலவி வந்த நெடுநாள் பிரச்னைகளைத் தீர்வு செய்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

கிராம ஊராட்சிகளால் தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மின் இணைப்புகளுக்கான மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு



ரூ.3.40/–லிருந்து ரூ.3–ஆகக் குறைத்து, அரசாணை எண்.95, எரிசக்தி(டி2) துறை, நாள் 12.10.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் புதிய தெரு விளக்குகள் அமைக்க, கம்பம் ஒன்றுக்கு ரூ.9,500/– என ஒரே வகை கட்டணம் நிர்ணயித்து, அரசாணை எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 26.6.2007ல் வெளியிட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் மின் கட்டணத்தை செலுத்துவதற்கான கால அளவு தற்போதைய கால அளவான 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் 60 நாட்களுக்கு மேல் செலுத்தாமல் நிலுவையிலுள்ள மின் கட்டணத் தொகைக்கு விதிக்கப்படும் வட்டிவீதம் 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 13.3.2007க்கு முந்தைய காலத்திற்கான அபராதத் தொகை ரூ.18.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அரசின் அறிவுறுத்தலின்படி, கிராம ஊராட்சிகளில் இதுவரை மீட்டர் பொருத்தப்படாத அனைத்து இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தவும், பழுதடைந்த மீட்டர்களை மாற்றவும் தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஊரகப் பகுதியிலுள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் மீட்டர் அட்டை வழங்கியுள்ளது. ஆரம்ப மற்றும் இறுதியான மீட்டர் அளவின் அடிப்படையிலேயே மின்சார வாரியம் மின் கட்டணம் கேட்பு செய்யவேண்டும் என

தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவை இல்லை என்பதை உறுதி செய்யும் வகையில், நிலுவை முழுவதும் செலுத்தப்பட்ட நிகழ்வுகளில் “இந்த இணைப்புக்கு............ தேதிய நிலையில் நிலுவைத் தொகை ஏதும் இல்லை.” என மீட்டர் அட்டையில் பதிவு செய்யத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.8.10 கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த ஊராட்சித் தலைவர்களை பொறுப்பாக்குதல்

கிராம ஊராட்சிகள் தங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுடன் மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டப் பணிகளையும் செயல்படுத்தி வருகின்றன. இருப்பினும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் திட்டங்களை செயல்படுத்தவோ அல்லது மேற்கொள்ளவோ கிராம ஊராட்சித் தலைவரைக் கோருவதற்கு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தெளிவான வழிவகைகள் ஏதும் இல்லை. எனவே 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 46–ல் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் திட்டங்களை செயல்படுத்த அல்லது மேற்கொள்ள கிராம ஊராட்சித்



தலைவரைக் கட்டாயப் பொறுப்பாக்கி உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### 2.8.11 தண்டக் கட்டணங்களை அதிகரித்தல்

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி, பிறப்பிக்கப்படும் ஆணைகளை மீறுபவர்கள் அல்லது வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளை மீறுபவர்களுக்கு விதிக்கக் கூடிய அபராதத் தொகை, மேற்காணும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பட்டியல் 2ல் கொடுக்கப்பட்டுள்ளது. பட்டியல் 3–ல், தொடர் மீறுகைகளுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அபராதத் தொகைகள் 50 ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டதால், அதனுடைய முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. எனவே, பட்டியல்கள் 2 மற்றும் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத் தொகைகள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிவகைகளை முறையாக நடைமுறைப்படுத்தி கண்காணிக்கவும், மீறுபவர்களிடமிருந்து அதிகமான தண்டத் தொகையை வசூல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**2.8.12 கல்வி நிறுவனங்களுக்கு வீட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்ததை வரையறை செய்தல்**

மூன்றாவது மாநில நிதிக் குழு, பள்ளிகள், கல்லூரிகள், சுயநிதி பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள், பகுதி மருத்துவ நிறுவனங்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், பயிற்சி மையங்கள் போன்ற கல்வி கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள், வீட்டு வரி செலுத்த வேண்டும் என பரிந்துரை செய்திருந்தது. அரசு, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் இப்பரிந்துரையினை ஏற்று, தமிழ்நாடு ஊராட்சிகள் (வரி நிர்ணயம் மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999-க்கு, அரசாணை (நிலை) எண். 38, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.1) துறை, நாள் 05.03.2008-ல் உரிய திருத்தங்கள் வெளியிட்டது. இதன் மூலம், கிராம ஊராட்சிகள், சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் கட்டடங்களுக்கு வீட்டு வரி நிர்ணயித்து வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு உதவி பெறாத சுயநிதி பாடப்பிரிவுகளை நடத்தும் அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்களுக்கும் இது பொருந்தும்.



**2.8.13 விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூல் செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்குதல்**

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (விளம்பரப் பலகைகளுக்கான உரிமம் வழங்குதல், விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூல் செய்தல்) விதிகளின் முந்தைய வழிவகைகளின்படி ஊரக பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவுவதற்கு உரிமம் வழங்கவும் மற்றும் அவ்வாறான விளம்பர பலகைகளில் உள்ள விளம்பரங்களுக்கு வரி விதித்தல் மற்றும் வசூல் செய்யும் அதிகாரம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் செயல் அலுவலருக்கு (கிராம ஊராட்சித் தலைவருக்கு) வழங்கப்பட்டிருந்தது. ஆனால், நகர்ப்புற பகுதிகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித்தலைவரே உரிமம் வழங்கும் அதிகாரியாக உள்ளார். மேலும், விளம்பர பலகைகள் நிறுவுதல் குறித்த சட்ட வழிவகைகளை வலுவுடன் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் கிராம ஊராட்சிகளால் இயலாத நிலை இருந்தது.

ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகளுக்கான உரிமம் வழங்குவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்தவும், விளம்பர பலகைகள் நிறுவுதலை கண்காணிக்கவும், நகர்ப்புற சட்டத்திற்கு இணையாக, விளம்பர பலகை நிறுவ உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதிப்பு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்கி,

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 172–A, 172–B மற்றும் 220ஆம் பிரிவின் உட்பிரிவு (2), (3) மற்றும் (5)ல் உரிய சட்டத்திருத்தம் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்திருத்தம் கொண்டு வந்ததன் விளைவாக, முந்தைய விதிகள் நீக்கப்பட்டு 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (விளம்பர பலகைகளுக்கான உரிமம் வழங்குதல், விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூல் செய்தல்) விதிகள் அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.8.14 கட்டட விதிகளின் கீழ் விலக்களித்தல்

நகர்ப்புறங்களுக்கான கட்டட விதிகளில் வழிவகை செய்துள்ளவாறு, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு சொந்தமான சில கட்டடங்களுக்கு விதிவிலக்களித்தல் போன்ற வழிவகைகளை 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகளுக்கும் கொண்டுவரும் வகையில், அரசு 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகளில் உரிய திருத்தங்கள் செய்துள்ளது. இதன்படி, மத்திய மற்றும் மாநில அரசுகளின் கட்டடங்கள் மற்றும் சட்ட விதிகளின்படி கட்டப்படும் சில கட்டடங்களுக்கும் 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகளின் கீழ் விலக்களிப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.



### 2.8.15 தலவரி மற்றும் தலமேல் வரிவிதிப்பு நீக்கம்

2009–10ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது அரசு, விவசாயிகளின் மீது மேலும் வரி சுமையை ஏற்றாமல் தற்போதுள்ள தலவரி மற்றும் தலமேல் வரிவசூல் முறையானது எளிதாக மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்தது. அரசின் மேற்கண்ட இந்த முடிவின்படி தலவரி மற்றும் தலமேல் வரி விதிப்பதை நீக்கம் செய்வது அவசியமானது. இதனை செயல் படுத்தும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல், பிரிவு 167, 168, 169, 176, 186(பி) மற்றும் 188 (டி) ஆகிய பிரிவுகள், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் எண்.12ன் வாயிலாக திருத்தியமைக்கப்பட்டு, தலவரி மற்றும் தலமேல் வரி விதிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.

### 2.8.16 குளம் குட்டை பராமரிப்பு

பாரம்பரியமாக, கிராம குட்டைகள் கிராம ஊராட்சிகளால் பராமரிக்கப்படும். சிறு பாசன குளங்கள் (100 ஏக்கருக்கும் குறைவான பாசன வசதி கொண்டவைகள்) ஊராட்சி ஒன்றியங்களாலும் பராமரிக்கப்பட்டு வந்தன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 110 (ஜி)–ன் படி, குட்டைகள் மற்றும் குளங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய இரண்டு பணிகளும் கிராம ஊராட்சிகளின் கடமையாக வரையறுக்கப்பட்டுள்ளது ஒரு முரண்பாடாகும்.

எனவே, இந்த முரண்பாட்டினை சட்டப்படி சரிசெய்யும் வகையில், குட்டைகளை பராமரித்திடும் பணியினை கிராம ஊராட்சிகளுக்கு சட்டரீதியாக ஒப்படைத்திடவும், சிறுபாசன குளங்களை பராமரித்திடும் பணியினை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைத்திடும் வகையிலும், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவுகள் 110 (ஜி) மற்றும் 112 (ஏஏ) ஆகியவற்றிற்கு 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்ட எண் 28ல் உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

## 2.9 ஊராட்சி ஒன்றியக் குழு

இடைநிலை அளவில் தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்) உள்ளன. ஒரு மாவட்டத்தில் சராசரியாக 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டம் 4 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட சிறிய மாவட்டமாகவும், விழுப்புரம் 22 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட பெரிய மாவட்டமாகவும் உள்ளது.

### 2.9.1 பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ல் பிரிவு 112, ஊராட்சி ஒன்றியக் குழுவின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வரையறுத்துள்ளது. முக்கியமான சில பொறுப்புகளாவன:



அ. ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.

ஆ. குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மற்றும் துணி துவைப்பதற்கும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல்.

இ. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்

ஈ. ஊராட்சி ஒன்றியத்தால் வகைப்படுத்தப்பட்ட பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்துதல்

உ. ஊராட்சி ஒன்றியப் பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

ஊ. மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்துதல்.

எ. தொற்று நோய் அல்லது மலேரியா குறித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

### 2.9.2 நிதி ஆதாரங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் வரிகள் ஏதும் விதிக்க இயலாது. ஊராட்சி ஒன்றியத்திற்கான வருவாய் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அ. வரி அல்லாத வருவாய்கள்

உரிமக் கட்டணம், சந்தைக் கட்டணம், வாடகை மற்றும் சொத்துகளில் இருந்து கிடைக்கும் வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தொகை.

ஆ. ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்கள்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்களான, முத்திரை தாள் மீதான வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவை மாநில நிதி ஆணைய மான்ய அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்படுகின்றன. சுரங்கம் மற்றும் கனிமங்கள் மீதான குத்தகைத் தொகை (50 சதவீத பங்கு) நேரிடையாக ஊராட்சி ஒன்றியத்திற்கு மாவட்ட அளவிலேயே சரி செய்யப்படுகின்றன.

இ. மானியங்கள்

மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களுக்கான மானியங்கள், மகப்பேறு நிலையங்கள் மற்றும் ஊரக மருந்தகங்களுக்கான மானியம்.

அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 20.12.2007ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும்



பணிகள் வகை மற்றும் நிலை) விதிகள் 2007 நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி உயர் அலுவலர்களின் ஒப்புதலின்றி, ரூ.10 இலட்சத்திற்கு மிகாத பணிகளுக்கு, ஊராட்சி ஒன்றிய குழுவே பொதுநிதியிலிருந்து அனுமதியளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் ரூ.5 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு மட்டுமே நிர்வாக அனுமதியளிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ரூ.10 இலட்சத்திற்கு மேலும் ரூ.50 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரே தகுதியுள்ள அலுவலராவார். ரூ.50 இலட்சத்திற்கு மேலான பணிகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரே நிர்வாக அனுமதியளிக்க தகுதியுள்ள அலுவலராவார். இருப்பினும், மத்திய மற்றும் மாநில அரசு திட்டப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.

### 2.9.3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி

2007–08ம் ஆண்டில் 24 மாவட்டங்களில் உள்ள வாகனங்கள் மற்றும் வட்டார அலுவலகங்களில் கம்பியில்லாத் தகவல் தொடர்புக்கான உபகரணங்கள் அமைக்க அனுமதித்து அரசாணை எண். 134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.தி.4), நாள் 02.08.2007–ல் ஆணை வெளியிட்டு, ரூ 3.76 கோடி நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. மீதமுள்ள மாவட்டங்களிலும்

கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி வருங்காலங்களில் செய்து தரப்படும். அரசாணை (நிலை) எண்.177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி 4) துறை, நாள் 21.11.2008ல், ரூ116.55 இலட்சம் செலவில் 2008– 09ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களுக்கும் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதியை ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

### 2.9.4 ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களுக்கு வாகனங்கள் வழங்குதல்

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட மூன்றாவது உயர் நிலை குழு, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது போல திட்டப் பணிகளை பார்வையிடும் பொருட்டு ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களுக்கும், தனி வாகனங்கள் வழங்க பரிந்துரை செய்தது. அதனடிப்படையில், 2008–09ஆம் ஆண்டில், 385 ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களுக்கு புது வாகனங்கள் வழங்கவும், 385 ஓட்டுநர் பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கவும், 16.4.2008 அன்று சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, 385 வாகனங்கள் வாங்கப்பட்டு, 28.07.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 385 ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், அரசாணை நிலை எண் 67, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்



12.05.2008ல் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களின் வாகனங்களுக்கு 385 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணையிடப்பட்டது.

### 2.9.5 திருத்தியமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு

ஊராட்சி ஒன்றிய நியமனக் குழுவிற்கான உறுப்பினரை தேர்வு செய்ய ஆண்டு தோறும் தேர்தல் நடத்தும் முந்தைய முறை சீரான நிர்வாகத்திற்கு உகந்தததாக இருக்கவில்லை. நியமனக்குழு தொடர்ந்து செயல்படவும், குழு உறுப்பினர்களில் ஒரு புதிய உறுப்பினரை ஆண்டு தோறும் தேர்வு செய்வதை தவிர்க்கவும், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 96 (1) (அ)ல் நியமனக் குழுவில், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவரையும் ஒரு உறுப்பினராக்கி திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின்படி, மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நியமனக் குழு, ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர், துணைத் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

## 2.10 மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

### 2.10.1 பொறுப்புகள்

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகள் பெரும்பாலும் ஆலோசனைகள் வழங்குவதாகவே உள்ளன. அவையாவன,

அ. மாவட்டத்திற்கான வளர்ச்சி திட்டத்தை தயாரித்தல்.

ஆ. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிர்வாக அறிக்கையை ஒருங்கிணைத்து மாவட்டத்தின் ஆண்டு அறிக்கையை தயாரித்தல்.

இ. விவசாயம், நில மேம்பாடு, கால்நடை, பால் உற்பத்தி, கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் ஊரகத் தொழில்கள் போன்றவற்றை திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

ஈ. ஊரகக் குடியிருப்பு திட்டங்களை குறிப்பாக ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் குடியிருப்புகளுக்கான திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

உ. பெரிய அளவிலான குடிநீர் திட்டங்களை கண்டறிதல்.



### 2.10.2 நிதி ஆதாரங்கள்

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் இல்லை. சட்டப்படியான மாநில நிதி ஆணைய மானியம் மற்றும் மத்திய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் வளர்ச்சி மானியம் மட்டுமே இதன் நிதி ஆதாரமாகும்.

அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20.12.2007ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், மற்றும் பணிகளின் வகை மற்றும் நிலை) விதிகள், 2007 இயற்றப்பட்டது. அதன்படி ரூ.20 இலட்சம் மதிப்புள்ள ஒவ்வொரு பணிக்கும் உயர் அலுவலர்களின் அனுமதியின்றி, பொது நிதியிலிருந்து மாவட்ட ஊராட்சியே நிர்வாக அனுமதி வழங்க மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் ரூ.10 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கே மாவட்ட ஊராட்சி, நிர்வாக அனுமதி வழங்க இயலும். ரூ.20 இலட்சத்திற்கு மேலும் ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே நிர்வாக அனுமதி வழங்க தகுதி வாய்ந்த அலுவலராவார். ரூ.50 லட்சம் மதிப்புக்கு மேற்பட்ட பணிகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரே நிர்வாக அனுமதியளிக்க தகுதி வாய்ந்த அலுவலராவார். இருப்பினும், மத்திய மற்றும் மாநில திட்டப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.

## 2.11 ஒப்படைக்கப்பட்ட வருவாய்

முத்திரைத்தாள் மிகு வரி, கேளிக்கைவரி, சுரங்கம் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகைவரி, சமூகக் காடுகளிலிருந்து பெறப்படும் வருவாய் ஆகியவை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பெருமளவிலான ஒப்படைக்கப்பட்ட/ பகிர்ந்தளிக்கப்படும் வருவாய் இனங்களாகும். இவ்வாறு உள்ளாட்சிகளுக்கு கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆண்டுக்கு சுமார் ரூ. 250 – 350 கோடி ஆகும். தலவரி என்பது நிலவரிக்கு ஏற்ப அதன் தொகை 2006–07 வரை கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்பட்டு வந்தது. 2006–07–ம் ஆண்டு வரை வசூலிக்கப்பட்ட நில வரி வருவாய்க்கேற்ப தல வரியானது கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களுக்கான தல மேல் வரியானது 2006–07–ம் ஆண்டு வரை வசூலிக்கப்பட்ட நில வரி வருவாயில் 5 மடங்கு முதல் 10 மடங்கு வரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவு வைக்கப்பட்டது. முத்திரைத்தாள் தீர்வை மீதான மிகு வரியானது ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு நில வரி வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு பிரித்து வழங்கப்பட்டது. கேளிக்கை வரி கிராம ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியங்களுக்கு இடையே 70 : 30 என்ற விகிதத்தில் பிரிக்கப்பட்டு அத்தொகையில் 10% வசூல் கட்டணம் பிடித்தம் செய்த பின் வழங்கப்பட்டு வந்தது. சுரங்கம் மற்றும் கனிம வளங்களுக்கான உரிமக் கட்டணம்



கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்படுகிறது. மேலும் குத்தகை தொடர்பான வருவாயில் 50% ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 50% கிராம ஊராட்சிகளுக்கும் ஈடு செய்யப்படுகிறது. சமூகக் காடுகளிலிருந்து பெறப்படும் வருவாயில் 60% கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. வனத்துறை 40%-ஐ தன்வசம் வைத்துக்கொள்கிறது.

ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவு வைப்பதில் மிகவும் காலதாமதம் ஆவதாக தெரிய வந்ததுடன் தொகையினைப் பிரித்து வழங்குவதில் அதிக வேலைப்பளுவும் இருந்தன. அரசு வருவாயை பிரித்து வழங்குவதில் பெருமளவு ஏற்றத்தாழ்வு இருந்தது.

எனவே கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் இதுபோன்று பெறப்படும் பெருமளவு வருமானங்களை ஒருங்கிணைத்து சமச்சீராக பகிர்ந்தளிக்கவும், வேலைப்பளுவைக் குறைக்கவும் ஏதுவாக அரசாணை எண். 168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 04.10.2007–ன் படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு சேர வேண்டிய ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான தலவரி, தலமேல்வரி, கேளிக்கை வரி, முத்திரைத்தாள் கட்டணம் இவைகளிலிருந்து பெறப்படும்

வருவாய் அனைத்தும் மாநில அளவில் ஒருங்கிணைத்து, பின்னர், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதனால், ஒருங்கிணைக்கப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட வருவாயினை சமச்சீரான முறையிலும், விரைவாகவும், எளிதாகவும் பகிர்ந்தளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.12 மாநில நிதி ஆணைய மானியம்

மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்யப்படுகிறது. மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில சொந்த வருவாயில் பெரும்பங்கான 9% ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2007–08 மற்றும் 2008–09ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. (2006–07 வரை 8% ஆக இருந்தது). 2009–10ம் ஆண்டிற்கு மாநில சொந்த வரி வருவாயிலிருந்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 9.5% ஆக உயர்த்தி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் காலம் (2007–08 முதல் 2011–12 வரை) முடிவுறும் முன்பு மாநில நிதியின் உள் பங்கீடு 10% ஆக வளர்ச்சியடையும். இதில் ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கீடு முன்பு இருந்ததைப்போல் 58:42 என்ற விகிதத்தில்



வழங்கப்படும். கிராம ஊராட்சிகள் அடிப்படை பணிகளுக்காக ஊரக சாலைகள் பராமரிப்பு, தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம் மற்றும் திடக் கழிவு மேலாண்மை ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், கிராம ஊராட்சிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளதாலும் (12,620) மேற்கண்ட மாநில நிதி ஆணைய மானியம் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2007–08 முதல் 60:32:8 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. மேற்படி நிதி ஆதாரங்களை பிரித்து வழங்குவதால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் கீழ்மட்ட அளவில் அனைத்து நலப் பணிகளும் மேற்கொள்ள ஏதுவாக உள்ளது.

2006–07ஆம் ஆண்டு முதல் 2009–10ஆம் ஆண்டு வரையிலான ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக்குழு மானியம் கீழ்காணும் **அட்டவணை 8**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை–8
## ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதி ஆணைய மானியம்

| வருடம் | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதி ஆணைய மானியம் (ரூபாய் கோடியில்) | முந்தைய ஆண்டினைக் காட்டிலும் கூடுதல் | |
|---|---|---|---|
| | | தொகை (ரூபாய் கோடியில்) | கூடுதல் சதவீதம் |
| 2006–07 | 1,224.76 | 230.00 | 23.1 |
| 2007–08 | 1,583.58 | 358.82 | 29.3 |
| 2008–09 | 1,716.44 | 132.86 | 8.4 |
| 2009–10 | 1,926.57 | 210.13 | 12.2 |

### 2.12.1 மாநில நிதி ஆணைய மானியத்தினை விடுவிப்பதில் ஒருங்கிணைந்த முறையினை பின்பற்றுதல்

மாநில நிதி ஆணைய மானியமானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்கத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட வங்கிகள் மூலம் மின் அஞ்சல் வழியாக அனுப்பப்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்படி நிதியினை, கிராம ஊராட்சிகளுக்கு, ஒருங்கிணைக்கப்பட்ட வங்கி முறை, உரிய காலத்தில் பணப்பரிமாற்றம், வங்கி வரைவுகள் போன்ற பல்வேறு முறைகளைப் பின்பற்றி ஈடு செய்து வந்தனர். ஒரே சீரான முறை அல்லாமல் பல்வேறு வழிமுறைகளின்படி நிதி ஈடு செய்வதில் தாமதங்கள் நிலவி வந்தன. இத்தகைய இடர்பாடுகளை தவிர்க்கும் பொருட்டு,



டிசம்பர், 2008 முதல் ஒரே சீரான முறையில் நிதியினை அனுப்பிட ஒவ்வொரு மாவட்டத்திலும் 4 பிரதான தொடர்பு வங்கிகள் மூலம் கிராம ஊராட்சிகளின் வங்கி கணக்குகளுக்கு ஈடு செய்ய வழிவகை செய்யப்பட்டது. இந்நடைமுறையால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஈடுசெய்யப்படுவது துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

### 2.13 மத்திய நிதி ஆணைய மானியம்

12வது நிதி ஆணைய பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு 2005–06 முதல் 2009–10ம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.870 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

2007–08ம் ஆண்டிற்கான 12வது நிதி ஆணைய நிதியினை மக்கள் தொகை அடிப்படையில் முழுமையாக கிராம ஊராட்சிகளுக்கு மட்டும் பிரித்தளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இந்த நிதி, கிராம ஊராட்சிகளில் குடிநீர், தெருவிளக்கு மற்றும் சுகாதார வசதிகளை பராமரித்திட பயன்படுத்தப்பட வேண்டும். 2008–09ம் ஆண்டிலும், இந்த மானியம், கிராம ஊராட்சிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டது.

2009–10ஆம் ஆண்டில் 174 கோடி ரூபாய் 12வது நிதி ஆணைய மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.14 ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு படிகளை உயர்த்தி வழங்குதல்

கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஒன்றியக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு நிரந்தர பயணப்படி வழங்க அரசாணை எண்.262, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.12.1997–ன் படி அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. 1999ம் ஆண்டு மேலும் 10 சதவீதம் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. அதன்பின் நிரந்தரப்பயணப் படி திருத்தப்படவில்லை. அரசாணை எண்.569, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, நாள் 28.9.2007ன்படி ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான நிரந்தர பயணப்படியினை அரசு உயர்த்தியுள்ளது. முன்னர் வழங்கப்பட்ட நிரந்தரப் பயணப்படி மற்றும் உயர்த்தப்பட்ட நிரந்தரப் பயணப்படி விவரங்கள் கீழே **அட்டவணை–9–ல்** குறிப்பிடப்பட்டுள்ளது.



**அட்டவணை–9**

**ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான**

**மாதாந்திர நிரந்தர பயணப்படி**

| வ. எண். | அலுவலகம் / பதவியின் பெயர் | முன்னர் வழங்கப்பட்ட மாதாந்திர நிரந்தர பயணப்படி (ரூ.) | திருத்தப்பட்ட மாதாந்திர நிரந்தர பயணப்படி (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சித்தலைவர் | 330 | 500 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 550 | 750 |
| 3 | ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் | 220 | 400 |
| 4 | மாவட்ட ஊராட்சித் தலைவர் | 1,100 | 1,500 |
| 5 | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 330 | 500 |

## 2.15 உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்

ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களின் மண்டல மாநாட்டில் ஊராட்சித் தலைவர்கள் அளித்த கோரிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஊராட்சித்

தலைவர்களுக்கு அடையாளஅட்டை வழங்கப்படும் என அறிவித்து, பின்னர் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

## 2.16 உள்ளாட்சிகள் தினம்

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகள் மக்களுடன் மிக அதிகத் தொடர்பு கொண்ட அமைப்புகளாகும். இந்தத் தொடர்பினை மேலும் வலுவூட்டி உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவு மறைவற்ற மற்றும் வெளிப்படையான நிலையினை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதே சமயத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளை மக்கள் அறியச் செய்யவும், திட்டங்கள் செயலாக்கம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்தவும் வேண்டியுள்ளது. ஒரு ஆண்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தை 'உள்ளாட்சிகள் தினம்' என கடைபிடிப்பது, இவ்வகை நடவடிக்கைகளில் ஒன்றாகும். இக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.632, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (சி1) துறை, நாள் 26.10.2007–ல், நவம்பர் 1–ஆம் தேதியினை உள்ளாட்சிகள் தினமாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்



ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது. நாட்டிலேயே தமிழகம் தான் இத்தினத்தைக் கொண்டாடும் முதல் மாநிலம் ஆகும்.

## 2.17 பிற துறைகள் பயன்படுத்தும் கட்டடங்களுக்கான மின் வசதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாட்டிற்கு மட்டுமின்றி பல்வேறு பிற துறைகளின் பயன்பாட்டிற்கும் பல்வேறு வகையான கட்டடங்களை கட்டி வருகிறது. 'உபயோகிப்பவரே தொகையை செலுத்த வேண்டும்' என்ற அடிப்படையில் இந்த கட்டடங்களைப் பயன்படுத்தும் துறைகளே மின்சாரக் கட்டணங்களை செலுத்த வேண்டும். ஆனால் இந்தக் கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு சொந்தமாக இருந்ததால் இந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தும் துறைகளால் தங்களது பெயரில் மின்சார இணைப்பு பெற இயலாத நிலை இருந்தது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில், அரசாணை எண் 206, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (எஸ்ஜிஎஸ்–1) துறை, நாள் 31.12.2007–ன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்கள் மூலம் பிற துறைகளுக்காகக் கட்டப்பட்ட கட்டடங்களில் அத்துறைகளே மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் விண்ணப்பிக்க வழிவகை செய்தும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு

எந்தவித நிதிப் பொறுப்புமின்றி மின் கட்டணத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு செலுத்தவும் “மறுப்பேதும் இல்லை” சான்றினை அரசு வழங்கியுள்ளது.

### 2.18 உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் நிலையான பதவிக்காலம்

நியாயமற்ற, அற்ப காரணங்களுக்காக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிராக அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வருவதால், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் திட்டமிடுதலையும், திட்டங்கள் செயலாக்கத்தையும் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் பொது நலனுக்கு ஊறு விளைவிப்பதாகவும் உள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கும், நிறைவேற்றுவதற்குமான வழிமுறைகளை கடுமையாக்க ஏதுவாக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தேவையான திருத்தம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய கிராம ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதி என்பதை குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போது மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கிராம ஊராட்சித் துணைத் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவருக்கு எதிராக அவர் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளோ, பதவிக்காலம் முடியும் இறுதி ஆண்டிலோ எந்த ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வர இயலாது என வரையறுக்கப்பட்டுள்ளது.



### 2.19 ஊராட்சிகளின் செயல்பாடு தொடர்பான ஆண்டறிக்கை

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில், ஏற்கனவே இருந்த பிரிவு 165ன்படி ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் தங்களுடைய முந்தைய வருட செயல்பாடுகள் குறித்து ஆண்டு அறிக்கை ஒன்றை தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட அனைத்து அறிக்கைகளையும், அரசு சட்டப் பேரவையின் முன் வைக்கும். இருப்பினும், மாவட்ட ஊராட்சிகளின் அறிக்கைகள் ஊராட்சி அமைப்பின் செயல்பாடுகளை முழுமையாக பிரதிபலிப்பதில்லை. எனவே, பிரிவு 165(2) நீக்கப்பட்டு, பழைய முறைக்குப்பதிலாக மாநிலத்திற்கு முழுமையாக ஒரு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கும் முறையை புதிய பிரிவு 166A-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. ‘தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கை’ 2006–07, 2007–08 மற்றும் 2008–09ஆகிய ஆண்டுகளுக்கு

ஏற்கனவே தமிழ்நாடு சட்டப் பேரவை முன் வைக்கப்பட்டுவிட்டது. 2009–10ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை ஏப்ரல் 2010ல் சட்டபேரவையின் முன் வைக்கப்படும்.

## 2.20 கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பழுதான கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தப் படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்.

கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால், பள்ளிக் கட்டடங்கள், சமையலறைக் கூடங்கள், நூலக கட்டடங்கள், சுகாதார வளாகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், கிராம ஊராட்சி அலுவலகங்கள், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் போன்ற பல்வேறு கட்டடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. காலப் போக்கினாலும், பல்வேறு சூழ்நிலைகள் காரணமாகவும், சில கட்டடங்கள் சேதமடைந்து விட்ட நிலையில், பாதுகாப்பு கருதி, அவற்றை இடித்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு சொந்தமான சேதமடைந்த கட்டடங்களை இடிப்பதற்கு, குறிப்பிட்ட வழிமுறைகள் மற்றும் தெளிவான அதிகார வரம்புகள் நிர்ணயிக்கப்படவில்லை. எனவே, அரசாணை எண் 56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி –IV) துறை, நாள்



3.4.2008ல், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மிகவும் பழுதடைந்த கட்டிடங்களை இடிப்பது குறித்த விரிவான வழிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது.

## 2.21 நான்காவது மாநில நிதி ஆணையம் அமைத்தல்

அரசாணை (நிலை) எண்.549, நிதி (நிதி ஆணையம்–IV) துறை, நாள் 01.12.2009–ல் அரசு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை ஆய்வு செய்யும் வகையில் நான்காவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்துள்ளது. இந்த ஆணையம், பின்வருபவை குறித்து பரிந்துரை செய்ய வேண்டும்-

அ) நிர்ணயிக்கும் கொள்கைகளாக அமைய வேண்டியவைகள் –

(i) மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை, மாநில அரசுக்கும் மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில்

மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவ்வவற்றுக்குரிய பங்குகளை பிரித்தளித்தல்;

(ii) மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படக் கூடிய அல்லது அவைகளே தக்க வைத்துக்கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றைத் தீர்மானித்தல்;

(iii) மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி மானியங்கள்,

(ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் ஏனைய மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரிவீத அமைப்பைக் கருத்தில் கொண்டு, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்கு இயலும் புதிய வாய்ப்புகள் குறித்த கருத்துக்கள்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆய்வு செய்யும்போது, ஆணையம், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மார்ச் 31, 2010–ல் உள்ளவாறு மதிப்பீடு செய்ய வேண்டும். 2012ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து



தொடங்கும் ஐந்தாண்டுகளுக்குப் பொருந்தும் வகையில், ஆணையம், 2011ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் தேதிக்குள் தனது அறிக்கையை அளித்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 3. பணியமைப்பு

### 3.1 மக்கள் நலப் பணியாளர்களுக்கு கால முறை ஊதியம் அனுமதித்தல்

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்கள் தொகுப்பூதியமாக மாதம் ரூபாய் 950/– மற்றும் போக்குவரத்து படியாக ரூபாய் 50/–ம் பெற்றுவந்தனர். அரசாணை நிலை எண். 234 நிதி (சம்பளப் பிரிவு) துறை நாள். 1.6.2009ல் மக்கள் நலப் பணியாளர்களின் ஊதியம் 1.6.2009 முதல் ரூபாய் 2,500–5000 மற்றும் தர ஊதியமாக ரூபாய் 500/– என்ற சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

### 3.2 ஊராட்சி உதவியாளர்கள் நிலை – II பணியிடங்களை ஊராட்சி உதவியாளர்களாக நிலை உயர்த்துதல்.

2006–07க்கு முன், ஊராட்சி உதவியாளர்கள் இரண்டு பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டனர்: i) முழு நேர ஊராட்சி உதவியாளர்கள்(ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1

எனவும் அழைக்கப்பட்டனர்) ii) பகுதி நேர ஊராட்சி எழுத்தர்கள்(ஊராட்சி உதவியாளர்கள் நிலை–2 எனவும் அழைக்கப்பட்டனர்). 12,618 ஊராட்சி உதவியாளர்களில் ஏறத்தாழ 11,000 ஊராட்சி உதவியாளர்கள் நிலை – 2 வகையில் இருந்தனர். 1.9.2006க்கு முன்னர் இந்த இரண்டு வகை ஊராட்சி உதவியாளர்கள் தொகுப்புதியம் பெற்று வந்தனர். 1.9.2006 முதல் முழு நேர ஊராட்சி உதவியாளர்களுக்கு ரூ.1,300 – 20 – 1,500 – 25 – 2,000 என்ற ஊதிய விகிதமும் பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களுக்கு ரூ. 625 – 10 – 725 – 20 – 925 என்ற ஊதிய விகிதமும் நிர்ணயம் செய்யப்பட்டது. ஊராட்சி உதவியாளர்கள் நிலை –1 ஊதிய விகிதத்தினை ரூ.2,500 – 5,000 மற்றும் தர ஊதியம் ரூ.500 எனவும் அரசாணை நிலை எண் 234 நிதி (ஊ.கு) துறை நாள் 1.6.2009ன்படி மாற்றியமைத்து உத்திரவிடப்பட்டது. ஊராட்சி உதவியாளர் நிலை–2 பெற்றுவந்த ரூ.625–925 என்ற ஊதிய விகிதம் ரூ.1,300 – 2,000 மற்றும் தர ஊதியம் ரூ.300 என 1.9.2006 முதல் மாற்றியமைக்கப்பட்டது. ஊராட்சி உதவியாளர்கள் நிலை – 1 மற்றும் ஊராட்சி உதவியாளர்கள் நிலை – 2 ஆகியோர் மேற்கொண்டு வந்த பணி ஒரே மாதிரியாக இருந்த காரணத்தினால், அனைத்து ஊராட்சி உதவியாளர்கள் நிலை – 2 பணியிடங்களையும் ஊராட்சி உதவியாளர் நிலை – 1க்கு இணையாக உயர்த்தி, ஊராட்சி உதவியாளர்கள் நிலை – 2ன் ஊதிய விகிதத்தினையும் ரூ.2,500–5,000 மற்றும் தர ஊதியம் ரூ.500 என அரசாணை



நிலை எண். 91 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5)துறை நாள்.12.8.2009ன்படி அரசு நிர்ணயம் செய்து உத்திரவிட்டது.

### 3.3 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைத்தல்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைக்கும் பணி நீண்டகாலமாக பல்வேறு காரணங்களால் நிலுவையில் இருந்தது. முதலாவதாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மாற்றி அமைக்கப்படுவதற்கு முன்பாக இருந்த அலுவலர் அமைப்பு இன்று நடைமுறையில் இல்லாத அன்றைய காலக்கட்டத்தில் இருந்த திட்டங்களை பிரதிபலிக்கும் வண்ணம் இருந்தது. இரண்டாவதாக, மாவட்டங்களை பிரித்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும்போது உதவி திட்ட அலுவலர் நிலையிலான பணியிடங்கள் மாவட்டங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டதால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலர் அமைப்பில் சீரற்ற நிலை நிலவியது. இதனால் ஊரக வளர்ச்சி முகமைகளின் பணியாளர் அமைப்பினை மாற்றியமைப்பது அவசியமாயிற்று. மூன்றாவதாக, சார்நிலை பணியாளர் அமைப்பிலும் மாவட்டங்களிடையே வேறுபட்ட நிலை காணப்பட்டது. இந்த முந்தைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக பணியமைப்பினால் நிர்வாக சிரமங்கள் ஏற்பட்டன. நான்காவதாக, பிற துறைகளிலிருந்து அயற்பணியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் பணியாளர்கள் நிரப்பப்பட்டதில் பொருத்தமற்ற நிலையும்,

பிறதுறை பணியாளர்களை அயற்பணியில் பெறுவதில் நிரந்தரமான சிரமம் நிலவியது. ஐந்தாவதாக, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஊரக உட்கட்டமைப்புகள் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், சமத்துவபுரம் போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் மாநில அரசின் நிதியில் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கான தொகை ஒதுக்கீடு மிகவும் அதிகரித்தது. இதனால் இத்துறைக்கு கூடுதல் கண்காணிப்பு பணியிடங்களை உருவாக்குதல் அவசியமானது. ஆறாவதாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியிடங்கள் அயற்பணியில் நிரப்பப்படாமல் தொடர்ந்து காலியாக இருந்த காரணத்தால் ஊதிய இனங்களில் ஒதுக்கீடுக்கேற்ப செலவினங்கள் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டு மத்திய அரசால் வழங்கப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக நிதி ஒதுக்கீட்டில் நிதி குறைப்பு ஏற்ப்பட்டது.

மத்திய அரசால் வெளியிடப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கான நிர்வாக திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைத்து தமிழ்நாடு அரசால் அரசாணை (நிலை) எண். 53 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–2) துறை நாள். 19.6.2009ல் ஆணை வெளியிடப்பட்டது. உதவி திட்டஅலுவலர் (ஆர்), உதவி திட்டஅலுவலர் (வேலை உறுதியளிப்பு திட்டம்), உதவி



திட்டஅலுவலர் (டோக்ரா), உதவி திட்டஅலுவலர் (தொழில்கள்), உதவி திட்டஅலுவலர் (கால்நடை), உதவி திட்டஅலுவலர் (கூட்டுறவு), உதவி திட்டஅலுவலர் (கணிப்பாய்வு) ஆகிய பணியிடங்கள் நீக்கம் செய்யப்பட்டு, பிற பணியிடங்களுள் உதவி திட்டஅலுவலர் (ஊதிய வேலைவாய்ப்பு ) , உதவி திட்டஅலுவலர் (உட்கட்டமைப்பு), உதவி திட்டஅலுவலர் (சுயவேலைவாய்ப்பு), உதவி திட்டஅலுவலர் (வீட்டுவசதி மற்றும் சுகாதாரம்) ஆகிய புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்பொழுது 36 உதவி திட்டஅலுவலர் (ஊதிய வேலைவாய்ப்பு), 60 உதவி திட்டஅலுவலர் (உட்கட்டமைப்பு), 31 உதவி திட்டஅலுவலர் (சுய வேலைவாய்ப்பு) மற்றும் 31 உதவி திட்டஅலுவலர் (வீட்டுவசதி மற்றும் சுகாதாரம்) ஆகிய பணியிடங்கள் உள்ளன.

### 3.3.1 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் குறித்து தமிழ்நாட்டின் நிலைப்பாடு

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை நீக்கம் செய்து, அவைகள் மூலம் தற்போது பல்வேறு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தும் நடைமுறையை மாற்றி அவைகளை மாவட்ட ஊராட்சிகளிடம் ஒப்படைப்பது குறித்து மத்திய அரசு மாநில அரசின் கருத்துகளை கேட்டது. இது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு பாரத பிரதமருக்கு முகவரியிட்ட தனது

நே.மு.கடித எண். 17098/மஅதி II/2004 நாள்.19.9.09ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

“இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 243G-ன்படி ஒவ்வொரு அடுக்கு ஊராட்சிக்கும் வழங்கப்பட வேண்டிய அதிகாரப் பகிர்வு மற்றும் கடமைகள் குறித்து முடிவெடுப்பது மாநில சட்டமன்றம் சமந்தப்பட்டது, வரலாற்றின்படி, 1961–ல் மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட நாள் முதல், தமிழ்நாடு ஆற்றல் மிகுந்த கிராம ஊராட்சிகளையும் வட்டார ஊராட்சிகளையும் கொண்டுள்ளதோடு, மாவட்ட அளவில் திட்டமிடல் மற்றும் ஆலோசனை வழங்குதல் தொடர்பாக மாவட்ட வளர்ச்சி குழுமங்களையும் கொண்டுள்ளது. 73 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்ட பிறகு– கிராம ஊராட்சிகளையும் வட்டார ஊராட்சிகளையும் மேலும் ஆற்றல் மிகுந்ததாக மாற்றி அமைக்கும் அதே வேளையில்– மாவட்ட அளவில் தற்போது திட்டமிடல் மற்றும் ஆலோசனை வழங்குதல் என்ற நிலையையே தொடர்ந்து செயல்படுத்தவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு செயலாக்க கடமைகள் எதுவும் இல்லை என்ற நடைமுறை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 163–ன்படி கொண்டு வரப்பட்டது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மாவட்ட ஊராட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டாலோ அல்லது மாவட்ட ஊராட்சிகளுடன் இணைக்கப்பட்டாலோ, இது தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட ஊராட்சிகளின் சட்டத்துக்கு இணங்கிய தன்மையையே மாற்றிவிடுவது மற்றுமின்றி



மாவட்ட ஊராட்சிகளுக்கு செயலாக்க அதிகாரத்தையும் அளிக்கும் நிலையை ஏற்படுத்தும். இது தமிழ்நாடு சட்ட மன்றத்தின் நோக்கத்திற்கு எதிர்மறையானதாகவும் அமையும். மேலும், கடந்த முப்பது ஆண்டுகளாக வேகமாகவும் திறம்படவும் செயல்பட்டு கொண்டிருக்கும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை கலைப்பதினால், வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதில் தொய்வு ஏற்படும். மாவட்ட ஊராட்சிகள் அரசியலை சார்ந்தது என்பதால் அவைகள் அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக செயல் இழக்கவும் நேரிடும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் என்பதால் தமிழ்நாட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் அரசியலிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்வதற்க்கான காரணங்களில் இது ஒன்றாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி ‘உள்ளூர் அரசாங்கம்’ மாநிலப் பொருள் இவ்வாறு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை கலைத்து அல்லது அவைகளை மாவட்ட ஊராட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல் தொடர்பாக எந்த ஒரு செயல் ஆணையையும் வெளியிடக்கூடாது என தமிழ்நாடு அரசு திடமாக இந்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

## 3.4 தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாளர்கள்

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (NREGS) தமிழ்நாட்டில், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் 2.2.06 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக 1.4.2007 முதல் தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன் 1.4.2008 முதல் எஞ்சியுள்ள 20 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முறையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக பல்வேறு தொழில்நுட்ப பணியாளர்களையும் மற்ற பிற பணியாளர்களையும் அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது. தகவல் மேலாண்மை அமைப்பில் பதிவுகள் செய்வதை உறுதி செய்யும் பொருட்டு 2009–10ம் ஆண்டில் அரசாணை (நிலை ) எண். 84 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை நாள்.4.8.09ல் அரசு கூடுதலாக 572 கணினி உதவியாளர் பணியிடங்களை தோற்றுவித்து ஆணையிட்டுள்ளது. மேலும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட தேசிய ஊரக வேலை உறுதி திட்ட துணைக் கோட்டங்களுக்கு 32 உதவி செயற் பொறியாளர் பணியிடங்களையும் அரசு தோற்றுவித்து ஆணையிட்டுள்ளது. பதவி வாரியாக அனுமதிக்கப்பட்ட



பணியிடங்களின் எண்ணிக்கை **அட்டவணை–10ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 10**

**மாவட்டங்களில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணிகளை கண்காணிக்க அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்**

| வ. எண். | பணியிடங்களின் வகை | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. நிர்வாகப் பிரிவு: | | |
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் கண்காணிப்பாளர்கள் | 31 |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 385 |
| 3. | உதவியாளர்கள் | 416 |
| 4. | கணிணி உதவியாளர்கள் | 1,373 |
| 5. | ஓட்டுநர்கள் | 32 |
| 6. | அலுவலக உதவியாளர்கள் | 32 |
| ஆ. தொழில் நுட்பப் பிரிவு | | |
| 1. | உதவி செயற் பொறியாளர்கள் (ஊ.வ) | 32 |
| 2. | உதவிப் பொறியாளர்கள் (ஊ.வ) | 244 |
| 3. | பணி மேற்பார்வையாளர்கள் | 673 |
| 4. | இளநிலை வரைவு அலுவலர்கள் | 32 |
| | மொத்தம் | 3,250 |

அரசாணை நிலை எண் 164 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை நாள் 21.10.2008 ல் மாநில தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அமைப்பு கீழ்கண்டவாறு **அட்டவணை – 11 ல்** குறிப்பிடப்படுகிறது.

**அட்டவணை – 11**

**மாநில தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பிரிவுக்கென அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்**

| வ. எண். | பணியிடங்களின் வகை | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. தொழில் நுட்ப பிரிவு | | |
| 1. | செயற் பொறியாளர் | 1 |
| 2. | உதவி செயற் பொறியாளர் | 1 |
| 3. | உதவிப் பொறியாளர்கள் | 4 |
| 4. | இளநிலை வரைவு அலுவலர் | 1 |
| ஆ. சமூக தணிக்கைப் பிரிவு | | |
| 1. | உதவி இயக்குநர்கள் | 2 |
| இ. மேலாண்மை தகவல் திட்ட மற்றும் ஆவணப் பிரிவு | | |
| 1. | மேலாண்மை தகவல் திட்ட வல்லுநர்கள் | 2* |

* ரூபாய் 50,000/– மாத செலவிற்குட்பட்டு, 2 அல்லது அதற்கு மேற்பட்ட வல்லுநர்களை வெளி நிறுவனங்கள் மூலம் பணி நியமனம் செய்யலாம்.



**3.5 பொறியியல் பணியமைப்பினை சீரமைத்தல் :**

1960 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறை மாற்றியமைக்கப்பட்டு 'நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை' (நெ.&ஊ.ப) என பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், நெடுஞ்சாலைத் துறை பணிகளுடன் கூடுதலாக ஊரக வளர்ச்சித் துறை பணிகளையும் மேற்கொள்ள ஒரு செயல் ஆணை மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது,. டிசம்பர் 1996 வரை, மற்ற பணியிடங்களுடன் 53 உதவி கோட்டப் பொறியாளர்கள் மற்றும் 384 ஒன்றியப் பொறியாளர் பணியிடங்கள் ஊரக வளர்ச்சித் துறையால் ஒப்பளிக்கப்பட்டதுடன், இப்பணியிடங்கள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறையால் நிரப்பட்டதுடன் அவர்களுடைய ஊதியங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் உள்ள கணக்குத் தலைப்புகளில் வழங்கப்பட்டன.

பொறியியல் துறை பணியாளர்களின் பணிமாறுதல் மற்றும் இடமாற்றம் ஆகியவை முதன்மைப் பொறியாளர் (நெ.&ஊ.ப) /கோட்டப் பொறியாளர் (நெ.&ஊ.ப) ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழும், ஊரக வளர்ச்சித் துறை திட்டங்களை செயல்படுத்துவதற்கான பொறுப்புகள் ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டுவரப்பட்டதால் பொறியியல் பணியாளர்கள் 'இருமுகக் கட்டுப்பாட்டின்' கீழ்

பணிபுரியும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்த அமைப்பு அதிருப்தி அளிப்பதாக இருந்தது. மேலும் 1980 மற்றும் 1990 ம் ஆண்டுகளில் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பல மடங்கு அதிகரிக்கப்பட்டு பெரிய அளவில் தொகை செலவிடக்கூடிய துறைகளில் ஒன்றாக– நெடுஞ்சாலைத் துறையினை காட்டிலும்– ஊரக வளர்ச்சித் துறை உருவாக்கப்பட்டதுடன், கூடுதலான தொழில் நுட்பப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டதுடன், ஊரக வளர்ச்சித் துறைக்கென ஒரு தனிப்பட்ட, முழுமையான பொறியியல் பிரிவும் ஏற்படுத்தவும் தேவைப்பட்டது.

ஊரக வளர்ச்சித் துறைக்கென முழுமையான பொறியியல் பிரிவு ஏற்படுத்துவதற்காக முதற்கட்டமாக அரசு ஊரக வளர்ச்சித் துறையில் 384 உதவிப் பொறியாளர்கள் கூடுதல் பணியிடங்கள், 15 உதவி செயற்பொறியாளர் கூடுதல் பணியிடங்கள், மாவட்ட அளவிலான 28 செயற்பொறியாளர் பணியிடங்கள் மற்றும் முதன்மை பொறியாளர் அதிகாரத்துடன் கூடிய ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் ஆகியவற்றை அரசாணை எண். 263, ஊரக வளர்ச்சித் துறை நாள் 27.12.1996ல் ஒப்பளிப்பு செய்துள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையிலுள்ள அனைத்து பொறியியல் பணியிடங்களின் தொழில்நுட்ப கட்டுப்பாட்டினையும்– முந்தைய மற்றும் புதிய –



கண்காணிப்புப் பொறியாளரின்(ஊ.வ) கீழ் கொண்டுவருவது அடுத்தபடியாகும். இதற்கென சென்னை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல்) சட்டங்கள் 1963 ன்படி நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறையின் பொறியாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கட்டுப்பாடுகள், அரசாணை எண். 79 ஊரக வளர்ச்சி (மாஅ.தி–1) துறை நாள் 20.03.1997 ல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் (வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல்) சட்டங்கள் 1997 ன்படி கைக்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர்களுக்கான தற்காலிக பணி விதிகள் அரசாணை எண். 15, ஊரக வளர்ச்சித் துறை நாள் 25.01.2000–ல், கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகியோருக்கு 25.05.1998 முதலும், உதவிப்பொறியாளர்களுக்கு 26.09.1997 முதலும் முன் தேதியிட்டு உருவாக்கப்பட்டன. முதுநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கான தற்காலிக பணி விதிகள் அரசாணை எண். 71, ஊரக வளர்ச்சி (இ4) துறை, நாள் 20.03.2000 மற்றும் பணிப்பார்வையாளர் /இளநிலை வரைதொழில் அலுவலர்கள்

மற்றும் சாலை ஆய்வாளர்கள் ஆகியோருக்கான தற்காலிக பணி விதிகள் அரசாணை எண். 70, ஊரக வளர்ச்சி (இ4) துறை, நாள் 20.03.2000 ஆகிய அரசாணைகள் மூலம் உருவாக்கப்பட்டன. ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலை & ஊரகப் பணிகள் துறைகளின் பொறியியல் பிரிவுகளை இறுதியாகவும் முழுமையாகவும் பிரித்து அரசாணை எண். 253 ஊரக வளர்ச்சித் துறை நாள் 28.09.2001ல் ஆணையிடப்பட்டது.

இதற்கிடையே, ஊரக வளர்ச்சித் துறையில் 200 உதவிப்பொறியாளர் காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் மூலம் நிரப்ப செப்டம்பர் 1997 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறை அறிவிக்கை வெளியிட்டு, முதல் அணி 1998 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டது. 223 உதவிப் பொறியாளர்களைக் கொண்ட 2வது அணி 2006–07 ஆம் ஆண்டிலும், 253 உதவிப் பொறியாளர்களைக் கொண்ட 3வது அணி 2007–08 ஆம் ஆண்டிலும் தேர்வு செய்யப்பட்டது. 2008–09 மற்றும் 2009–10ம் ஆண்டுகளுக்கு முறையே 71 மற்றும் 106 (மொத்தம் 177) உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பணி விதிகளின் அடிப்படையில், தகுதியான 245 உதவிப் பொறியாளர்கள்(ஊ.வ) உதவி செயற்பொறியாளர்களாக(ஊ.வ) பதவி உயர்வு அளிக்கப்பட்டதுடன், தகுதியான 46 உதவி



செயற்பொறியாளர்கள்(ஊ.வ) செயற்பொறியாளர்கள்(ஊ.வ) ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்டனர். தகுதியான 146 பணிமேற்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்கள் ஆகியோருக்கு உதவிப் பொறியாளர் (ஊ.வ) / இளநிலைப் பொறியாளர் (ஊ.வ) ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்டது. பணி விதிகளின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தற்சமயம் பணி மேற்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்கள் மற்றும் சாலை ஆய்வாளர்களையும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக தேர்வு செய்து வருகிறது. 1,398 பணிப் பார்வையாளர்கள் / இளநிலை வரைவு தொழில் அலுவலர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் புதிதாக உருவாக்கப்பட்ட 709 பணியிடங்களும் அடங்கும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் உள்ள தொழில் நுட்பப் பிரிவு 2006–07 மற்றும் 2009–10ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் முற்றிலுமாக சீரமைக்கப்பட்டது. முன்பு செயற்பொறியாளர் (ஊவ) நிலை பணியிடங்கள் 28ஆக இருந்ததை 46 என உயர்த்தப்பட்டது. முன்பு 68ஆக இருந்த தொழில் நுட்ப உட்கோட்டங்கள் 100 ஆக 2007–08ம் ஆண்டில் உயர்த்தப்பட்டது மற்றும் 2006–07ம் ஆண்டில் 125 என இருந்த உதவி செயற்பொறியாளர்களின் மொத்த எண்ணிக்கை 2009–10ம் ஆண்டில் 228 ஆக உயர்த்தப்பட்டது. ஒரு வட்டாரத்தில்

இரண்டு உதவிப் பொறியாளர்கள் (ஊவ) / இளநிலை பொறியாளர்களே முன்பு இருந்தனர். இவ்வாறு ஒரு வட்டாரத்திற்கு இரண்டு உதவிப் பொறியாளர்கள் (ஊவ) / இளநிலை பொறியாளர்கள் என்று இருந்த அமைப்பு 2007–08ம் ஆண்டில் மறு நிர்ணயம் செய்யப்பட்டு சராசரியாக 17 கிராம ஊராட்சிகளுக்கு ஒரு உதவிப் பொறியாளர் (ஊவ) / இளநிலை பொறியாளர் என மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு தற்போது ஒரு வட்டாரத்தில் உள்ள உதவிப் பொறியாளர் (ஊவ) / இளநிலை பொறியாளரின் பணியிடங்களின் எண்ணிக்கை 2 முதல் 4 வரை உள்ளது. 2006–07ல் 896 என இருந்த உதவிப் பொறியாளர் (ஊவ) / இளநிலை பொறியாளர் பணியிடங்கள் 2009–10ம் ஆண்டில் 1,253 ஆக உயர்ந்துள்ளது. முன்பு, மாவட்டங்களில் ஒரு வட்டாரத்தில் இரண்டு பணிப்பார்வையாளர்களே இருந்தனர். கூடுதல் பணிச்சுமையின் காரணமாக இந்த எண்ணிக்கை 2007–08ம் ஆண்டில் மறு நிர்ணயம் செய்யப்பட்டு சராசரியாக 9 கிராம ஊராட்சிகளுக்கு ஒரு பணிப்பார்வையாளர் என மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு தற்போது ஒரு வட்டாரத்தில் பணிப்பார்வையாளர் பணியிடங்களின் எண்ணிக்கை 2 முதல் 8 வரை உள்ளது. 2006–07ல் 768என இருந்த பணிப்பார்வையாளர் பணியிடங்கள் 2009–10ம் ஆண்டில் 1,441 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பல்வேறு பிற துறைகளில் இருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மாற்றுப்பணியில் பணிபுரிந்து



இத்துறையில் நிரந்தரமாக ஈர்த்துக்கொள்ளப்படக் கோரி தொடரப்பட்ட பல்வேறு நீதிப்பேராணை மனுக்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ஆதரவாகவும் மனுதாரர்களுக்கு எதிராகவும் சென்னை உயர்நீதி மன்றத்தால் கடந்த மூன்று ஆண்டுகளில் தீர்ப்பு வழங்கப்பட்டது. சென்னை உயர்நீதி மன்றம், நீதிப் பேராணை மனு எண். 19401 முதல் 19410 /2004 வரை மற்றும் பல்வேறு வழக்குகளில் 29.01.2007 அன்று வழங்கிய தீர்ப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் தங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஈர்த்துக்கொள்ளக்கோரிய விண்ணப்பித்தனை ரத்து செய்ததுடன் உச்ச நீதிமன்ற வழக்குகளில் வழங்கப்பட்ட பல்வேறு தீர்ப்புகளையும் எடுத்துக் காட்டி மேற்படி நீதிப்பேராணை மனுக்கள் அனைத்தையும் தகுதியற்றவை என தள்ளுபடி செய்தது. இதேபோன்று, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை ஆகிய பிற தொழில் நுட்ப துறைகளில் இருந்து மாற்றுப் பணியில் பணிபுரிந்த பொறியாளர்கள் தங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தங்களை நிரந்தரமாக ஈர்த்துக் கொள்ள தொடர்ந்த நீதிப்பேராணை மனு எண்.23072, 28434, 24453/04 மற்றும் பல்வேறு நீதிப்பேராணை மனுக்களையும் சென்னை உயர்நீதிமன்றம் தனது 13.02.2009ம் நாளய தீர்ப்பில் சட்டப்படியான காரணங்களையும் பல்வேறு உச்ச நீதிமன்ற வழக்குகளில்

வழங்கப்பட்ட தீர்ப்புகளையும் எடுத்துக் காட்டி தகுதியற்றவை என தள்ளுபடி செய்தது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியுரிந்த தொழில்நுட்ப உதவியாளர்கள், தங்களை நிரந்தர பணி மேற்பார்வையாளர்களாக பணியமர்த்தக் கோரி தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுக்கள் அனைத்தையும் மேதகு சென்னை உயர்நீதி மன்றம் 8.7.2008 அன்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பினை மேதகு உயர்நீதி மன்றத்தின் இரு நீதிபகதிகளைக் கொண்ட அமர்வு உறுதி செய்து, ஒப்பந்த அடிப்படைப் பணியாளர்களுக்கு நிரந்தரப்பணி பெற எவ்வித உரிமையிடத இல்லை என்று ஆணையிட்டது.

**3.6 உதவி செயற்பொறியாளர் (ஊவ – பிஎம்ஜிஎஸ்ஒய்) மற்றும் உதவி செயற் பொறியாளர் (ஊவ– குடிநீர் விநியோகம்) ஆகிய பணியிடங்களை உதவி செயற் பொறியாளர் (ஊவ–சாலைகள் மற்றும் பாலங்கள்) என மாற்றியமைத்தல்**

சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவைகளின் தொழில்நுட்ப கண்காணிப்பினை வலுவூட்டவும் மற்றும் செயற்பொறியாளர் (ஊவ) மற்றும் கண்காணிப்பு பொறியாளர் (ஊவ) ஆகிய அலுவலகங்களின் தொழில்நுட்ப பிரிவினை வலுப்படுத்தவும்



உதவி செயற்பொறியாளர் (ஊவ – பிஎம்ஜிஎஸ்ஒய்) மற்றும் உதவி செயற் பொறியாளர் (ஊவ–குடிநீர் விநியோகம்) ஆகிய பணியிடங்களை உதவி செயற் பொறியாளர் (ஊவ–சாலைகள் மற்றும் பாலங்கள்) என மாற்றியமைத்து அரசு அரசாணை நிலை எண் 67 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா அ தி – 3) துறை நாள் 20.07.2009 இல் ஆணையிட்டுள்ளது.

**3.7 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு நிலையிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்புதல்**

இந்த அரசு மே, 2006–ல் பொறுப்பேற்ற போது திட்டங்களை செயல்படுத்துவதில் மிகுந்த பாதிப்புகள் ஏற்படக்கூடிய அளவுக்கு பல்வேறு நிலைகளில் ஏராளமான பணியிடங்கள் காலியாக இருந்தன. உதவி இயக்குநர் நிலையிலிருந்து அதற்கு கீழுள்ள அனைத்து நிலைப் பணியிடங்களையும் பூர்த்தி செய்திட இந்த அரசு ஆணையிட்டது. மொத்தமுள்ள 17,819 காலியிடங்களில் உதவி இயக்குநர்கள், உதவிப் பொறியாளர்கள், இளநிலை வரைவு அலுவலர்கள், பணிப்பார்வையாளர்கள், சாலை ஆய்வாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், ஓட்டுநர்கள் , அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவுக் காவலர்கள் என 13 வகையான பணியிடங்களில் 17,503

நபர்கள் பல்வேறு தேர்வுகள் மூலம் பணிமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள காலி பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும்.

தற்போது ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கென, பிற பதவிகளுடன் 17 கூடுதல் இயக்குநர் பணியிடங்கள், 77 இணை இயக்குநர் பணியிடங்கள் மற்றும் 399 உதவி இயக்குநர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பிற பதவிகளுடன் ஒரு கண்காணிப்பு பொறியாளர்(ஊ வ) பணியிடம், 46 செயற்பொறியாளர் (ஊ வ) பணியிடங்கள், 228 உதவி செயற்பொறியாளர்(ஊவ) பணியிடங்கள் , 1,253 உதவிப்பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் பணியிடங்கள், 29 முதுநிலை வரைவு அலுவலர், 1,438 பணிமேற்பார்வையாளர் , 161 இளநிலை வரைவு அலுவலர் மற்றும் 1,128 சாலை மேற்பார்வையாளர் பணியிடங்கள் ஊரக வளர்ச்சிக்கென அனுமதிக்கப்பட்டுள்ளன.

## 4. மத்திய அரசுத் திட்டங்கள்

### 4.1 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தனித்திட்டமாக 1997–98 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதி



திராவிடர்கள், பழங்குடியினர் கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டிதருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயானிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டின் குறைந்தபட்சம் 60 சதவிகிதம், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்கு பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 சதவிகித ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினனைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற நபர்களுக்கு ஒதுக்கப்படும். மேற்கண்ட இனங்களில் 3 சதவிகிதமானது உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியவருக்கு ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளில் 15 சதவிகிதம் சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமெனவும் மாநிலங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகள் மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 75: 25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

#### 4.1.1 புதிய வீடுகள்

1.4.2005 முதல் சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.25,000/- எனவும் கடினவகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.27,500/- எனவும் மத்திய அரசால் அலகுத்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி, 2008ல் நடைபெற்ற வரவு செலவு திட்ட அறிக்கையில் மத்திய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில் இத்தொகையை ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.10,000/– மற்றும் 11,000/- ஆக உயர்த்தி சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.35,000/- எனவும் கடின வகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ.38,500/– நிர்ணயிக்கப்பட்டது. மேலும் தமிழக அரசு ஒவ்வொரு வீட்டிற்கும் கான்கிரீட் கூரை அமைப்பதற்கு கூடுதல் நிதி வழங்குகிறது. 2006–07 முதல் புதிய வீடு ஒன்றுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்கான மான்யத்தினை ரூ.9000/- லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தி மாநில அரசு வழங்கியது எனினும், இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான கட்டுமானப்பொருள்களின் விலையேற்றத்தை கருத்தில் கொண்டு 1.4.2008 முதல் மாநில அரசால் வழங்கப்படும் கான்கிரீட் மேற்கூரை மான்யம் அரசாணை எண் 91 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை நாள் 6.6.2008ன்படி ரூ. 12,000/- லிருந்து ரூ.20,000/– ஆக மாநில அரசு உயர்த்தியுள்ளது. இது மத்திய அரசால் உயர்த்தி அறிவிக்கப்பட்ட அலகு தொகையுடன் சேர்த்து உயர்த்தி



வழங்கப்படுகிறது. இதனால் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான மதிப்பீடு ரூ.37,000/– மற்றும் ரூ.39,500/– லிருந்து ரூ. 55,000/– மற்றும் ரூ. 58,500/– என முறையே சாதாரண மண் வகைக்கும் கடின மண் வகைக்கும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

பிப்ரவரி 2010ல் நடைபெற்ற வரவு செலவு திட்ட அறிக்கையில் மத்திய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.10,000/– அலகுத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது. 2010–11லிருந்து இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகளுக்கான மொத்த அலகுத் தொகையினை ரூ.60,000/– ஆக உயர்த்த மாநில அரசு உத்தேசித்துள்ளது.

மேலும் கூடுதல் மானியமாக இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கழிவறை அமைக்க பயனாளிகளுக்கு முழு சுதாதார இயக்க நிதியிலிருந்து ரூ.2,200/– வழங்கப்படுகிறது. வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 20 சதுர மீட்டராகும். புதிய வீடுகள் அனைத்தும் கழிப்பிட வசதி மற்றும் புகையில்லா சூளாஅடுப்பு வசதியுடன் கட்டப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள் மூலம் செலவு குறைவான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயனாளிகள் கட்டுமானப் பணியினை மேற்கொள்கின்றனர்.

2010–11 ஆம் ஆண்டில், சுமார் 1.02 இலட்சம் புதிய வீடுகள், சுமார் ரூ.617 கோடி நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

இதில் மாநில அரசால் கான்கிரீட் மேற்கூரைக்காக வழங்கப்படும் கூடுதல் தொகையும் அடங்கும்.

## 4.2 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் முதல் கட்டமாக தொடக்கத்தில், 02.02.2006 முதல் அறிவிக்கை செய்யப்பட்ட 6 மாவட்டங்களிலும், 01.04.2007 முதல் இரண்டாம் கட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட 4 மாவட்டங்களிலும் மற்றும் 01.04.2008 முதல் மூன்றாம் கட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட 20 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. விவரங்கள் கீழ்க்கண்ட **அட்டவணை–12** ல் கொடுக்கப்பட்டுள்ளது.



**<u>அட்டவணை – 12</u>**

**<u>மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்</u>**

**<u>மூன்று கட்டங்களில் விரிவாக்கம்</u>**

| முதற்கட்டம் (2.2.2006 லிருந்து ) | இரண்டாம் கட்டம் (1.4.2007 லிருந்து ) | மூன்றாம் கட்டம் (1.4.2008 லிருந்து) | |
|---|---|---|---|
| 1. கடலூர் | 1. தஞ்சாவூர் | 1. காஞ்சிபுரம் | 11. திருச்சி |
| 2. விழுப்புரம் | 2. திருவாரூர் | 2. திருவள்ளூர் | 12. பெரம்பலூர் |
| 3. திருவண்ணாமலை | 3. கரூர் | 3. வேலூர் | 13. அரியலூர் |
| 4. நாகப்பட்டினம் | 4. திருநெல்வேலி | 4. சேலம் | 14. புதுக்கோட்டை |
| 5. திண்டுக்கல் | | 5. நாமக்கல் | 15. மதுரை |
| 6. சிவகங்கை | | 6. தர்மபுரி | 16. தேனி |
| | | 7. கிருஷ்ணகிரி | 17. இராமநாதபுரம் |
| | | 8. ஈரோடு | 18. விருதுநகர் |
| | | 9. கோயம்புத்தூர் | 19. தூத்துக்குடி |
| | | 10. நீலகிரி | 20. கன்னியாகுமரி |

### 4.2.1 இத்திட்டத்தின் நோக்கங்கள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்தில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்கிறது. இச்சட்டம் “வேலைக்கான உரிமையை” நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டம் ஊரகப் பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துவதன் மூலம் நிரந்தரமான வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தனிநபருக்கும் வேலைக்கான அட்டையை கிராம ஊராட்சி வழங்கும். சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியம், மற்றும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான ஊதியம் போன்றவை இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

### 4.2.2 நிதி பங்கீடு

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை மத்திய, மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. மத்திய அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:

அ) திறன்சாரா உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவு முழுவதும்

ஆ) கட்டுமானப் பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் ஊதியச் செலவில் 75 விழுக்காடு

இ) வட்டார அளவிலான அலுவலர் மற்றும் அவருக்கான உதவிப் பணியாளர்கள், பணியிட வசதிகள் மற்றும் மாநில மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிக் குழு உள்ளிட்ட நிர்வாகச் செலவுகள்.



ஈ) மத்திய வேலை உறுதிக் குழுவின் நிர்வாகச் செலவினங்கள்

மாநில அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்

அ) கட்டுமான பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவில் 25 விழுக்காடு.

ஆ) தொழிலாளர்கள் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை கொடுக்க இயலவில்லை எனில் வழங்கக்கூடிய வேலையில்லாப்படி.

இ) மாநில வேலை உறுதிக் குழுவின் நிர்வாகச் செலவினங்கள்.

### 4.2.3 முன்னுரிமைப் பணிகள்

தமிழக ஊரகச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு பின்வரும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அ) புதிய குளங்கள் உருவாக்குதல்.

ஆ) பாரம்பரிய நீராதார அமைப்புகளாக விளங்கும் குளங்கள், குட்டைகள், ஊரணிகள், கோவில் குளங்கள் மற்றும் பாசன குளங்களைப் புனரமைத்தல்.

இ) பாசனக் கால்வாய்களைத் தூர் வாருதல்.

ஈ) பாசனக் குளங்களை தூர் வாருதல் மற்றும் கரையினைப் பலப்படுத்துதல்.

உ) புதிய சாலைகள் அமைத்தல்.

ஊ) இதர நீர் வள பாதுகாப்பு, மண்வள பாதுகாப்பு நடவடிக்கைகள் / வெள்ளத் தடுப்பு பணிகள்.

### 4.2.4 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மே 2006 பதவி ஏற்றவுடன், இந்த அரசு இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம், உரிய அளவில் இல்லை என கண்டறிந்தது. இத்திட்டத்தின் கீழ் 31.03.2006 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.3.00 கோடி மட்டுமே என்பதிலிருந்தும் மேலும் 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில் 924 கிராம ஊராட்சிகளில் மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதில் இருந்தும் இது தெரிய வந்தது. இத்திட்டத்தின் குறைவான சாதனைக்கு காரணங்களாக இருந்த பிரச்சனைகளையும், தடைகளையும் அடையாளம் கண்டு இந்த அரசு அவைகளை களைய தொடர் முயற்சிகளை மேற்கொண்டது.

இத்திட்டத்தினை செம்மைப்படுத்தவும், விரைவாக செயல்படுத்தவும் கீழ்க்கண்ட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



1. இத்திட்டத்திகீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பெருமளவில் குடும்பங்கள் பதிவு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு தீவிர தகவல், கல்வி, தொடர்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் மற்றும் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் சராசரி பதிவுகள் 72 சதவீதத்தை கடந்தும், மூன்றாம் கட்ட மாவட்டங்களில் சராசரி பதிவுகள் 54 சதவீதத்தை கடந்தும், மாநில முழுமைக்கும் சராசரி 61 சதவிகிதமாகவும் உள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு அதிக அளவில் உள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

2. இத்திட்டத்திற்கென தனியான ஊரக விலைப் பட்டியல்கள் 2006–07 முதல் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் அனைவரும் ஒரு நாளுக்கான குறைந்த பட்ச கூலித் தொகைகைய பெற வேண்டியதன் அவசியத்தை உறுதி செய்யும் பொருட்டு டிசம்பர், 2009 வரை பொதுப்பணித் துறை விலைப் பட்டியலைக் காட்டிலும் 60 சதவிகிதம் அதிகமாக ஊரக விலைப் பட்டியல் இருக்குமாறு உறுதி செய்யப்பட்டது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ஜே.1) துறை, அரசாணை 2 (D) எண்.88, நாள்.01.10.2009–ன்படி குறைந்தபட்ச

கூலித் தொகை ரூ.80/–லிருந்து ரூ.100/– ஆக வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.23.12.2009–ன்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்கென தனியாக ஊரக விலைப் பட்டியல் ரூ.100/– ஆக உயர்த்தி 01.01.2010லிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இது பொதுப்பணித் துறை விலைப்பட்டியலைவிட, மண் வேலைகளைப் பொறுத்த மட்டில் 100 சதவீதம் அதிகமாகவும் முட்புதரகற்றும் பணிகளைப் பொறுத்த மட்டில் 150 சதவீதம் அதிகமாகவும் உள்ளது.

3. பணியாளர்களுக்கு இத்திட்டத்தின் அதிகமான தகவல்களை தரும் வகையிலும், வெளிப்படையானதாகவும், திட்டத்தைச் செயல்படுத்தும் போது தவறான நோக்கத்துடன் எளிதில் திருத்த இயலாத வகையிலும், ஏற்கனவே இருந்த தனிநபர் வேலைக்கான இலவச அட்டை மற்றும் வேலையாட்கள் பெயர் பட்டியல் (NMR) ஆகியவை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.



4. பணியாளர்களுக்கு வாரத்தில் குறிப்பிட்ட நாளில் ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. இத்திட்ட செயல்பாட்டினை ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் முனைப்போடு கண்காணிக்க ஊராட்சி ஒன்றியங்களின் வாகனம் ஒவ்வொன்றுக்கும் மாதம் 50 லிட்டர் கூடுதலாக எரிபொருள் வழங்கி அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உதவி செயற் பொறியாளர்களுக்கு 75 லிட்டர் கூடுதல் எரிபொருள் அனுமதித்து அரசாணை நிலை எண்.27, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.20.02.2008 மூலம் வெளியிட்டுள்ளது.

6. கிராம ஊராட்சிகளே மக்களுக்கு மிக அருகில் உள்ளதால் அவையே இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏற்றவையாக உள்ளன. எனவே, இத்திட்டம் கிராம ஊராட்சிகளால் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள மக்கள் நலப் பணியாளர்களும் கள அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு பொறுப்பாக்கப் பட்டுள்ளனர்.

7. இத்திட்டத்தினை முறையாக செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மாவட்ட, கோட்ட, வட்டார மற்றும் ஊராட்சிகள் அளவில் அமைச்சுப் பணியாளர்கள் தொழில்நுட்ப மற்றும் கணினி பணியாளர்கள் கூடுதலாக நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தரமாகவும் முனைப்போடும் வெளிப்படையாக சிறப்பாக செயல்படுத்துவதில் இம்மாநில அரசின் திறனை மேம்படுத்த அரசாணை நிலை எண்.164, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.21.10.2008–ன்படி மாநில மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி பிரிவு என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8. ஒப்பந்தக்காரர்களை பயன்படுத்துவது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளதால், இத்திட்டப் பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் மறைமுகமாக நுழைவதை தவிர்க்க 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

9. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் பணிகள் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப்படுகிறது.



(i) ஒரே பணியிடத்தில் தொடர்ந்து 30 நாட்களுக்கு வேலை வாய்ப்பு,

(ii) உருவாக்கப்படும் சொத்துக்கள் நிலைத்திருக்கக் கூடியதாகவும், சமுதாயத்திற்கு பயன்தரத் தக்கதாகவும் இருத்தல்,

(iii)அதிக அளவிலான சிறிய பணிகளுக்கு நிதி ஆதாரங்கள் பரவலாக சென்றடைவதை தவிர்த்தல்,

(iv)பணிகளை தீவிரமாக கண்காணித்தல் மற்றும் முறைகேடான செலவினங்களை பெருமளவில் குறைத்தல்.

10. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஊதியம் பெற செய்ய வேண்டிய வேலையின் அளவு தொடர்பான விழிப்புணர்வை பயனாளிகளிடையே ஏற்படுத்த எதிர்வரும் வாரத்திற்கான வேலையின் அளவினை முன்கூட்டி குறியீடு செய்யும் முறை 2008–09 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

11. இத்திட்டத்தின் கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு ஊதியத்தினை வெளிப்படையாவும், நியாயமாகவும் வழங்க குழுவில் இடம் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்களில்

குறைந்த பட்சம் 4 நபர்களின் முன்னிலையில் ஊதியம் வழங்கப்படல் வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

அ) ஊராட்சி மன்றத் தலைவர்

ஆ) ஊராட்சி துணைத் தலைவர்

இ) வேலை நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்

ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண்.அ, ஆ மற்றும் இ–ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)

உ) தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து, இரண்டு ஊக்குநர்கள்.

ஊ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி.

12. குறிப்பிட்ட ஊதியம் வழங்கும் நாளில் இத்திட்டத்தில் பயன்பெறுவோர் நேரில் ஊதியம் பெறமுடியாத நிலையில் அவர்களின் ஊதியத்தை வங்கிக் கணக்கிலிருந்து பெற்றுக்கொள்ளும் வகையில் இவர்களுக்கு வங்கிகளில் சேமிப்பு கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.



13. இத்திட்டத்தினை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், அரசாணை நிலை எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.14.09.2006–ன்படி 25 நபர்கள் கொண்ட தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்திலுள்ள 31 மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட குழு அரசாணை நிலை எண்.118, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.11.07.2008 மற்றும் அரசாணை எண்.51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.18.06.2009–ன்படி திருத்தி அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவின் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது கூட்டங்கள் முறையே 25.11.2006, 11.06.2007, 03.03.2008, 08.08.2008, 16.09.2009 மற்றும் 9.4.2010 –ல் நடைபெற்றுள்ளன.

14. மேலாண்மை தகவல் திட்டத்தின் (MIS) மூலம் திட்டச் செயல்பாடுகள் திறமையாக கண்காணிக்கப்படுவதை உறுதி செய்ய ஏதுவாக முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட மாவட்டங்களிலுள்ள 385 வட்டாரங்களுக்கும்

தலா 3 கணினிகள் மற்றும் 1 பிரிண்டர் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவையன்றி தற்போதுள்ள 68 உட்கோட்டங்களுக்கும் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட 32 உட்கோட்டங்களுக்கும் தலா 1 கணினி மற்றும் 1 பிரிண்டர் என்ற வீதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

15. இத்திட்ட செயல்பாடுகளில் முழு வெளிப்படையான நிர்வாகத்தை உறுதி செய்ய ஒவ்வொரு ஆண்டும் அனைத்து ஊராட்சிகளிலும் மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 மற்றும் சனவரி 26 தினங்களில் நடைபெறும் கிராம சபையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளையும் சமூகத் தணிக்கை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இதே போன்று 2010–11 ஆம் ஆண்டு நடைபெறும் கிராம சபை கூட்டங்களுடன் சமூகத் தணிக்கையும் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு ஊராட்சியிலும் சமூகத் தணிக்கை செய்வதற்காக சம்பந்தப்பட்ட ஊராட்சியில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரிந்த 6 நபர்கள் கொண்ட தனிப்பட்ட சமூகத் தணிக்கைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சமூகத் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு, பயிற்றுநர் பயிற்சி பெற்ற சமுதாய வளப் பயிற்றுநர் மற்றும் சமூகப் பயிற்றுநர் மூலமாக அர்த்தமுள்ள சமுதாயத் தணிக்கை மேற்கொள்ள பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.



16. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மாநில அளவில் நிதியை பெறவும், பெறப்படும் நிதியை மாநில அரசின் பங்குத் தொகையுடன் மாவட்டங்களுக்கு பிரித்து அளித்து நிர்வாகம் செய்ய தனியே ‘குழுமம்’ ஒன்றை அமைத்திட இந்த அரசு உத்தேசித்துள்ளது. அரசாணை நிலை எண்.92, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.6.6.2008–ன்படி தமிழ்நாடு மாநில வேலை உறுதி நிதி விதிகள், 2008 வரையறுக்கப்பட்டுள்ளது.

17. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயனாளிகளுக்கு அவர்களின் குறைகளை தீர்த்து வைக்க அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் தனியாக இலவச தொலைபேசி எண்.1299 நிறுவப்பட்டுள்ளது.

18. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட 385 வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு தனித் தொலைபேசி மற்றும் நிகரி வசதி செய்யப்பட்டுள்ளது.

19. இத்திட்டத்தில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உட்கடை கிராம வாரியான மற்றும் ஊராட்சி வாரியான தொழிலாளர்களின் பங்கேற்பினை கண்காணிக்கும் பொருட்டு இணைய தளம் சார்ந்த கண்காணிப்பு மென்பொருள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளால், 31.03.2010 வரை ரூ.3,352.58 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டதுடன், 4,091 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பயனடைந்தவர்களில் 76 சதவீதம் பெண்களும், 56 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களும் ஆவர். இத்திட்டம், கிராமப்புற ஊதிய அமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தியமைக்கு பிப்ரவரி 2009 ஆம் ஆண்டில் கடலூர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 3 மாவட்டங்களுக்கு மத்திய அரசின் தேசிய விருது கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்கு விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு மத்திய அரசின் தேசிய விருது ஜனவரி 2010 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம், இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தியமைக்காக தமிழ்நாட்டைப் பாராட்டியதோடு அல்லாமல் பிற மாநிலங்களையும் இதே முறைகளை பின்பற்றுமாறு கூறியுள்ளது.



## 4.3 முழு சுகாதார இயக்கம்

மத்திய அரசு 1.4.1999 முதல் ஒருங்கிணைந்த ஊரக சுகாதார திட்டத்தை மாற்றியமைத்து முழு சுகாதார இயக்கமாக துவக்கியது. தீவிர பிரச்சாரத்தின் மூலம் முழு சுகாதாரத்தின் அவசியத்தை உணர்த்தி, தேவையை ஏற்படுத்தி, மாற்று வழி முறைகள் மூலமாக அத்தேவையை நிறைவு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1.4.2006 முதல் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பின் விவரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

அ) தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், நிர்வாகச் செலவினங்கள் மற்றும் ஊரக சுகாதார விற்பனை அங்காடிகள் 80:20

ஆ) தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள் 1.8.2008 முதல் 60:28:12 என்ற விகிதத்தில், 12 சதவிகிதம் பயனாளிகள் பங்களிப்புடன் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள் பயனாளிகள்/ ஊராட்சிகளின் 20 சதவிகித பங்களிப்புடன் – 60: 20: 20

இ) பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி கழிப்பறைகள் 70: 30

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 110(ஈ)ன்படி, ஊராட்சிகளில் சுகாதாரம் மற்றும் தூய்மையினை பராமரிப்பது ஊராட்சிகளின் கட்டாயக் கடமையாகும். திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்றுவது என்பது அனைத்து ஊராட்சிகளுக்கும் குறிப்பாக, மாநகராட்சி மற்றும் பெரிய நகராட்சிகளுக்கு அருகில் உள்ள ஊராட்சிகளுக்கு ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. ஒரு தனிப்பட்ட ஊராட்சியால் திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்வது என்பது சாத்தியமில்லை. எனவே நகர்ப்புறங்களுக்கு அருகில் உள்ள பல ஊராட்சிகளை ஒரு தொகுப்பாக அமைத்தோ, அல்லது கிராம ஊராட்சிகளை அதன் அருகில் உள்ள மாநகராட்சிகள் அல்லது நகராட்சிகளுடன் இணைந்து திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுகாதார பழக்க வழக்கங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த, பல்ஊடக மக்கள் தொடர்பு சாதனங்கள் (Multi media Campaign) மூலம் இந்த ஆண்டு மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு இயக்கம் நடத்தவும் அதன் மூலம் தனி நபர் கழிவறை கட்டுவதை ஊக்கப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### 4.3.1 நிர்மல் கிராம புரஸ்கார்

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் 'நிர்மல் கிராம புரஸ்கார்' என்ற விருதினை 2003–ஆம் ஆண்டு ஜுன் மாதம் மத்திய அரசு அறிவித்தது. கிராம ஊராட்சிகளுக்கு ரூபாய் 0.5 லட்சம் முதல் ரூபாய் 5 லட்சம் வரை கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ஆண்டுவாரியான நிர்மல் கிராம புரஸ்கார் விருது பெற்ற கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளின் விவரங்கள் கீழ்க்கண்ட **அட்டவணை–13ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–13**
**ஆண்டுவாரியாக நிர்மல் கிராம புரஸ்கார் விருதுகள் பெற்ற விவரம்**

| ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | வட்டார ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2004–05 | 12 | 1 |
| 2005–06 | 119 | – |
| 2006–07 | 296 | – |
| 2007–08 | 1,474 | 5 |
| 2008–09 | 196 | – |

## 4.4 பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள் மூலம் உருவாக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்படும் இடைவெளிகளை பூர்த்தி செய்து அதன் மூலம் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். பாராளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) தலா ரூ. 2 கோடி ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில், அவரவர் தொகுதிக்குட்பட்ட மாவட்டங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளை பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களை பொறுத்தவரை, இந்தியாவில் எந்த பகுதியிலும் பணிகளை செயல்படுத்த பரிந்துரைக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்திற்கான வழிகாட்டும் நெறிமுறைகளில் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ்



அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. குட்டை, ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் போன்றவைகளை தூர்வாரும் பணிகளும் பராமரிப்பு பணிகளாக கருதப்படுவதால் இத்திட்டத்தின் கீழ் இப்பணிகளை மேற்கொள்ள இயலாது.

மத்திய அரசின் (புள்ளி விவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்) இணைய தளத்தின்படி தமிழ்நாடு அகில இந்திய அளவில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 1993லிருந்து ஒருங்கிணைந்த நிதி பயன்பாட்டில் 97.14 சதவீதத்தைப் பயன்படுத்தி முதல் இடத்தில் உள்ளது.

2010–11ம் ஆண்டில் இத்திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள ரூ.114.00 கோடி நிதி ஒதுக்கப்படும்.

## 4.5 பிரதம மந்திரி கிராம சாலை திட்டம்

2000 – ஆம் ஆண்டு மத்திய அரசால் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 25.12.2000 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி அனைத்து பருவ காலத்திற்கு ஏற்ற சாலை வசதியினை 1000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 2003–ம் ஆண்டுக்குள்ளும், 500 முதல் 1000 வரை மக்கள் தொகை கொண்ட குடியிருப்பு பகுதிகளுக்கு 2007–ம் ஆண்டுக்குள்ளும், ஏற்படுத்தித் தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 100 சதவிகிதம்

மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுவதாகும். மேற்கண்ட பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் ஆண்டு வாரியாக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு **அட்டவணை–14ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை–14**

**ஆண்டு வாரியான ஒதுக்கீடு / எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| கட்டம் | நிதி ஒதுக்கீடு ரூ. கோடியில் | சாலைகளின் எண்ணிக்கை | சாலை நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| கட்டம் I (2000-01) | 152.91 | 862 | 1,442.12 |
| கட்டம் II (2001-02) | 115.29 | 446 | 803.70 |
| கட்டம் III (2003-04) | 160.88 | 492 | 1,097.50 |
| கட்டம் IV (2004-05) | 112.65 | 396 | 787.97 |
| கட்டம் V (2005-06) | 170.84 | 365 | 799.69 |
| கட்டம் VI / பாரத் நிர்மான் கட்டம் I (2008-09) | 465.64 | 818 | 2,082.54 |
| கட்டம் VII / பாரத் நிர்மான் கட்டம் II (2008-09) | 858.99 | 1,591 | 3,031.09 |
| **மொத்தம்** | **2,037.20** | **4,970** | **10,044.61** |

2008-09 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டத்தின் கீழ் (பாரத் நிர்மான் கட்டம் I & II) சாலைப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட தொகையான ரூ.1,324.63 கோடி முந்தைய ஆண்டுகளில்



ஆண்டொன்றிற்கு அனுமதி வழங்கப்பட்ட சராசரி தொகையான ரூ.142 கோடியை விட, மிகவும் அதிகம் என்பதோடு மட்டுமல்லாமல் ஒரு சாதனையும் ஆகும்.

2010-11 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டத்தின் (கட்டம் VIII) கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

## 4.6 தேசிய கரிம வாயுத் திட்டம்

தேசிய கரிமவாயு திட்டம் 100 சதவீதம் மத்திய அரசு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் சாண எரிவாயு கலன் அமைக்க அனைத்து பிரிவினருக்கும் ரூ. 8,000/- மற்றும் மலைப்பகுதியில் ரூ.10,000/- மானியமாக வழங்கப்படுகிறது. 2010–11 ம் ஆண்டிற்கு ரூ.139 லட்சம் உத்தேச ஒதுக்கீடு ஆகும்.

## 4.7 பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (BRGF)

முன்னர் நடைமுறையில் இருந்த தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்புத்திட்டம் (RSVY) மத்திய திட்ட குழுவிலிருந்து பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு 2006–07 முதல் மாற்றப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

இத்திட்டத்தை பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதியென மாற்றியமைத்தது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்டமிடல், செயல்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தவும் அவைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கிய கடமைகளை நிறைவேற்றுதலில் திறன் மேம்பட உதவுவதும் அத்துடன் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகளை களைவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இரு சாரள முறையில் நிதி அளிக்கப்படுகிறது. அவை, ''திறன் மேம்பாட்டு நிதி'' மற்றும் ''வளர்ச்சி நிதி,'' அரசாணை எண் **161** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் **(ம.அ.தி.1)** துறை நாள் **13.10.2008**ல் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலை நகருக்கு திறன் மேம்பாட்டு நிதியாக மத்திய அரசு ரூ.**16.31** கோடி வழங்கியுள்ளது.

மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் **2007–08** ஆம் ஆண்டிற்கென ஆறு மாவட்டங்களுக்கு வளர்ச்சி நிதியாக கீழ்கண்ட **அட்டவணை 15–ல்** உள்ளவாறு அனுமதித்துள்ளது.



**அட்டவணை–15**

**2007–08 மற்றும் 2009–10ம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மான்ய நிதி அனுமதிக்கப்பபட்ட விவரம்**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | 2007–08ம் ஆண்டிற்கான தொகை (ரூ.கோடியில்) | 2009–10ம் ஆண்டிற்கான தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | கடலூர் | 17.76 | 17.76 |
| 2. | விழுப்புரம் | 21.73 | 21.73 |
| 3. | திருவண்ணாமலை | 19.27 | 19.27 |
| 4. | திண்டுக்கல் | 18.70 | 18.70 |
| 5. | நாகப்பட்டினம் | 15.06 | 15.06 |
| 6. | சிவகங்கை | 15.52 | 15.52 |
| | மொத்தம் | **108.04** | **108.04** |

## 5. மாநில திட்டங்கள்

### 5.1 கலைஞர் வீட்டுவசதித் திட்டம்

2001-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளில் **33** சதவிகிதம் குடிசைகள் ஆகும். இந்த குடிசைகள் அனைத்தையும் நிலையான கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு, இதுவரை உள்ள திட்டங்களில் மிக அதிக மாநில அரசு நிதி ஒதுக்கீடு கொண்ட திட்டமான 'கலைஞர் வீட்டு வசதித் திட்டம்' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

6.1.2010 அன்று ஆளுநர் உரையில் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் 2010–11 முதல் 2015–16 வரையிலான 6 ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து குடிசை வீடுகளையும் நிரந்தர வீடுகளாக மாற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டதாகும். இதன் மூலம் 2016–ல் இந்தியாவிலேயே குடிசைகள் இல்லாத முதல் மாநிலம் என்னும் பெருமையை தமிழ்நாடு பெறும். கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:–

1. குடிசையின் சுவர் எத்தன்மையதாக இருப்பினும் (மண், சுடப்படாத செங்கல், சுட்ட செங்கல் போன்றவை) ஓலைக் கூரையுள்ள அனைத்து குடிசைகளையும் இத்திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகளாக மாற்றப்படும்.

2. 1.1.2010–க்கு முன் கட்டப்பட்ட குடிசைகள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும், 1.1.2010–க்கு பின் கட்டப்பட்டுள்ள குடிசைகள், ஏதும் இருப்பின், 6 ஆண்டு காலத்திற்கு பின்னர் (அதாவது 2016–க்குப் பின்) பரிசீலிக்கப்படும்.

3. இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வீடுகளைப் போல, கலைஞர் வீட்டுவசதித் திட்ட வீடுகளும் கான்கிரீட் கூரையுடனும் தனியாக கழிப்பறை வசதியுடனும் கட்டித்தரப்படும். ஒவ்வொரு வீடும் குறைந்தபட்சம் 200 சதுர அடி பரப்பளவைக்



கொண்டதாகவும் ஒவ்வொரு வீட்டிற்கும் அலகுத் தொகை ரூ.60,000/– எனவும் இருக்கும். குறைந்தவிலை கட்டுமான தொழில்நுட்பமும் அதிவிரைவு கட்டுமானமும் இத்திட்டத்தில் அனுமதிக்கப்படும்.

4. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தைப் போலவே இத்திட்டத்தின் கீழும் பயனாளிகள் (அல்லது அவர்களின் முகவர்கள்) தங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வார்கள். மேலும், இதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் ஏதும் கோரப்பட மாட்டாது.

5. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடிசைகளையும் 2 கட்டங்களாக கணக்கெடுப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது:

   (அ) முதல் கட்டமாக, கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகளாக மாற்றி கட்டப்படவேண்டிய குடிசைகளின் எண்ணிக்கை விரைவாக கணக்கெடுக்கப்படும்.

   (ஆ) இரண்டாவது கட்டமாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட அனைத்து குடிசைகளின் புகைப்படங்கள் (பயனாளிகள் வீட்டின் முன் நிற்கும் நிலையில்) எடுக்கப்பட்டு, பயனாளிகளிடம் பட்டா மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் பெறப்படும்.

குடிசை வீடுகளின் கணக்கெடுப்பு, கிராம நிர்வாக அலுவலர், மக்கள் நலப் பணியாளர் மற்றும் கிராம ஊராட்சி உதவியாளர் அடங்கிய மூன்று உறுப்பினர்கள் குழுவால் மேற்கொள்ளப்படும். இக்கணக்கெடுப்பினை ஊரக வளர்ச்சி மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் மேலாய்வு செய்வர்.

6. தமிழகத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் இத்திட்டம் செயலாக்கப்படும்.

7. கிராம ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிரந்தர வீடுகளை அந்தந்த கிராம ஊராட்சியுள்ள பல்வேறு இனத்தவருக்கும் (பழங்குடியினர்/ஆதி திராவிடர்/மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/பிற்பட்ட வகுப்பினர்/இதரர்) அந்தந்த இனத்தைச் சார்ந்த பயனாளிகள் வசிக்கும் குடிசைகளின் மொத்த எண்ணிக்கையின் விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

8. ஒவ்வொரு இனத்தவருக்கும் அவர்களது வீடுகளின் கதவு எண்களின் வரிசைப்படி பயனாளிகளை தேர்வு செய்வதே மிகவும் எளிமையான, நியாயமான மற்றும் வெளிப்படையான வழிமுறையாகவும், பயனாளிகள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வழிமுறையும் ஆகும்.



9. கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் வகையான குடிசைகள் நிரந்தர வீடுகளாக மாற்றுவதற்கு தகுதியற்றவையாகும்.

- வாடகைக்கு குடியிருப்பவர்களின் குடிசைகள்.
- வணிக ரீதியிலான உபயோகத்திற்காக மற்றும் விலங்குகளை அடைக்க பயன்படுத்தும் குடிசைகள்.
- ஒரு குடிசையின் ஒரு பகுதி ஓலைக் கூரையாகவும் மற்றொருபகுதி கான்கிரீட் /ஓடு/ ஆஸ்பெஸ்டாஸ்/ தகரம்/இரும்பு தகடு கூரையாகவும் இருப்பின் அத்தகைய குடிசைகள்.
- குடிசையில் குடியிருக்கும் குடும்ப உறுப்பினர்கள் எவருக்கேனும் சொந்தமான, நிலையான வீடு வேறு எங்கேனும் இருப்பின் அத்தகைய குடிசைகள்.
- உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள், இதர அரசு உதவி பெறும் நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு சார் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற அல்லது பணிபுரியும் அரசு ஊழியர்கள் (முழுநேர/பகுதிநேர/ஒப்பந்த நியமனம்/ தினக்கூலி நியமனம்) அல்லது அவர்களின் கணவன்/மனைவிக்கு சொந்தமான குடிவைகள்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்

பிரதிநிதிகளுக்கு அல்லது அவர்களின் கணவன்/மனைவிக்கு சொந்தமான குடிசைகள்.

### 5. 2 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்பு முனைத் திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் புதிய திட்டத்தை அரசாணை எண்.115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மாஅதி–2), நாள்.11.09.2006 மற்றும் அரசாணை எண்.189, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மாஅதி–2), நாள்.27.12.2006–ல் அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 21.01.2007 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள திருமாதலம்பாக்கம் ஊராட்சியில் துவக்கி வைக்கப்பட்டது.

அநேக கிராம ஊராட்சிகள் மிகவும் குறைந்த வருவாய் உள்ளவையாக இருப்பதாலும், சட்டப்பூர்வ கடமைகள் ஆற்றுவதற்கு அல்லது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சிரமப்படுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தின் கீழ் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை ஒவ்வொரு வருடமும் தனி நபர் வருமானத்தின் அடிப்படையில்



ஏறுவரிசைப்படுத்தி, அதனடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். 1997 முதல் 2001–ம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஐந்தாம் ஆண்டில் (2010–11)–ல் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.2041.01 கோடி கீழ்க்கண்ட அட்டவணை – 16–ல் உள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை –16**

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஆண்டு வாரியான ஒதுக்கீடு**

| வ.எண் | ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | 2006-07 | 2,540 | 513.08 |
| 2. | 2007-08 | 2,534 | 511.87 |
| 3. | 2008-09 | 2,520 | 509.04 |
| 4. | 2009-10 | 2,510 | 507.02 |
| | **மொத்தம்** | **10,104** | **2041.01** |

2010–2011–ம் ஆண்டில் இத்திட்டம் 2,514 கிராம ஊராட்சிகளில் ரூ.507.828 கோடியில் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசுத் திட்டங்களின் வழிகாட்டும் நெறிமுறைகள் வழக்கமாக எவ்வித தளர்வும் இல்லாத விதிமுறைகளைக் கொண்டுள்ளன. மேலும் மக்கள் விரும்புகின்ற பணிகளை எடுத்துச் செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையற்றதாகவும் உள்ளன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் படி சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றிட கிராம ஊராட்சிகளுக்கு போதிய நிதி வசதியும் அளிக்கப்படவில்லை. மத்திய அரசின் திட்டங்களில் உள்ள இந்த இரண்டு இடைவெளிகளையும் நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மொத்த நிதியான ரூ.20 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத நிதியாகவும் எஞ்சியுள்ள நிதி வரையறுக்கப்பட்ட இனங்களுக்காகவும் செலவு செய்யலாம். மேலும், இதர துறைகளின் குறிப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, சமூகநலத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடனும் இயன்ற அளவு ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கும் குறைந்தபட்சம் ரூ.1 கோடி நிதியை



அனைத்து அரசு திட்டங்களின் மூலம் ஒருமுகப்படுத்துவதை உறுதி செய்வது அரசின் நோக்கமாகும்.

இத்திட்ட முக்கியமான வழிகாட்டும் நெறிமுறைகளில் சில பின்வருமாறு:-

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தொடர்புடைய வட்டாரத்தின் உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) / வட்டாரப் பொறியாளர், தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நிதிகளின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளை தேர்வு செய்யும்.
2. தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்கு கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு கிராமத்திற்கும் சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து எடுக்கலாம்.
4. கிராமத்திற்கு ஒரு குளம் / ஊரணி ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் செலவில் வரையறுக்கப்பட்ட நிதிப் பிரிவிலிருந்து பணி மேற்கொள்ளப்பட வேண்டும். படித்துறை அமைத்தல், குளத்திற்குள் சிறுகுளம் அமைத்தல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகியவை இதன் கீழ் உள்ள பணிகளாகும். கிராமத்தில் குளம் அல்லது ஊரணி

ஏதும் இல்லாத நிலையில், கோயில் குளங்கள் மற்றும் சிறுபாசன குளம் தூர் வாரும் பணி எடுத்துச் செய்யலாம். குளம் தூர் எடுத்தலில் தற்போதுள்ள மட்டத்திற்கு கீழ் குறைந்த பட்சம் 2 மீ ஆழமும், குளத்தின் மையப் பகுதியில் சிறுகுளம் தூர் எடுத்தலில் மேலும் 1 மீ ஆழமும் தூர் எடுத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5. வாய்ப்புள்ள இடங்களில் மீன் வளர்ப்புக் குளங்கள், சுய உதவிக் குழுக்களிடம் மீன்பிடி உரிமையுடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. ஒவ்வொரு அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திலும் சுடுகாடு / இடுகாடு மேம்படுத்தப்பட்டு இணைப்புச் சாலைகள், சுற்றுச் சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதி அமைக்கப்பட வேண்டும்.
7. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்தில் ரூ.1.5 இலட்சம் ஒதுக்கீட்டில் பள்ளி, விளையாட்டு மையம் அல்லது ரூ.1 இலட்சம் ஒதுக்கீட்டில் சமுதாய விளையாட்டு மையம் அமைக்கப்பட வேண்டும்.
8. இக்கிராமங்களில் நூலக கட்டிடம் கட்டப்படும் அல்லது ஏற்கனவே உள்ள கட்டிடம் நூலகமாக மாற்றியமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும். இந்நூலகத்திற்கு ரூ.50,000/–க்கு குறையாமல் புத்தகங்கள் வாங்கப்படும் மற்றும் ரூ.50,000/–



மதிப்பிற்கு நூலகத்திற்கு தளவாடங்கள் வாங்கப்படும். ஒவ்வொரு நூலகத்திற்கும் மதிப்புறு நூலகர் நியமிக்கப்படுவார்.
9. சாத்தியம் உள்ள இடங்களில் கிராமச் சந்தைகள் மேம்பாடு செய்யப்பட வேண்டும்.
10. மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 சதவீதம் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), விளையாட்டுப் பொருள்கள், நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்கள் தவிர அனைத்து பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் ஆவார். அரசாணை (நிலை) எண்.186, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா,அ.தி.2) நாள்.16.11.2007–ன்படி ரூ.5 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள பணிகளில், மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத நிலையிலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட தொகை மிக அதிகமாக இருப்பதாலோ அல்லது ஒப்பந்ததாரரால் பணிகள் பாதியில் கைவிடப்பட்டாலோ, கிராம ஊராட்சிகள் இப்பணிகளை துறை மூலம் மேற்கொள்ளவும், ரூ.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணிகளாக இருப்பின் ஒப்பந்தப்புள்ளி மூலம் கிராம ஊராட்சிகளே பணிகளை மேற்கொள்ள அரசு வழி வகுத்துள்ளது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விளையாட்டு மையங்களில் விளையாட்டுப் பொருள்களை புதுப்பிக்க ஒரு ஆண்டிற்கு ரூ.10,000/– வரை செலவு செய்ய கிராம ஊராட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் உள்ள விளையாட்டுத் திறன் மிக்க இளைஞர்களை ஊக்குவிக்கும் முகத்தான் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விளையாட்டு மையங்களைத் தொடர்ச்சியாக முறையாகப் பயன்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண்.73 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை நாள் 28.7.2009 மற்றும் அரசாணை (நிலை) எண்.131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.–1) துறை நாள் 27.11.2009.ன்படி ஊரக விளையாட்டுப் போட்டிகள் வருடத்திற்கு இரண்டு முறை பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் செப்டம்பர் 15 மற்றும் பொங்கல் விடுமுறை நாட்களில் நடத்திட உத்திரவிடப்பட்டுள்ளது. 2009–ம் ஆண்டு செப்டம்பர் 15–ம் தேதி நடைபெற்ற ஊரக விளையாட்டுப் போட்டியில் கைப்பந்து மற்றும் வலைப்பந்து குழு போட்டிகளில் சுமார் 70,000 குழுக்களும், தனி நபர் விளையாட்டுக்களான 100 மீட்டர் ஒட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், சதுரங்கம், கேரம் போட்டிகளில் சுமார் 9.97 லட்சம் நபர்கள் பங்கேற்றுள்ளனர். அதே போன்று 2010–ஆம் ஆண்டு பொங்கல் விடுமுறையின்போது நடைபெற்ற ஊரக விளையாட்டுப் போட்டிகளில் கைப்பந்து மற்றும் வலைப்பந்து



குழு போட்டிகளில் சுமார் 74,000 குழுக்களும் தனி நபர் விளையாட்டுக்கான 100 மீட்டர் ஒட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், சதுரங்கம், கேரம் போட்டிகளில் சுமார் 11.75 லட்சம் நபர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஊரகப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே நூலகங்கள் பயன்படுத்துதல் மற்றும் கல்வித் திறனை வெளிக் கொணர அரசாணை (நிலை) எண்.132 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை, நாள் 1.12.2009–ன்படி ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மற்றவர்கள் பள்ளிப் படிப்பைக் கைவிட்டவர்களை சேர்த்து 3 பிரிவுகளில் உள்ள மாணவ மாணவியர்களுக்கு ஊரக நூலகங்களில் போட்டிகள் நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது. 2009–ம் ஆண்டு டிசம்பர் இரண்டாவது வாரத்தில் ஊரக நூலகங்களில் நடைபெற்ற போட்டிகளில் சுமார் 6.08 லட்சம் நபர்கள் பங்கேற்றுள்ளனர்.

## 5.3 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். சட்ட மன்ற தொகுதிக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தனது தொகுதியில் செய்யப்பட

வேண்டிய மேம்பாட்டு பணிகளை தேர்ந்தெடுத்து பரிந்துரைப்பார். பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி வழங்குவார். அரசாணை நிலை எண்.90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.2) துறை நாள் 11.8.2009 ல் ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீட்டை தலா ரூ1.50 கோடியிலிருந்து ரூ1.70 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 50 சதவீதம் (ரூபாய் 85 லட்சம்) நிதி அரசு குறிப்பிட்டுள்ள முன்னுரிமை பணிகளை எடுத்து செய்வதற்கும் மீதமுள்ள 50 சதவீதம் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறும் பணிகளை தவிர்த்து சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரின் விருப்பப்படி பணிகளை நிறைவேற்றவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.3.1 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – வரையறுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

நகர்ப்புறங்களில் அமைந்துள்ள பல அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு மைய சமையல் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. ஊரகப் பகுதிகளிலும் சில கட்டிடங்கள் பழுதடைந்து உள்ளன. இவற்றிற்கு பதிலாக புதிய கட்டிடங்கள் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனவே 2009–10ஆம் ஆண்டில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மைய கட்டிடங்கள்,



சத்துணவு சமையல் கூடங்கள் ஆகிய பணிகளை எடுத்துச் செய்ய ரூ20 லட்சத்தை ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.65 லட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்படி பணிகளில் மொத்த வரம்பான ரூ. 65 லட்சத்தில் எடுத்துச் செய்யலாம்.

**அ) ஊரகப் பகுதிகளில் :–**

1. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
2. மிகவும் பழுதடைந்துள்ள தார்ச்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்ச்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்ச் சாலை பணிகளை மட்டும் மேற்கொள்ளல்)
3. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
4. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டிடம் அல்லது சுற்றுச்சுவர் கட்டி கொடுத்தல், மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு தங்கும் விடுதிகள்

ஆகியவைகளுக்கு கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்.

5. ஊனமுற்ற நபர்களுக்காக அரசு நடத்தும் சிறப்பு பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உட்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
6. 2006–07, 2007–08, 2008–09 மற்றும் 2009–10–ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்படாத குடியிருப்புகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கூடுதலாக இடுகாடு/ சுடுகாடு அமைத்தல்.
7. இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்துதல்.
8. பாலங்கள் கட்டுதல்.

**ஆ) நகர்ப்புறப் பகுதிகளில் :–**

1. 1–5: மேற்குறித்த ஊரகப் பகுதி வரிசை எண்.1–5 உள்ளதைப் போல.
2. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
3. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.



4. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.
5. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.
6. பாலங்கள் கட்டுதல்.
7. ஜெட்ராடிங் இயந்திரங்களையும், ஹைறட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களையும் வாங்குதல்.

**5.3.2 சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – வரையறுக்கப்படாத நிதியிலிருந்து எடுத்துச் செய்யக்கூடிய பணிகள்.**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட பணிகளைத் தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்பட்ட நிதியின் கீழ் எடுத்துச் செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியில் மேற்கொள்ளலாம்.

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ள குளம், ஆறு, ஊரணிகள் மற்றும் கால்வாய்கள் தூர்வாரும் பணிகளை இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ள பணிகளையும் குறிப்பாக இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி

விலக்களிக்கப்பட்டுள்ள பணிகளை தவிர எவற்றையும் எடுத்துச் செய்ய இயலாது.

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 19 சதவீதம் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்ப்புறங்களில் குடிசை பகுதிகளில் (Slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

2010–11 ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.399.50 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.4 ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்.

ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் 2007–08ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்களைப் படிப்படியாக பழுதுபார்த்து சீரமைப்பதற்கு இத்திட்டம் வழி செய்கிறது. தமிழ்நாட்டில் சுமார் 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிகளும், 4,500 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. உரிய பராமரிப்பில்லாததால், அநேக பள்ளிக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி கிராமங்களில் உள்ள இத்தகைய பள்ளிகள் பழுது நீக்கம் மற்றும் சீரமைப்பு



செய்யப்படுகிறது. பழுது நீக்க பணிகளில் பழைய மற்றும் பழுதடைந்த ஓடுகள் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளை நீக்கி புதிய ஓட்டு கூரைகளாக மாற்றி அமைக்கப்படுகிறது. கான்கிரீட் கூரை தளம் பழுதடைந்திருந்தால் புதிய கான்கிரீட் கூரை தளம் அமைக்கவும், மேலும் கான்கிரீட் கூரை, சுவர், தரையிலுள்ள வெடிப்புகள் மற்றும் பழுதடைந்த கதவு, ஜன்னல்கள் பழுது நீக்கம் செய்தும் கட்டிடத்திற்கு வெள்ளையடித்து, வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கட்டடங்களுக்கு புதுப்பொலிவு ஏற்படுத்தப்படுகிறது.

பின்வரும் **அட்டவணை 17**ல் கண்டுள்ளவாறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 17**

**ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்ட ஆண்டு வாரியான ஒதுக்கீடு**

| வரிசை எண் | ஆண்டு | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் எடுக்கப்பட்ட பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ( ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 & 2007–08 | 9,547 | 104.25 |
| 2 | 2008–09 | 4,430 | 69.30 |
| 3 | 2009–10 | 4,124 | 67.56 |

மேலும் 2008–09 ஆம் ஆண்டில், பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் அமைந்துள்ள 495 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள், ரூ. 14.31 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு மற்றும் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. 2009–10 ம் ஆண்டில், பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் அமைந்துள்ள 450 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ரூ.10.60 கோடி மதிப்பீட்டில், பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2010–11ம் ஆண்டு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள சுமார் 5,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள் ரூ.85 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### 5.5 நமக்கு நாமே திட்டம்

நமக்கு நாமே திட்டம் மாநில அரசு திட்டமாகும். குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு மக்கள் பங்களிப்பாகவும், இரண்டு பங்குத் தொகை அரசு மானியமாகவும் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அவசியமான பணிகளை பொது மக்களே



தேர்வு செய்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தலாம்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளி கட்டிடங்கள் (சுற்றுச்சுவர் உட்பட) நூலகங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், கால்நடை மருந்தகங்கள், மதிய சத்துணவு கூடங்கள், விடுதிகள், குடிநீர் ஆதாரப் பணிகள், அரசு நியாய விலை கடைகள், பாலங்கள் மற்றும் சிறிய பாலங்கள் கட்டுதல், சாலைகள் மற்றும் தெருக்களை தரம் உயர்த்துதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலைத் திட்டுகள், நீர் ஊற்று, தெருவிளக்குகள், தளவாடங்கள், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குதல், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை எடுத்துச் செய்யலாம். 2009–10 ம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ50 கோடி நிதி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதைப்போலவே 2010–11ல் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.50கோடி நிதி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5.6 பெரியார் நினைவு சமத்துவபுரம்

சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும், இந்த அரசு 1997–98 ஆம் ஆண்டு முதல் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது.

2008–ம் ஆண்டு, 23.1.2008 அன்று சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் "பெரியார் பெயரால் மேலும் 95 சமத்துவபுரங்களை அமைப்பதால் அவருடைய தலையாயக் கொள்கையான சமுதாயச் சமத்துவக் கொள்கை பரப்புவதற்கு மேலும் சிறப்பான வழி ஏற்படும் என்பதற்காக அந்தப் பணியை இந்த அரசு தொடங்க முடிவு செய்துள்ளது " என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தவும், 2008–09, 2010–11 வரை 95 சமத்துவபுரங்களை அமைக்க, முதற்கட்டமாக 2008–2009ம் ஆண்டில் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி மாவட்டம் தவிர) தலா ஒன்று வீதம் 29 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 2009–10 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி மாவட்டம் தவிர) தலா ஒன்று வீதம், 30 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கும் அரசு முடிவு செய்து



அரசாணை நிலை எண்.59 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–1) துறை நாள் 14.7.2009ன் படி ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. ஒரு சமத்துவபுரத்தில் 100 வீடுகள், ஒவ்வொரு வீடும் சுமார் ரூ.1.94 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், சமத்துவபுரத்தை தன்னிறைவு பெற்ற ஒன்றாக அமைக்க, சாலை, தெரு விளக்குகள், குடிநீர் வசதிகள் மற்றும் பொது விநியோகக் கடை (தேவையின் அடிப்படையில்) ஆகிய வசதிகள் ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தந்தை பெரியாரின் திருவுருவச் சிலை ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் நிறுவப்பட்டு வருகிறது.

2010–11 ஆம் ஆண்டில் 36 சமத்துவபுரங்கள் சுமார் ரூ.75 கோடி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.

## 5.7 ஊரக கட்டமைப்புத் திட்டம்

1.4.2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் மத்திய அரசால் நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, கட்டடங்கள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு சரியான திட்டம் ஏதும் இல்லை. மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துவதும் அவைகளை நீடித்து நிலைத்திருக்க

கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. இது குறித்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, **2008–09** ஆம் ஆண்டு, ஊரக கட்டமைப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.**350** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் **2009–10** ஆம் ஆண்டில் ரூ.**380** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. **2009–10** ஆம் ஆண்டிற்கான ரூ.**380** நிதி ஒதுக்கீட்டில், கிராம ஊராட்சிகளுக்கு ரூ.**200** கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.**120** கோடி மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.**60** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சிறு பாசன குளங்கள் பராமரிப்புப் பணிகளும் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஊரக கட்டமைப்புத் திட்டம் **2010–11** ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படவுள்ளதுடன் இத்திட்டத்திற்காக, ரூ.**380** கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

## 5.8 நபார்டு ஊரக உள்கட்டமைப்பு சாலைப் பணிகள்

### 5.8.1 ஊரக உள்கட்டமைப்பு நிதி XIV – 2008-09

**2007–08**ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களில் **2,691.73** கி.மீ. நீளமுள்ள ஊரக சாலைகளை மேம்பாடு செய்வதற்கான தமிழ்நாடு அரசின் கருத்துரு அடிப்படையில் நபார்டு வங்கி **2008–09**ம் ஆண்டிற்கு ரூ.**414.58** கோடி அனுமதித்துள்ளது. இதுவரை



**2,320.68** கி.மீ. சாலைப் பணிகள் ரூ.**296.36** கோடி செலவில் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் விரைவில் முடியும் நிலையில் உள்ளது.

### 5.8.2 ஊரக உள்கட்டமைப்பு நிதி XV – 2009-10

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் **2,822** கி.மீ நீளத்திற்கு மேம்பாடு செய்திட ரூ.**400.73** கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழக அரசு நபார்டு வங்கி நிதி உதவி கோரி பரிந்துரை செய்துள்ளது. முதல் கட்டமாக **1495.57** கி.மீ. சாலைப்பணிகள் ரூ.**200.09** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நபார்டு வங்கி மூலம் பெறப்பட்டு தற்போது அனைத்து மாவட்டங்களிலும் செயல்பாட்டில் உள்ளன.

## 5.9 பன்னிரண்டாவது நிதிக்குழு மான்யம் சாலைப் பணிகள் 2009–10 மற்றும் 2010–11

**2009–10**ம் ஆண்டில், ரூ.**103.60** கோடி மதிப்பீட்டில் **1727.40** கிமீ நீளத்திற்கு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. **2009–10** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளின் வழியாக செல்லும் மற்றும் இணைக்கும், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பழுதடைந்துள்ள தார்ச்சாலைகளை முன்னுரிமையின் அடிப்படையில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை 1194.37 கி.மீ சாலைப்பணிகள் ரூ.62.25 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2010–11 ஆம் ஆண்டில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பழுதடைந்துள்ள தார்ச்சாலைகளை பராமரிக்க இத்திட்டத்தின் கீழ் மேலும் ரூ.103.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5.10 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டம்

நக்சலைட்டுகளின் வளர்ச்சியை தடுத்திட பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் சிறப்பு திட்டமாக 2003–04ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2009–10ம் ஆண்டில் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2009–10ம் ஆண்டில், புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், இளைஞர்களுக்குத் தேவையான பல்வேறு தொழில் சார்ந்த தளவாட கருவிகள் அளித்தல், ஏழை மாணவர்களுக்கு மானியத் தொகையில் கல்விக்கடன் வழங்குதல், ஊனமுற்றோர், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தனிநபர் கடன் வழங்குதல் போன்றவைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 2010–11ம் ஆண்டிற்கும் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



# 6. பகுதி – II திட்டங்கள்

**6.1** பனகல் மாளிகையில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்தில் உள்ள மாநாட்டு கூட்ட அரங்கு, கூட்ட அறை புதுப்பித்தல் மற்றும் இன்வெர்ட்டர்கள் வாங்க ரூ.50 லட்சம் அரசாணை நிலை எண் 81 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (எஸ்,ஜி.எஸ் 4) நாள் 03.08.2009ன் படி அரசு அனுமதித்துள்ளது. 2010–11ம் ஆண்டிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரக அலுவலகக் கட்டிடத்தின் ஐந்தாவது தளம் சீரமைக்க ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.2 அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

கோயம்பத்தூர் மாவட்ட வளர்ச்சிப் பிரிவுக்கான அலுவலகக் கட்டடம் மற்றும் நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.125 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.3 குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் குடியிருப்புக் கட்டடம் கட்ட ரூ.28.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.4 தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

தமிழ்நாடு தேர்தல் ஆணையத்திற்கு ரூ.8.00/– லட்சம் மதிப்பீட்டில் கணினிகள் மற்றும் ரூ.0.30 லட்சத்தித்தில் நிகரி இயந்திரம் வாங்குவதற்கு அரசாணை நிலை எண் 83 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (எஸ்,ஜி.எஸ் 4) நாள் 03.08.2009ன் படி அரசு அனுமதித்துள்ளது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு 2 வாகனங்கள் வழங்க ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.5** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு செயலகத்திற்கு கணினிகள், மற்றும் துணை கருவிகள், அச்சு இயந்திரம் , நிகரி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்க ரூ.6.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஏழை, எளிய மற்றும் நலிவுற்ற பிரிவினரையும் உள்ளடக்கிய அனைத்துத் தரப்பு மகளிருக்கும் சம உரிமை மற்றும் சம வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையில் மகளிருக்கான வளர்ச்சித் திட்டங்களை முனைப்புடன் நிறைவேற்றிட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இந்த நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மகளிர் திட்டம், பன்னாட்டு வேளாண்மை



வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப் படும் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் கிராமப்புற ஏழைகளுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் முக்கிய வறுமை ஒழிப்புத் திட்டமான பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் படிப்படியாக வளர்ந்து தற்போது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு சமுதாயத்தில் உள்ள ஏழை, எளிய மற்றும் நலிவுற்ற மகளிரை இணைத்து ஒரு மாபெரும் சக்தி வாய்ந்த இயக்கமாக இயங்கி வருகிறது.

மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு இயக்கத்தை மாநிலத்தில் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

### 7.1 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினை மறுசீரமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்

சுய உதவிக் குழுக்களுக்கான பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகவும் நல்ல ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தும் வகையில் சூலைத் திங்கள் 2006 முதல் இந்நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்

நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிறுவனம் செம்மையாகச் செயல்பட வழிகாட்டும் வகையில் அரசாணை எண். 148 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–II) துறை நாள் 12.10.2006ன்படி தொழில் நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் குழுமம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

வட்டார அளவில் கண்காணிப்பு பணிகளை வலுப்படுத்தும் வகையில் அரசு ஆணை நிலை எண். 106, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–I) துறை நாள் 20.06.2007ல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி), மற்றும் இதர அலுவலர்களை மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் ஆணை பிறப்பித்தது.

மாவட்ட திட்ட அலுவலகத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் கூடுதலாக 30 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்கள் அரசாணை நிலை எண். 177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-II) துறை நாள் 05.12.2006 மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்டங்களை முனைப்பாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக மாவட்ட அலகில் ஒப்பந்த அடிப்படையில் உதவித் திட்ட அலுவலர்களை நியமனம் செய்வதற்கு அரசாணை



நிலை எண். 30, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–II) துறை நாள் 08.03.2007ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை நிலை எண்.108 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–I) துறை நாள் 21.06.2007ன் அடிப்படையில் தலைமை அலுவலகத்தில் கண்காணிப்பை வலுப்படுத்த மூன்று கூடுதல் இயக்குநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறப்பு அமைப்பான தமிழ்நாடு மகளிர் சுய உதவிக் குழு நலச் சங்கம் அரசாணை எண். 14 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–III) துறை நாள் 04.02.2010ன்படி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

## 7.2 மகளிர் திட்டம்

இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் மக்கள் அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. மகளிர் திட்டத்தின் கீழ் மார்ச் 2010 வரை 69.91 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு 4,41,311 சுய உதவிக் குழுக்கள் இயங்குகின்றன. இவற்றின் மொத்தச் சேமிப்புத் தொகை ரூ. 2,568 கோடியாகும். கடந்த

நான்கு ஆண்டுகளில் 18.92 இலட்சம் மகளிரைக் கொண்டு 1,25,493 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. இப்பயிற்சிகள் மகளிரின் மனப்பாங்கில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் சிறப்பாகவும், ஒற்றுமையுடனும் செயல்பட வழி வகுக்கிறது.

சுய உதவிக் குழுவின் கோட்பாட்டை அறிமுகப்படுத்த, அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் பயிற்சி 4 பாடத் திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது. சுய உதவிக்குழு நிர்வாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதி ஆகியோருக்கு 6 நாட்களில் 3 பாடத் திட்டங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகள் குழுவை வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாக செயல்படும் திறன் மற்றும் பதிவேடுகளை பராமரிக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது.

### 7.2.1 குழு அமைத்தல்

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுமெனில், சுமார் ஒரு இலட்சம் புதிய சுய உதவிக் குழுக்கள் மாநிலத்தில் அமைக்கப்பட வேண்டும்



என மதிப்பிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 2009–10 ஆம் ஆண்டில் 50,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. 2010–11 ஆம் ஆண்டில் மேலும் 50,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் வெற்றிகரமாக சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பினும் பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் அனைவரையும் உள்ளடக்கி குழுக்கள் அமைக்கப்படவில்லை. எடுத்துக் காட்டாக 2007–08 ஆம் ஆண்டின் துவக்கத்தில் மாநிலத்தில் உள்ள 3,644 கிராம ஊராட்சிகளில் சுய உதவிக் குழுவில் இணைந்த தகுதி உள்ள மகளிரின் எண்ணிக்கை 25 விழுக்காட்டிற்குக் குறைவாகவும், 5,014 கிராம ஊராட்சிகளில் 25 விழுக்காடு முதல் 50 விழுக்காட்டிற்கு உட்பட்டதாகவும் இருந்தது. அதைப்போல மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களில் 50 விழுக்காட்டிற்குக் குறைவானவர்களே சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக இணைந்திருந்தனர். எனவே 2008–09ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட இனங்களில் புதிய குழுக்கள் அமைக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரிந்த பெண் தொழிலாளர்களைக் கொண்டு 25,304 சுய உதவிக் குழுக்களும், குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம

ஊராட்சி பகுதிகளில் **19,696** சுய உதவிக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் நகர்ப்புற பகுதிகளில் குடிசைவாழ் மகளிர் போன்ற ஏழை, எளிய மற்றும் நலிவுற்ற பிரிவினரைக் கொண்டு ஆயிரத்திற்கும் குறைவான சுய உதவிக் குழுக்களே **2006–07**ஆம் ஆண்டு தொடக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தன. எனவே கடந்த நான்கு ஆண்டுகளில் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்கள் அமைத்திட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. **31.03.2010** வரை நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் **38,000**க்கும் அதிகமான சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2010–11** ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணி புரிந்த பெண் தொழிலாளர்கள், நகர்ப்புற குடிசைப் பகுதிகள் மற்றும் குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிப் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். **31.03.2010** வரை அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் விவரம் **அட்டவணை – 18ல்** கொடுக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை – 18**

**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்**

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 4,41,311 |
| மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 69.91 இலட்சம் |
| ஊரக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3,02,092 |
| ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 48,33,472 |
| நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,39,219 |
| நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 21,57,894 |
| மொத்த சேமிப்புத்தொகை | ரூ. 2,568 கோடி |
| வங்கிக் கடன் இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4,02,046 |
| மொத்த வங்கிக் கடன் தொகை | ரூ. 8,129.61 கோடி |

### 7.2.2 தொண்டு நிறுவனங்கள்

குழு அமைத்தல், குழுக்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் குழுக்களை கண்காணித்தல் ஆகிய பணிகளை மகளிர் திட்டம் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துகிறது. இப்பணிகளை மேற்கொள்ள தொண்டு நிறுவனங்களுக்கு, குழு அமைப்புக் கட்டணம், குழு

கண்காணிப்புக் கட்டணம், வங்கிக் கடன் பெற்றுத் தருவதற்கான ஊக்கத் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன.

அரசாணை எண் 155 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–I) துறை நாள் 05.09.2007ல் திருத்தி அமைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி 31.03.2010 வரை 469 தொண்டு நிறுவனங்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை, பணியின் தரத்திற்கு முக்கியத்துவம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் தொண்டு நிறுவனங்கள் போல செயல்பட வாய்ப்பு போன்ற முக்கிய அம்சங்கள் புதிய ஒப்பந்தத்தில் உள்ளன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் செயல் திறன் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

### 7.2.3 சமுதாய பயிற்றுநர்

சுய உதவிக் குழு இயக்கத்தில் நிலைத்த தன்மையை ஏற்படுத்திடவும், மேலும் அவ்வியக்கத்தை சமுதாயம் சார்ந்த அமைப்பாக மாற்றிடவும் ஏதுவாக சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து 5,000 சமுதாய வளப் பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுய உதவிக் குழுக்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகளை மேற்கொள்வதோடு சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்குத்



தேவையான தொடர் வழிகாட்டுதலையும் அளிக்கிறார்கள். மேலும் இவர்கள் மற்ற அரசுத் திட்டங்களுக்கான தகவல், கல்வி தொடர்புகளை மேற்கொள்ளும் கருவிகளாக இருப்பதோடு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ள சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி கொடுப்பதிலும் ஈடுபடுகின்றார்கள்.

### 7.2.4 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆறு மாதங்கள் முடிவுற்ற நிலையில் முதல் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றன. இந்த தரப்படுத்தலில் தேர்ச்சிப் பெற்ற சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெற தகுதி பெறுகின்றன.

2006–07க்கு முன் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. நகர்ப்புற குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்க 2006–07 ஆம் ஆண்டில் அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் மாநிலத்திலுள்ள 87,939 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 87.93 கோடி சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதைப்போல கடந்த நான்கு ஆண்டுகளில் 1,93,944 ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 10,000/– சுழல் நிதி மானியமாக மொத்தம்

ரூ. **193.94** கோடி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் **2006–07** முதல் **2009–10** வரை உள்ள நான்கு ஆண்டுகளில் **2,81,883** சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் **281.88** கோடி சுழல் நிதி மானியமாகவும் அத்துடன் ரூபாய் **1164.23** கோடி வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. சுழல் நிதிக்கான ஒதுக்கீட்டை அரசு அதிகப்படுத்தி வழங்கியதால் தரப்படுத்தலில் தேர்ச்சிப் பெற்ற சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெற ஆறு மாதங்கள் முதல் நான்கு ஆண்டுகள் வரை காத்திருந்த நிலை வெகுவாக குறைந்து காத்திருப்பு காலம் இல்லாத நிலை உருவாகியுள்ளது. **2010–11** ஆம் ஆண்டு மேலும் **65,000** சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படும். **2006–07** ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட சுழல் நிதி விவரம் **அட்டவணை 19–ல்** கொடுக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை – 19**

**ஆண்டு வாரியாக சுழல்நிதி வழங்கிய விபரம்**

| ஆண்டு | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | | | நிதி உதவி (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஊரகம் | நகரம் | மொத்தம் | மானியம் | கடன் | மொத்தம் |
| 2006-07 | 19,024 | 5,000 | 24,024 | 24.02 | 36.04 | 60.06 |
| 2007-08 | 18,563 | 25,000 | 43,563 | 43.56 | 65.34 | 108.91 |
| 2008-09 | 1,06,047 | 43,953 | 1,50,000 | 150.00 | 739.69 | 889.69 |
| 2009-10 | 50,310 | 13,986 | 64,296 | 64.30 | 323.16 | 387.46 |
| **மொத்தம்** | **1,93,944** | **87,939** | **2,81,883** | **281.88** | **1,164.23** | **1,446.12** |

### 7.2.5 கடன் இணைப்பு

சுய உதவிக் குழுக்கள் சுய சார்புத்தன்மைப் பெறவும், அவர்களின் கிராமப்புற கடன் சுமையைக் குறைக்கவும், வங்கிக் கடன் முக்கிய காரணியாக திகழ்கிறது. வங்கிகள் சாதாரணமாக சுய உதவிக் குழுக்களுக்கு அரசு அளிக்கும் ரூ.**10,000/–** மானியத்துடன் வங்கிக் கடனாக ரூ. **10,000/–** முதல் ரூ. **30,000/–** வரை வழங்கி வந்தன. ஆனால் இந்த

வங்கிக் கடன் அளவு சுய உதவி குழுக்களின் கடன் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யக் கூடிய அளவில் இல்லை. எனவே அரசு சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டு சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் அளவை அதிகரித்து பல்வேறு நிலைகளில் பன்மடங்காக வங்கிக் கடன் வழங்க ஆவண செய்துள்ளது. அரசு எடுத்த இந்த நடவடிக்கையால் மாநிலத்தில் உள்ள வங்கிகள் சுய உதவிக் குழுக்களுக்கு முதல் வங்கிக் கடன் இணைப்பாக குறைந்தபட்சம் ரூ. 50,000/–ம், ரூ. 1 இலட்சம் மற்றும் ரூ.1.50 இலட்சம் இரண்டு மற்றும் மூன்றாம் வங்கிக் கடன் இணைப்புகளாகவும் வழங்கத் தொடங்கியுள்ளன. சுய உதவிக் குழுக்களுக்கு குறித்த காலத்தில் போதுமான கடன் தொகை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் இருந்து இரண்டாவது மற்றும் தொடர் மறுகடன் இணைப்பு பெற அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் விவரம் **அட்டவணை – 20ல்** கொடுக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை – 20**

**கடன் இணைப்பு விபரம்**

| வ.எண் | ஆண்டு | சாதனை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | 2001 வரை | 120.30 |
| 2 | 2001 – 02 | 97.91 |
| 3 | 2002 – 03 | 184.65 |
| 4 | 2003 – 04 | 271.32 |
| 5 | 2004 – 05 | 490.62 |
| 6 | 2005 – 06 | 600.44 |
| 7 | 2006 – 07 | 593.45 |
| 8 | 2007 – 08 | 804.70 |
| 9 | 2008 – 09 | 2,174.57 |
| 10 | 2009 –10 | 2,791.65 |
| | மொத்தம் | **8,129.61** |

மகளிர் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மார்ச் 2006 வரை சுய உதவி குழுக்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 1,765.24 கோடி ஆகும்.

ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் அரசு மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின் காரணமாகவும் மாநிலத்தில் உள்ள வங்கிகளின் முழு ஒத்துழைப்பின் காரணமாகவும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 6,364.37 கோடியை எட்டியுள்ளது. 2010–11 ஆம் ஆண்டுகளில் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வங்கிக் கடன் அளவினை அதிகரிப்பதற்கும் குறிப்பாக மறு கடன் வழங்குவதற்கும், வங்கிக் கடன் இலக்காக ரூ. 3,000 கோடியை 2010–11ஆம் ஆண்டிற்கு அரசு நிர்ணயித்துள்ளது.

வங்கிகளில் இருந்து பெற்றுள்ள கடனுக்கு மேலாக சுய உதவிக் குழுக்களுக்குத் தேவைப்படும் நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வழங்குவதன் மூலம் அவற்றை அதிக வட்டிக்கு கடன் வழங்கும் கந்து வட்டிக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் ஒரு சமுதாயம் சார்ந்த நிதி நிறுவனமாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2008–09ஆம் ஆண்டு 102 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகளால் ரூபாய் 27.52 கோடி பெருங்கடனாக அனுமதிக்கப் பட்டுள்ளது, 2010–11ஆம் ஆண்டிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிதியிடையீட்டாளர் பணியினை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ளும்.



### 7.3 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

தமிழ்நாடு அரசு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தும் மகளிர் திட்டத்தின் கீழ் கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 4.41 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பெற்ற வெற்றியின் அடிப்படையில் இவ்வியக்கத்தினை மேலும் வலுப்படுத்தி நிலைத்தத் தன்மையை ஏற்படுத்தும் வகையில் ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்கிட அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, மாநிலத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்குமான ஒரு களமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஆற்றல்களையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாகவும் சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள வகையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள் தங்களது ஊராட்சிகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சிகள் வழங்கி

அவற்றை பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய இயலும்.

- 2006–07 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை வலுப்படுத்தும் வகையில் ஆதார நிதி வழங்குதல், சிறந்த கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருது மற்றும் கூட்டமைப்பு நிருவாகிகளுக்கு பயிற்சியளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி சனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு ஆணை எண். 125 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி– III) துறை நாள் 21.07.2008 ல் அரசு உத்தரவிட்டுள்ளது.
- இக்கூட்டமைப்புகள் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும் வங்கிகள் மூலம் எளிதாகக் கடன் பெறவும் வழி வகை செய்யும் வகையில் இக்கூட்டமைப்புகளை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் பதிவு செய்ய அரசு உத்திரவிட்டுள்ளது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 விதிகள் 25 மற்றும் 42 ன் செயல்பாட்டில் இருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விலக்களித்து அரசாணை எண். 111 வணிகவரி மற்றும் பதிவுத் (எம்1) துறை நாள் 17.11.2008ல் அரசு உத்தரவிட்டது. இந்த விலக்களிப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகுக்கிறது.
- மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் வரும் மூன்று ஆண்டுகளில் தரமாக மறுசீரமைக்க செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை மகளிர் திட்டத்தின் கீழ் 1,407 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. 2010–11ஆம் ஆண்டில் மேலும் 3,780 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, கூட்டமைப்பு மற்றும் குடியிருப்பு அளவிலான மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மைப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வலுப்படுத்தப்படும். அத்துடன் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு சமூகத் தணிக்கை, தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல் போன்ற இனங்களில் கூடுதல் பயிற்சி வழங்கப்படும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு 6 மாதங்கள் முடிவுற்ற பின் அவை அனைவரின் பங்கேற்பு, உள்ளடக்கம், சிறந்த மற்றும் வெளிப்படையான நிர்வாகம், கடன் ஒழுக்கம் மற்றும்

சமூக மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் போன்ற குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்யப்படும்.

### 7.3.1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத்தொகை

சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் அளிக்கப்படும் என அரசு அறிவித்து, அதற்காக 2009–10 ஆம் ஆண்டில் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்தது. தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 1,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

2010–11 ஆம் ஆண்டு மேலும் 4,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இதற்காக ரூபாய் 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 7.3.2 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

கூட்டமைப்புகள் சமுதாய அளவில் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெற்றுத் தரும் நிதி நிறுவனமாக வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த வகையில் தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இணைப்பு பெறுவதற்கும், வங்கிகள் மூலம் பெருங்கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடனாக கொடுப்பதற்கும் தகுதி பெறுகின்றன. சில மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் வழங்கப்பட்டது. இந்த கூட்டமைப்புகளிடமிருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் வங்கிகளிடமிருந்து கூட்டமைப்புகள் பெருங்கடன் பெற்று, அதனை சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்குவதிலும், கொடுத்த கடனை வட்டியோடு திரும்பப் பெற்று அதனை முறையாக தவணை தவறாமல் வங்கிகளுக்கு மீளச் செலுத்துவதிலும் வெற்றிகரமாக செயல்பட முடியும் என தெரிய வந்தது. 2009–10 ஆம் ஆண்டில் 102 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 27.52 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.

## 7.4 இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி

தமிழ்நாட்டில் சமீபகாலங்களில் ஏற்பட்டுள்ள பெரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தொழிற்திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. வளர்ந்து வரும் பொருளாதாரச் சூழலில் பெருகி வரும் வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்தி உரிய வேலை பெற்றிட, திறன் பெறாத மற்றும் பகுதித் திறன் பெற்ற இளைஞர்களுக்கு

தொழிற்பயிற்சி அளிப்பது இன்றியமையாததாகும். ஊரக இளைஞர்களுக்கு உரிய தொழிற்பயிற்சி வழங்கித் தயார்படுத்திடவும், அவர்கள் வருமானம் ஈட்டக்கூடிய வேலை வாய்ப்பினைப் பெற்றிடவும் தமிழ்நாடு அரசு **2006–07** ஆம் ஆண்டு இளைஞர் தொழிற் பயிற்சித் திட்டத்தினை அறிமுகம் செய்தது. இத்திட்டம் கடந்த நான்கு ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் **56,748** இளைஞர்கள் பல்வேறு வகையான தொழில்களில் தொழிற்பயிற்சி பெற்றுள்ளனர். தொழில்வாரியாக இளைஞர்கள் பயிற்சி பெற்ற விபரம் **அட்டவணை – 21ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை – 21**

**தொழில் வாரியாக பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை**

| வ. எண் | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணினிப் பயிற்சி – வன்பொருள் மற்றும் மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவை பயிற்சி | 10,845 |
| 2 | கட்டுமான உபகரணங்கள் | 9,757 |
| 3 | ஓட்டுநர் பயிற்சி மற்றும் தானியங்கி தொழில் நுட்பம் | 8,786 |
| 4 | ஆயத்த ஆடைகள் மற்றும் ஜவுளி | 6,269 |
| 5 | செவிலியர் பயிற்சி | 5,459 |
| 6 | இதர பிரிவுகள் | 15,632 |
| | மொத்தம் | **56,748** |



ஆண்டு வாரியாக இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்ற விபரம் **அட்டவணை – 22ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை – 22**

**ஆண்டுவாரியாக தொழிற்பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை**

| வ. எண் | ஆண்டு | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2006–07 | 5,634 |
| 2 | 2007–08 | 5,851 |
| 3 | 2008–09 | 25,123 |
| 4 | 2009–10 | 20,140 |
| | மொத்தம் | **56,748** |

**2010–11** ஆம் ஆண்டில் மேலும் **25,000** இளைஞர்களுக்கு ரூ. **20** கோடி மதிப்பீட்டில் தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படும்.

மகளிர் தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு குறிப்பாக நகர்ப்புற குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் ஆர்வம் காட்டும் தொழில்களில் சிறந்த நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. **2010–11**ஆம் ஆண்டு **4,000** பெண்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படும்.

### 7.5 மணிமேகலை விருதுகள்

சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை 2006 – 07 ஆம் ஆண்டு அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில், ஒரு சிறந்த சுய உதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான விருதுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன. இவ்விருதுகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவித்துள்ளன.

அரசாணை எண். 89 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை நாள் 05.08.2009ன்படி மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்படும் மணிமேகலை விருதிற்கான தொகை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாகவும், மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும், மாவட்ட அளவில்



தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் வழங்கப்படும் மணிமேகலை விருதிற்கான தொகை ரூபாய் 50,000/–லிருந்து ரூபாய் 1 இலட்சமாகவும், மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்படும் மணிமேகலை விருதிற்கான தொகை ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 25,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். 2008–09 ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் மணிமேகலை விருது பெற்ற சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் விபரம் **அட்டவணை – 23ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை –23**

**மணிமேகலை விருது பெற்ற சிறந்த கூட்டமைப்புகள்**

**2008–09**

| வ. எண் | மாவட்டம் | கூட்டமைப்பின் பெயர் |
|---|---|---|
| 1 | வேலூர் | ஏலகிரி கூட்டமைப்பு |
| 2 | நாமக்கல் | இராமாபுரம் கூட்டமைப்பு |
| 3 | திருவண்ணாமலை | படவேடு கூட்டமைப்பு |
| 4 | நீலகிரி | ஜக்கனாரை கூட்டமைப்பு |
| 5 | திருவாரூர் | மூன்றாம்சேத்தி கூட்டமைப்பு |

### 7.6 வங்கியாளர்களுக்கு விருது

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அதிக வட்டிக் கடனை திரும்பச் செலுத்துதல், தொழில் முதலீடு மற்றும்

அன்றாட செலவினம் போன்ற பல்வேறு கடன் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் வங்கியாளர்கள் மகளிர் மேம்பாட்டில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றனர். சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குவதில் மிகச் சிறப்பாக செயலாற்றிய வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை சிறப்பு செய்யும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கியாளர்களுக்கான விருதினை தோற்றுவித்து அரசு ஆணையிட்டுள்ளது. இவ்விருதுகள் சிறப்பாக செயல்படும் வங்கியாளர்களை மேலும் ஊக்கப்படுத்துவதோடு வங்கியாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியையும் ஏற்படுத்திடும்.

மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும், மாவட்ட அளவில் ஒரு வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகளுக்கும் இந்த விருதுகள் வழங்கப்படும். **2008–09**ஆம் ஆண்டில் மாநில அளவில் வங்கியாளர்கள் விருது பெற்ற வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகள் விவரம் **அட்டவணை–24ல்** தரப்பட்டுள்ளது.



**அட்டவணை – 24**

**I. வங்கியாளர் விருது – 2008–09மாநில அளவில் சிறந்த சேவை செய்த வங்கியாளர்களின் விபரம்**

| | |
|---|---|
| முதலாவது | இந்தியன் வங்கி |
| இரண்டாவது | பாரத மாநில வங்கி |
| மூன்றாவது | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி |

**II. மாநில அளவில் சிறந்த சேவை செய்த சுய உதவிக் குழுக்கான சிறப்பு வங்கிக் கிளைகளின் விபரம்**

| | |
|---|---|
| முதலாவது | இந்தியன் வங்கி, மைக்ரோ சேட்– I, சென்னை |
| இரண்டாவது | இந்தியன் வங்கி, மைக்ரோ சேட்– II, சென்னை |

**III. மாநில அளவில் சிறந்த சேவை செய்த பிற வங்கிக் கிளைகளின் விபரம்**

| | |
|---|---|
| முதலாவது | இந்தியன் வங்கி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் |
| இரண்டாவது | இந்தியன் வங்கி, புலிக்கரை, தருமபுரி மாவட்டம் |
| மூன்றாவது | இந்தியன் வங்கி, காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| | இந்தியன் வங்கி, மத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம் |

## 7.7 சுய உதவிக்குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

சுய உதவிக்குழு மகளிர் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன் பெறவும் உதவும் வகையில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்த அடையாள அட்டையில் சேமிப்பு, தர மதிப்பீட்டின் நிலை, குழு பெற்ற கடன் மற்றும் குழு உறுப்பினர்களின் விவரங்கள் இருக்கும். 11 மாவட்டங்களில் மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 21 மாவட்டங்களில் 2010–11 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

## 7.8 பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம்

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், 1999–ம் ஆண்டு முதல் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வறுமைத் துயர் போக்கிடும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் போதுமான மற்றும் நிலையான வருமானத்தை ஏற்படுத்தித் தருவதன் மூலம் அவர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களைக் கொண்டு



பல்வேறு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. மேலும் இந்த சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர் பயிற்சி அளிப்பதுடன், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியும் பெற்றுத் தரப்படுகிறது. மேலும் அடிப்படைக் கட்டுமான வசதிகளையும், இந்த சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இதர உதவிகளையும் செய்வதன் மூலம் இக்குழுக்கள் நுண்கடன் பெறும் நிலையில் இருந்து சிறுதொழில் புரிந்திடும் நிலைக்கு உயர்ந்திட வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

மாநில அளவில் மகளிர் நல மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு 2008–09ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2010–11ஆம் ஆண்டிற்கு ரூ. 133 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ரூ. 220 கோடி கடன் வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயலாக்கம் செய்ய கீழ்க்கண்ட முயற்சிகள் 2010–11 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்:

- ஊரகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 50,000 தகுதி பெற்ற குழுக்களுக்கு சுழல் நிதி மான்யமாக ரூ. 50 கோடி வழங்கப்படும்.

- சுமார் 6,500 சுய உதவிக் குழுக்களுக்கு சுய தொழில் செய்திட கடன் வழங்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.1.25 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்கள் பெரிய அளவில் முக்கியத் தொழில்களை தேர்வு செய்யவும், அதனை ஊக்கப்படுத்தவும் மாவட்ட மற்றும் வட்டார அளவில் சரியான தொழில் தொகுப்புகளை உருவாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்தத் தொழில் சார்ந்த கூட்டமைப்புகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.
- இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் சுய உதவிக் குழுக்களுக்கு தரமான திறன் வளர் பயிற்சி சிறந்த நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும்.

### 7.8.1 தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்

மத்திய அரசு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை மறுசீரமைத்து தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது.



இத்திட்டம் 2010–11 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து குடும்பங்களையும் சுய உதவிக் குழுவில் இணைப்பது, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்குவது, சுழல் நிதி மானியத்தினை உயர்த்துவது, சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்குவது மற்றும் ஊரக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி போன்ற அம்சங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் உள்ள ஒருசில கூறுகள் ஏற்கனவே தமிழ்நாடு மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களில் உள்ளன. எனினும் இத்திட்டம் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை விட மேம்படுத்தப்பட்ட திட்டமாகும்.

### 7.8.2 சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

சுய உதவிக் குழுக்கள் தங்களது பொருட்களை சந்தையில் விற்பனை செய்யத் தேவையான அறிவு மற்றும் வணிகப் பேச்சுவார்த்தை நடத்தும் திறமை இல்லாததால், அவர்களுக்கு உதவிடும் வகையில், அரசு பல முயற்சிகளை

மேற்கொண்டுள்ளது. சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் நல்ல இணக்கத்தையும், கண்காணிப்பையும் ஏற்படுத்த தமிழ்நாடு சுய உதவிக் குழுக்கள் நலச் சங்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்த ரூ. 15.33 கோடி மதிப்பீட்டில் ஒரு பெரிய நிரந்தரமான வணிக வளாகம் சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டப்பட்டு அதன் பணி நிறைவு பெறும் தருவாயில் உள்ளது. அதேபோல் ஊரகப் பகுதிகளில் விற்பனையை மேம்படுத்தும் வகையில் ரூ. 13.50 கோடி மதிப்பீட்டில் 90 கிராமச் சந்தைகள் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று வீதம்) கட்டப்பட்டு வருகின்றன.

நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் விற்பனை மற்றும் கண்காட்சி அட்டவணை ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. 2009–10 ஆம் ஆண்டில் மாநில அளவில் இரண்டு விற்பனைக் கண்காட்சிகளும், மாவட்ட அளவில் 60ம், வட்டார அளவில் 125 விற்பனைக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் ரூ. 17.53 கோடி அளவில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. 2010–11 ஆம் ஆண்டில் மாநில அளவில்



இரண்டு, மாவட்ட அளவில் 60 மற்றும் வட்டார அளவில் 130 விற்பனைக் கண்காட்சிகளும் நடத்தப்படும்.

## 7.9 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் 2010–11 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 2010–11 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கவுள்ள பணிகள்:

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள், நகர்ப்புற குடிசை பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் குறைவான குழுக்களே அமைக்கப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து 50,000 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

- வங்கிக் கடனுடன் கூடிய சுழல் நிதி 65,000 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும். மேலும் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் சுமார் 6,500 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

- சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 3,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும்.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மறுசீரமைப்பு தரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு 3,780 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இவ்வாண்டு மறுசீரமைக்கப்பட்டு அவற்றின் நிர்வாகிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

- 4,000 தகுதி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

- 25,000 இளைஞர்களுக்கு இளைஞர் திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்படும்.

- மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கு மீதமுள்ள 21 மாவட்டங்களிலும் அடையாள அட்டை வழங்கப்படும்.

- சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்சார்ந்த தொகுப்புகள் உருவாக்கவும், அதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும்.



### 7.10 பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தினை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்துகிறது. கடலோரப் பகுதியில் உள்ள மக்களை தற்சார்புடையவர்களாக ஆக்குவதன் மூலம் அவர்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்குதல் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் ரூ. 298.57 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் 8 ஆண்டு காலத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களிலுள்ள 114 கடலோர ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சமுதாய கட்டமைப்பை உருவாக்குதல், மீன் விற்பனை சங்கங்களை அமைத்தல், சுய உதவிக் குழுக்களின் திறனை மேம்படுத்துதல், இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பேரிடர் தயார் நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டுகளில் மாநில அளவிலான திட்ட செயலாக்க அலகு, 6 மாவட்ட திட்ட செயலாக்க அலுவலகங்கள் மற்றும் 30 கிராம கூட்டு மேம்பாட்டு மையங்களுக்குத் தேவையான பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டனர். திட்டத்தை செயலாக்கும் 10 அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் (Facilitating NGO) 2 வள ஆதார மேம்பாட்டு அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் (Resource NGO) நியமிக்கப்பட்டன. அடிப்படை குடும்ப அளவிலான கணக்கெடுப்பு 1.55 இலட்சம் குடும்பங்களுக்கு எடுக்கப்பட்டு அந்த ஆய்வின் அடிப்படையில் திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. சமுதாய கட்டமைப்பு (Community Infrastructure) வசதிகளை அமைப்பதற்காக மக்கள் பங்கேற்புடன் கூடிய வள ஆதார வரைப்படத்தின் அடிப்படையில் நுண் திட்டங்கள் மூலம் கண்டறியப்பட்ட 681 பணிகள் 2010–11 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். துயர் துடைப்பு நிதியின் கீழ் தனி நபர் இழப்பீட்டு தொகை மற்றும் இதை செயல்படுத்துவதற்கு உண்டான வழிகாட்டி முறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 7,414 சுய உதவிக் குழுக்களுக்கான கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு அவற்றில் 1,044 குழுக்கள் ஆற்றல் குறைந்தவையாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரை 7 மீன் விற்பனை சங்கங்கள் (நாகப்பட்டினம் – 3, கன்னியாகுமரி – 3 மற்றும் கடலூர் – 1) ஆரம்பிக்கப்பட்டு 293 மீனவர்கள் கடனிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். கடலோரப் பள்ளிகளுக்கான திட்டத்தில் பேரிடர் தயார் நிலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த கல்விப் பயணம் 30,215 மாணவர்களுக்கும் மற்றும் இரண்டு நாள் பயிற்சி 3,305 ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.



### 7.10.1 சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் 2010–11 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

2010–11 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- கடலோர பகுதி வள ஆதார மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண் திட்டங்கள் மூலம் 114 கடலோர ஊராட்சிகளில் 681 சமுதாய கட்டமைப்புத் தேவைகள் கண்டறியப்பட்டு, அதற்குரிய கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், மீன் வளத்தினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- துயர் குறைப்பு நிதி மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும். புதிய முயற்சிக்கான மூலதன நிதி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சிறு தொழில் வளர்ச்சிக்காக மாற்றம் செய்யப்படும்.

- பத்து மீன் விற்பனைச் சங்கங்கள் மற்றும் மீனவர்களுக்கான இணையம் அமைக்கப்பட்டு அச்சங்கங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், இச்சங்கங்களிலுள்ள மீனவர்கள் கடனிலிருந்து விடுவிக்கப்படுவர். பத்து மீன் இறக்கு தளங்கள், பழுது நீக்கும் நிலையம் ஒன்று மற்றும் ஒரு படகு கட்டும் துறை ஏற்படுத்தப்படும்.

- ஆறு திட்ட மாவட்டங்களில், 1,000 இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சியும், 1,044 ஆற்றல் குறைந்த குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சியும் அளிக்கப்படும்.

- மறுசீரமைக்கப்பட்ட பின்னர், 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி வழங்கப்படும்.

திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக தமிழக அரசு இதுவரை ரூ. 30.53 கோடி வழங்கியுள்ளது. 2010–11 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 37.12 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 8. உலக வங்கி உதவி பெறும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தமிழ்நாடு அரசு ஏழை எளிய மக்களின் வறுமையை ஒழிக்கவும், சமூக ஏற்றத்தாழ்வுகளை களையவும் செயல்படுத்தும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் முக்கியமானதொன்று. மக்களே முன்நின்று கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு செயலாற்ற தேவைப்படும் அனைத்து உதவிகளையும் இத்திட்டம் அளிக்கிறது. இத்திட்டம் அக்டோபர் 2006 முதல் இம்மாநிலத்தில் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது. இது உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் 6 ஆண்டு திட்டம். இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.717 கோடி.

இத்திட்டத்தின் குறிக்கோள் ஏழை எளியோர், ஒதுக்கப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர் ஆற்றல் பெறுதல் மற்றும் அவர்கள் நிலையான வாழ்வாதாரத்தை எட்டிடுதல் ஆகும். மக்கள் அமைப்புகளை உருவாக்கி, அவற்றை வலுப்படுத்துவதுடன், ஏழை எளியோரின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தி, திட்ட செயல்பாடுகளில் வெளிப்படையான நிர்வாகத்தை உறுதி செய்து, மக்களையே அவர்களின் முன்னேற்றத்திற்குப் பொறுப்பேற்க இத்திட்டம் செயல்படுகிறது. இக் குறிக்கோள்களை அடைய இத்திட்டம் உயிர் மூச்சு கொள்கைகளைப் பின்பற்றுகிறது.

## 8.1 திட்ட செயலாக்கப் பகுதிகள்

இத்திட்டம் 16 மாவட்டங்களில் (புதிதாக துவக்கப்பட்ட திருப்பூர் மாவட்டம் உள்ளடங்கிய), மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களிலுள்ள 2,515 ஊராட்சிகளில் 5.2 லட்சம் குடும்பங்களுக்காக செயல்படுத்தப்படுகிறது.

**அட்டவணை—25**

**திட்டச் செயலாக்க விவரம்**

| கட்டம் | வட்டாரங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | திட்டம் தொடங்கப் பட்ட மாதம் |
|---|---|---|---|
| 1. | 15 | 578 | அக்டோபர் 2006 |
| 2. | 15 | 585 | ஏப்ரல் 2007 |
| 3. | 20 | 635 | பிப்ரவரி 2008 |
| 4. | 20 | 717 | பிப்ரவரி 2009 |

## 8.2 திட்ட செயலாக்க அமைப்புகள்

திட்டசெயல்பாடு மற்றும் அதன் மேற்பார்வையை ஏற்று வழி நடத்த மாநில அளவிலான சங்கம் ஒன்று உள்ளது. திட்டம் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்டச் செயல்பாட்டை நடத்திட மாவட்ட அளவிலான ஒரு சங்கம் உள்ளது. 10–15 ஊராட்சிகளை உள்ளடக்கிய



பகுதிக்குப் பல்முனை திறன் படைத்த 5 பணியாளர் அடங்கிய ஒரு திட்ட ஒருங்கிணைப்பு அணி உள்ளது. கிராம ஊராட்சி அளவில், திட்ட செயல்பாட்டிற்கு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் பொறுப்பாகிறது. கிராம அளவில் திட்ட கோட்பாடுகள் பின்பற்றப்படுவதை சமூக தணிக்கை குழு உறுதி செய்கிறது.

## 8.3 திட்டச் செயல்முறை

திட்ட குறிக்கோள்களை அடைய, இத்திட்டம் கீழ்கண்ட செயல்முறைகளைப் பின்பற்றுகிறது:

### 8.3.1 துவக்க நடவடிக்கைகள்

**செய்தி பரப்புரை**

திட்டக் குறிக்கோள்கள், உயிர் மூச்சுக் கொள்கைகள் மற்றும் திட்டம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் மக்களை சென்றடைவதற்கான, வேண்டிய தகவல் தொடர்பு பொது விளம்பர நடவடிக்கைகள் திட்டத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறிதல்**

மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு நடத்தப்பட்டு சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை அடிப்படையில் திட்ட இலக்கு மக்களாகிய ஏழை எளியோர்,

நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர் கண்டறியப்படுகின்றனர். இது மிக எளிதான, வெளிப்படைத்தன்மையுடைய, முடிவுகளை சரிபார்க்கும் வகையிலான, ஆற்றல் மிக்க ஒரு செயல்முறையாகும். இந்த செயல்முறை அடிப்படையில் இலக்கு மக்கள் கண்டறியப்பட்டிருப்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன், இலக்கு மக்களின் அங்கீகாரத்துடன் அவர்களால் முழுமையாக உரிமைக் கொண்டாடப்பட்டுள்ளது.

### 8.3.2 மக்கள் அமைப்புகளை உருவாக்குதல்

இத்திட்டமானது கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்கள், சமூக தணிக்கைக்குழுக்கள், சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற மக்கள் அமைப்புகளை ஏழை எளியோரிடையே உருவாக்குகிறது.

- **கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்** தகுதியான அனைத்து இலக்கு மக்களை உள்ளடக்கி அவர்களின் பெருவாரியான பங்கேற்புடன் உருவாக்கப்படும் ஒரு தன்னாட்சி பெற்ற மக்கள் அமைப்பாகும். கிராம வறுமை ஒழிப்பு சங்கம், இலக்கு மக்களின் திறன் வளர்ப்புக்கான திட்டங்களை தீட்டி, அவற்றை கண்காணித்து நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோருக்கு உதவிட வேண்டிய நிதி மற்றும் அமைப்பு திறன்



கொண்டதாகும். கிராம ஊராட்சித் தலைவரை அலுவல் சாரா தலைவராகக் கொண்டுள்ள இச்சங்கத்தில், ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் இலக்கு மக்கள் பட்டியலிருந்து ஒரு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் பிரதிநிதியாகவும், ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்பின் ஒரு நிர்வாகியும், மாற்றுத் திறன் படைத்தோர் பிரதிநிதி ஒருவரும் மற்றும் இளைஞர் பிரதிநிதி இருவரும் உறுப்பினர்களாக இருப்பர். இச்சங்கம் கிராம சபை ஆளுகைக்கு உட்பட்டதாகும்.

- **சமூக தணிக்கை குழு,** கிராம சபையின் நேரடி கட்டுபாட்டின் கீழ் இயங்கும் ஓர் கண்காணிப்பு அமைப்பாகும். இது, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் தொழிற் கூட்டமைப்பு போன்ற அமைப்புகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் 5–7 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். திட்ட செயலாக்கம், திட்ட கோட்பாடுகளின் வரையரைகளுக்கு இணங்க அமைந்து, பலன்கள் இலக்கு மக்களை சென்றடைவதை, சமூக தணிக்கை குழு உறுதி செய்கிறது.

- **சுய உதவிக் குழுக்கள்** கிராம அளவிலான ஏழை மக்களின் அமைப்புகளாகும். விடுபட்ட இலக்கு மக்களைக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் இத்திட்டத்தால் உருவாக்கப்படுகின்றன. பழங்குடியினர்

மற்றும் மாற்றுத் திறன் படைத்தோரின் நலனுக்காக இவர்களை உள்ளடக்கிய சிறப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்படுகின்றன. சமூக சுயஉதவிக் குழு பயிற்றுநர்கள் சுய உதவிக்குழுக்களை வழிநடத்துவதுடன் கண்காணிக்கவும் செய்கின்றனர்.

- **ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்** சுய உதவிக்குழுக்களுக்கு தேவைப்படும் நிதி மற்றும் பிற உதவிகளை புரிந்திடும் இரண்டாம் நிலை அமைப்புகளாகும். ஏழை எளியோர் வறுமை பிடியிலிருந்து வெளிவர அவர்கள் அங்கம் வகிக்கும் சுய உதவிக்குழுக்களுக்கு தேவைப்படும் நிதி ஆதாரத்தை எளிதாகவும் நிலையாகவும் உரிய நேரத்தில் பெற்றிட உறுதுணையாக நிற்க ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளே ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள். மேலும் இவை சுய உதவிக்குழுக்கள் உருவாகுவதையும், அவைகளின் வளர்ச்சியையும் கண்காணிக்கின்றன.

- **மக்கள் கற்றல் மையம்** சமூக வல்லுநர்களுக்கான கூட்டமைப்பாகும். இந்த அமைப்பு மக்களாலேயே ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. திட்டத்தின் நிலைத்தன்மைக்கு அத்தியாவசியமான சமூக மூலதனம் ஏற்படுத்த உதவுவதுடன் மக்கள் தங்களது கற்றலையும், அனுபவ பரிமாற்றம், திறன் மற்றும் ஆற்றல்களை



பகிர்ந்து, மேம்படுத்திக் கொள்ள ஏதுவான ஒரு தளமாக அமைகின்றது.

### 8.3.3 திறன் வளர்ப்பு நடவடிக்கைகள்

திட்ட நடவடிக்கைகளை, மக்கள் அமைப்புகள் திட்டமிட்டு, நிதி திரட்டி, செயல்படுத்தி, கண்காணித்து, நிர்வகிக்க வேண்டிய திறன் வளர்ப்பை பெற்று தருவதற்கு ஏதுவாக இத்திட்டம் சீரான பயிற்சி, களப்பயணம் மற்றும் உள்கற்றல் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்து ஊக்கம் தருகின்றது.

### 8.3.4 நிதியிணைப்பு நடவடிக்கைகள்

திட்டத்தால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களில் அடங்கும் நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர், வறுமை ஒழிப்பு சங்கத்திலிருந்து தனிநபர் உதவி பெறுகின்றனர். இலக்கு மக்களில் இதுவரை சுய உதவிக்குழுக்களில் இணையாதவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சுய உதவிக்குழுக்கள், மாற்றுத் திறன் படைத்தோர் உள்ளடக்கிய சிறப்பு சுய உதவிக்குழுக்கள், மற்றும் திட்ட செயலாக்கத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்ட சுய உதவிக்குழுக்களின் தயார் நிலை மற்றும் நிதி மேலாண்மையை, தர மதிப்பீடு மூலம் கண்டறிந்து அவை வங்கிகளுடன் நிதியிணைப்பு பெற திட்டம் உதவி புரிகின்றது.

### 8.3.5 வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

வாழ்வாதாரத்தை மேம்படுத்தி இலக்கு மக்களின் குடும்ப வருவாயை பெருக்கிட ஒரு பல்முனை அணுகுமுறை பின்பற்றப்படுகிறது:

- தொழில் நிறுவனங்களின் மனித வள தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுய வேலை அல்லது பெரும் நிறுவனங்களில் பணியில் ஈடுபடும் வகையில் புகழ்பெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

- கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிதி ஆதாரம் மூலம் சிறுகடன்கள் வழங்கி தனிநபர் வாழ்வாதாரப் பெருக்கத்திற்கு வழிவகை செய்யப்படுகிறது.

- தற்சார்பு மற்றும் நிதி ஆதாரமுடைய தொழிற் கூட்டமைப்புகள் நிலைத்தன்மையுடன் செயல்படவும், உற்பத்தித் திறனை பெருக்கிட, இக்கூட்டமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு, நிதி ஆதாரம், தொழில் திட்டங்கள் தயாரிப்பதற்கான தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார நடவடிக்கையை மேலாண்மை செய்வதற்குத் தேவையான ஆற்றல் அளிக்கப்படுகிறது.



### 8.3.6 வலுப்படுத்தும் நடவடிக்கைகள்

சமூக வல்லுநர்கள், சுய உதவிக்குழுக்கள் போன்ற முதற் கட்ட மக்கள் அமைப்புகளைப் பேணி காத்திட இரண்டாம் கட்ட நிறுவனங்களான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மக்கள் கற்றல் மையங்கள் மற்றும் தொழிற் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வமைப்புகள் திட்ட காலத்திற்கு பின்னரும் முதற்கட்ட மக்கள் அமைப்புகள் நீடிக்க வழி கோலும்.

**சமூக மூலதனம் உருவாக்குதல்:**

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் சுய உதவிக்குழுக்களின் அனுபவமிக்க உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டு, சமூக வல்லுநர்களாக உருவாக்கப்படுகின்றனர்.

- கிராமங்களிலேயே தங்களின் திறனை வளர்த்து, தங்கள் பகுதி குறித்த அறிவும், செயல் அனுபவமும், கற்றதை மனமுவந்து பிறருடன் பகிர்ந்து சேவை செய்ய தயாராகவுள்ள சமூக வல்லுநர்களை, பிற கிராமங்கள் மற்றும் பிற துறைகளுக்கு பயிற்றுநர்களாக அனுப்புவதன் மூலம் இவர்களின் வருவாய் ஈட்டும் சந்தர்ப்பங்களை பெருக்குவதுடன் எப்போதும் சமுதாயத்தில் சமுதாய மூலதனம் நிலைத்திட இத்திட்டம் பெரும் உதவி புரிகிறது.

- குறைந்த செலவில், தேவைப்படும் சேவையை தரத்துடன் பெற்றிட வழிகோலும் வகையில் சமுதாய வல்லுநர்கள் ஒருங்கிணைந்து மக்கள் கற்றல் மையங்களை உருவாக்குகின்றனர்.

- மக்கள் நிலை ஆய்வு, சமுதாய வழிகாட்டி கையேடு, திறன் வளர்ப்பு, நிதி மேலாண்மை, கூட்டமைப்பு சார்ந்த நடவடிக்கைகள் போன்ற திட்ட செயல்பாடுகளில் சிறப்பு சேவை வழங்கிட அனுபவமிக்க சமூக வல்லுநர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

- வாழ்ந்து காட்டுவோம் திட்டப்பகுதிகளில் உள்ள பயிற்சி பெற்ற சமூக வல்லுனர்களின் சேவைகள், பலனளிக்கக்கூடிய வகையில் பல திட்டங்களில் தகவல் தொடர்பு பரப்புகைக்கு பயன்படுத்தப்படுவதுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்ட சமூக தணிக்கை குழு, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படாத மாவட்டங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆளுமை பயிற்சி, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சுய உதவிக்குழுக்களுக்கான பயிற்சி, முழு சுகாதாரம் மற்றும் நலவாழ்வு திட்டங்களின் கீழ் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் போன்றவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.



**செயல்பாடுகளை ஊக்குவித்தல்**

ஏழை எளியோரின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு ஆதரவாக திட்டப்பணியை முடுக்கிவிடும் கிராம ஊராட்சிகளுக்கு, ஊக்க நிதி வழங்கப்படுகிறது. இந்நிதியானது கிராம ஊராட்சியின் வெளிப்படைத்தன்மை, சமூக பொறுப்புணர்வு, சமத்துவம், ஈடுபாடு, பணித்திறன் மற்றும் திட்டத்தின் செயலாக்கத்திற்கு பங்களிப்பு போன்றவற்றை பொறுத்து அமையும். இது சமூக அமைப்புகளுக்கும், உள்ளாட்சி அமைப்பிற்கும் இடையேயான பிணைப்பினை வலுப்படுத்துவதுடன், இந்த அமைப்புகளுக்கிடையேயான தொடர்புகளின் சமுதாய பொறுப்புணர்வை மற்றும் வெளிப்படைத் தன்மை மேலோங்க வகை செய்கிறது.

## 8.4 திட்டத்தின் தாக்கம்

இத்திட்டம் நான்கு கட்டங்களாக 2,515 கிராம ஊராட்சிகளில் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. திட்டத்தின் முக்கிய சாதனைகள் வருமாறு :

### 8.4.1 ஏழை எளியோரை இணைத்தல்

விடுபடாமல் ஏழை எளியோரை இணைப்பதன் மூலம் சமத்துவம் மற்றும் பிரதிநிதித்துவம், திட்டத்தால் உறுதி

செய்யப்படுகிறது. இதன் மூலம் ஏழை, மிகவும் ஏழை, மாற்றுத் திறன் படைத்தோர் மற்றும் நலிவுற்றோர் கிராமப்புற மக்களமைப்புகளில் முக்கிய பங்கேற்க வழி பிறந்துள்ளது.

- இத்திட்டம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சமூக தணிக்கை குழு போன்ற 2,581 மக்கள் அமைப்புகளை உருவாக்கி இவற்றின் திறன்களை மேம்படுத்தியுள்ளது.

- இத்திட்டம் இதுவரை மிகவும் ஏழை எளியோர் மற்றும் நலிவுற்றோரைக் கொண்டு 17,927 சுய உதவிக்குழுக்களை உருவாக்கியுள்ளது.

- 1,489 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மறுசீரமைப்பின் வாயிலாக இலக்கு மக்களில் ஏழை எளியோர் பிரதிநிதித்துவம் பெற்று முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

### 8.4.2 நிதி இணைத்தல்

ஏழை இலக்கு மக்களை கொண்டு சுய உதவிக்குழுக்களை ஏற்படுத்தி இவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் இவர்கள் வங்கிகள் போன்ற அமைப்புகளின் மூலம் கடன் பெற இத்திட்டம் உதவியுள்ளது.



இதே போன்று, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் வங்கிகள் மூலம் கடன் பெற வழி வகை செய்யப்படுகிறது.

- இத்திட்ட நிதியிலிருந்து 14,310 சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ. 20,000 வரை ஆதார நிதி அளிக்கப்பட்டுள்ளது.

- புதிதாக உருவாக்கப்பட்ட 10,741 சுயஉதவி குழுக்கள் ரூ.60.68 கோடி சுழல் நிதி பெற்றுள்ளன. 1,322 சுய உதவிக்குழுக்கள் ரூ. 14.73 கோடி இராண்டாம் கட்ட வங்கிக் கடனாக பெற்றுள்ளன.

- ஏற்கனவே இருந்த 9,756 சுய உதவிக்குழுக்கள் ரூ. 47.25 கோடி சுழல்நிதியாக வங்கிகளிடமிருந்து பெற்றுள்ளன. மேலும், 3,573 சுய உதவிக் குழுக்கள் ரூ. 57.18 கோடி இரண்டாம் கட்ட வங்கிக் கடன் இணைப்புப் பெற்றுள்ளன.

- 944 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ரூ. 66.60 கோடி அமுதசுரபி நிதி பெற்றுள்ளன.

- ரூ. 34.69 கோடி நிதியை, 149 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனாக வழங்க வங்கிகள் ஆணை பெறப்பட்டுள்ளது.

### 8.4.3 ஒதுக்கப்பட்டோர் ஆற்றலளிப்பு

இத்திட்டம் மாற்றுத் திறன் படைத்தோர், நலிவுற்றோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரைச் சென்றடைந்து, அவர்களை சமுதாய நீரோட்டத்தில் இணைத்ததன் மூலம், அவர்களது உரிமையை நிலை நாட்ட வழிகோலியுள்ளது. இது இவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், சமுதாய அந்தஸ்தையும் பெற்றுத் தந்துள்ளது. மாற்றுத் திறன் படைத்தோர் மற்றும் நலிவுற்றோர், சமுதாய பொருளாதார மேம்பாடு அடையும் பொருட்டு, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதியில் 40% இவர்களுக்காக சிறப்பு நிதியாக ஒதுக்கப்படுகிறது.

- சுமார் **1,19,837** மாற்றுத் திறன் படைத்தோர் மற்றும் நலிவுற்றோருக்கான பலன்கள், திட்டத்தின் முயற்சியால் பல அரசுத் திட்டங்கள் மூலம் இவர்களுக்கு பெற்றுத் தரப்பட்டுள்ளன.

- **65,886** மாற்றுத் திறன் படைத்தோர், **6,144** சிறப்பு சுய உதவிக்குழுக்களில் இணைக்கப்பட்டு, இவற்றில் **3,348** குழுக்கள் ரூ.**18.70** கோடி சுழல்நிதியாகப் பெற்றுள்ளன.

- **72,123** மாற்றுத் திறன் படைத்தோருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.



- **94,496** மாற்றுத் திறன் படைத்தோர் மற்றும் நலிவுற்றோருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள தனிநபர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

- **9,727** மாற்றுத் திறன் படைத்தோர் இத்திட்டத்தின் மூலம் மாற்றுத் திறன் படைத்தோருக்கான உபகரணங்களைப் பெற்றுள்ளனர்.

- **4,290** மாற்றுத் திறன் படைத்தோர் மாதம் ரூ.**500/–** பராமரிப்பு மான்யம் பெறுகின்றனர். **3,253** நபர்கள் நிரமயா காப்பீடு திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர்.

### 8.4.4 பழங்குடி இன மக்களுக்கு ஆற்றலளிப்பு

பழங்குடியினருக்கு ஆற்றல் அளிக்கும் வகையில் பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு இத்திட்டம் கூடுதல் நிதி ஒதுக்கீடு அளிக்கிறது. இதே போல் பழங்குடியினர் குடும்பங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பழங்குடியினர் வாழ் பகுதியில் ஒருங்கிணைப்பாளர்களாக பணியாற்ற பழங்குடியினத்தவர்களே பணியமர்த்தப்படுகின்றனர்.

- **130** பிரத்தியேக பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- **33** பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள், பழங்குடி ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 8.4.5 பொருளாதார மேம்பாடு

கிராமத்தில் அமைந்துள்ள வளங்கள் மற்றும் திறன்களை பயன்படுத்தி வாழ்வாதார மேம்பாட்டிற்கு தீர்வு காணுதல் திட்டத்தின் ஒரு முக்கிய முயற்சியாகும். இதற்காக ஒரு பல்முனை உத்தி வகுக்கப்பட்டு அதன் கீழ் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பெற்று தரப்படுவதுடன், கிராமத்தில் இருக்கின்ற வாழ்வாதார வாய்ப்புகளை பெருக்கி, புதிய வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. கிராமப்புற இளைஞர்களிடம் உள்ள திறன்களை மேம்படுத்தவும், புதிய திறன்களை அவரவர்களின் ஆற்றல்களுக்கேற்ப பெற்றுக் கொள்ளவும், இத்திட்டம் ஆவன செய்கிறது. இதன் மூலம் இவர்கள் புகழ் பெற்ற தொழில் நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். பலர் அதிக வருவாய் ஈட்டக்கூடிய சுய தொழில்களைத் துவங்கியுள்ளனர். அமுதசுரபி நிதியாதாரம் பெறும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தனிநபர் கடன் பெற்று, பலர் வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். கிராமப் பகுதிகளில் முக்கியமான பொருளாதார நடவடிக்கையை மையமாகக் கொண்டு தொழிற் கூட்டமைப்புகளை துவங்கவும் இத்திட்டம் துணை நிற்கிறது.



- தொழிற் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட **62,486** இளைஞர்களில், பயிற்சி முடித்த **46,356** பேரில், **37,831** பேர் நல்ல வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். (பயிற்சி முடித்தவர்களில் 81%)

- **43,990** குடும்பங்கள், அமுதசுரபி நிதியிலிருந்து ரூ.**44.29** கோடி வாழ்வாதார மேம்பாட்டிற்காக தனிநபர் கடனாக பெற்றுள்ளன.

- இதுவரை **2,757** உறுப்பினர்களை கொண்ட **66** தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு அவை செயல்படத் தொடங்கியுள்ளன. இதுவரை ரூ.**221** இலட்சம் இந்த கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்புகள், பால் பண்ணை, ஆயத்த ஆடைகள் தயாரித்தல், மலர் சாகுபடி, கயிறு உற்பத்தி மற்றும் ஆடு வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளன.

### 8.4.6 சிறந்த ஆளுமை மற்றும் சமூக பொறுப்பினை வளர்த்தல்

சிறந்த ஆளுமை மற்றும் சமூக பொறுப்பு இத்திட்டத்தின் இன்றியமையாத கொள்கைகளாகும். மக்கள் அமைப்புகள், இக்கொள்கைகளின் அடிப்படையாக விளங்கும் உயிர் மூச்சுகளாகிய சமத்துவம், வெளிப்படைத்தன்மை, விடுபட்டோரைச் சேர்த்தல்,

பொறுப்புடமை மற்றும் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்றல் போன்றவற்றை பின்பற்றி நடக்க ஆற்றலளிப்பு தரப்பட்டுள்ளது.

**திட்ட அளவில்**

- திட்ட செயல்பாடுகளை தொடர்ச்சியாகவும், சுதந்திரமாகவும் கண்காணிக்க மூன்று தனியார் நிறுவனங்கள் பணியமர்த்தப்பட்டுள்ளன.
- திட்ட நிதி குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் முகத்தான் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கணக்குகளை தணிக்கை செய்ய பட்டய தணிக்கை நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
- வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தும் போது, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய, ஒரு சுற்றுச் சூழல் ஆதார நிறுவனம் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**கிராம அளவில்**

- சமூக தணிக்கை குழுக்கள், திட்ட கொள்கைகளை நிலை நிறுத்துவதுடன் மக்கள் அமைப்புகள் உயிர் மூச்சுகளை பின்பற்றுவதை உறுதி செய்கின்றன.



- அனைத்து தகவல்கள், அதாவது கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் பெறும் நிதி மற்றும் திட்ட செயல்பாடுகள் போன்றவை கிராம ஊராட்சியின் முக்கிய பகுதிகளில் தகவல் பலகைகள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுத்தப்படுகின்றன.
- அனைத்து முக்கிய முடிவுகளும் கிராம சபை ஒப்புதலுடன் எடுக்கப்படுகின்றன. மக்களமைப்புகள் அவ்வப்போது திட்ட நடவடிக்கைகள் குறித்த முன்னேற்ற அறிக்கைகளை கிராம சபைக்கு சமர்ப்பிக்கின்றன.

## 8.5 மக்கள் காப்பீட்டு திட்டம்

இலக்கு மக்களின் சமூக பாதுகாப்பிற்காக குறைந்த கட்டணத்தில் காப்பீடு திட்டங்களுக்கு, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வழி வகை செய்துள்ளது. மத்திய அரசின் மான்யத்துடன் செயல்படும் “யூனிவர்சல் சுகாதார காப்பீடு திட்டம்” சில குறிப்பிட்ட வட்டாரங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அமைப்புகளை முன்நிறுத்தி செயல்படுத்தப்படும் இத்திட்டக் கொள்கைக்கு இணங்க இக்காப்பீட்டு திட்டமும் மக்களால் நிர்வகிக்கப்படுகிறது. வட்டார அளவிலான சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பு மூன்றாம் கட்சி நிர்வாகியாகவும், பங்கு பெறும் மருத்துவமனைகளை தேர்வு செய்யும் பொறுப்புடைய அமைப்பாகவும் செயல்படுகிறது.

இம்முயற்சி பிற வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

### 8.6 மனித வளம் மேம்பாடு – சிறப்பு செயல்முறைகள்

ஆற்றல் மிக்க பணியாளர்களை ஈர்த்து, அவர்களை தக்க வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து, இத்திட்டம் இதற்கான முன்னோடியான நல்ல பலன்களை தரும் மனித வள மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. திட்டப் பணியாளர்கள் தேர்வு நடுநிலையான மனித வள தேர்வு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகின்றனர். முறையான பயிற்சிகள், கருத்துப்பட்டரைகள், களப்பயணம் ஆகியவற்றின் மூலம் இவர்களது திறன் வளர்ப்பு முக்கியத்தை இத்திட்டம் பறைசாற்றுகிறது. பணி மதிப்பீட்டின் அடிப்படையில் பணியாளர்களின் ஊதிய உயர்விற்கு வழிவகை செய்து, இதன் மூலம் திறமையும், திட்டப் பணியில் ஆர்வமும் உள்ள பணியாளர்களை இத்திட்டம் தக்க வைத்துக் கொள்கிறது.

### 8.7 உலக வங்கியின் ஆய்வு குழு

திட்ட செயலாக்க முன்னேற்றத்திற்கு தொடர்ந்து ஆதரவு அளிக்கும் வகையில், அவ்வப்போது உலக வங்கியின் ஆய்வுக் குழு வருகை தந்துள்ளது. இதுவரை ஏழு உலக வங்கி ஆய்வு குழுக்கள் திட்டத்திற்கு வருகை



புரிந்து அதன் செயல்பாடுகளைப் பாராட்டியுள்ளன. சமீபத்தில் வந்த உலக வங்கி ஆய்வு குழுக்களின் சில கருத்துக்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. கடைசியாக வருகை புரிந்த உலக வங்கி ஆய்வு குழு திட்ட நிர்வாக செயல்பாட்டினை "மிகவும் திருப்தி" என விவரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

"மிகவும் ஏழைகள், நலிவுற்றோர், இளைஞர்கள், பெண்கள், பழங்குடியினர், மாற்றுத் திறன் படைத்தோர் முடிவுகள் எடுக்கக் கூடிய ஆற்றலளிப்பு பெற்று மற்றும் பிற பலன்கள் பெற்றிருப்பது, திட்ட வடிவம் மற்றும் செயலாக்க உத்திகளில் அமைந்துள்ள தனித்தன்மையை எடுத்துக் காட்டுகின்றன."

– இடைக் கால ஆய்வு குழு, உலக வங்கி,
– பிப்ரவரி 2009

"இத்திட்டம் மிகக் குறைந்த செலவினத்தில், 30,000 இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து, அதில் 22,000 இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்றிட உதவியுள்ளது, இடைக்கால ஆய்வின் மூலம் அறியப்படுகிறது. தேவையான பயனுள்ள பயிற்சி தரப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. இவ்வாறு பலன் பெற்றோர்களில் பெரும்பாலோர் பரம ஏழைகள்."

– இடைக் கால ஆய்வு குழு, உலக வங்கி,
– பிப்ரவரி 2009

“அனுபவம் மற்றும் ஆற்றல்களை மக்கள் வழியாக மக்கள் கற்றுக் கொள்வதற்கு ஒரு தளமாக மக்கள் கற்றல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் திட்டத்தின் மிக சிறந்த ஒரு புது முயற்சி.”

– இடைக் கால ஆய்வு குழு, உலக வங்கி,
– பிப்ரவரி 2009

“சமுதாய சேர்க்கையில் மாற்றுத் திறன் படைத்தோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிக ஏழ்மை நிலையில் உள்ள பெண்களுக்கு முன்னுரிமை அளித்து, விடுபட்ட ஏழைகள் மற்றும் நலிவுற்றோர் வருவாய் ஈட்டிடும் சந்தர்ப்பம் பெறும் வகையில் சுய உதவிக் குழுக்களாக திரட்டப்பட்டு, வங்கி இணைப்பு பெறச் செய்து, திறன் வளர்ப்பு, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் முக்கியமாக இளைஞர்கள் பலன் அடைய உறுதி செய்ததன் மூலம், இத்திட்டம் தொடர்ந்து சாதனை புரிந்து வருகிறது. சுமார் 23,300 இளைஞர்கள் ஏற்கனவே வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இத் திட்டம் தமிழ்நாடு அரசின் முழு ஆதரவை பெற்றுள்ளது.”

– ஏழாவது உலக வங்கி ஆய்வு குழு,
– டிசம்பர் 2009

“விடுபட்ட ஏழை எளியோரை சமுதாய மேம்பாட்டுச் செயல்பாடுகளில் பங்கு பெறச் செய்தல் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாக உள்ளது. இத்திட்டம் மிக ஏழைகள், நலிவுற்றோர்



ஒதுக்கப்பட்ட பிரிவினர்களுக்கு திட்டச் செயல்பாடுகளில் முக்கியத்துவம் தந்துள்ளது. ஏற்கனவே மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வில் பலன் அடைந்தோர் போக, விடுபட்டோரும் சேர்க்கப்பட்டுள்ளனர். தேனி மாவட்டத்தில் பழங்குடியினர் வறுமை ஒழிப்பு சங்கம் ஒன்றை இக்குழு பார்வையிடும் போது தடைகளை கடந்து சமூக சேர்க்கையில் பழங்குடியினர் பலன் அடைந்திருப்பதை கண்ணுற்றது .”

– ஏழாவது உலக வங்கி ஆய்வு குழு,
– டிசம்பர் 2009

“கிராம அளவிலான மக்கள் அமைப்புகள் உருவாக்குதல், அவற்றை பலப்படுத்துதல் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. முக்கியமாக, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சிரமமின்றி மறு சீரமைக்கப்பட்டுள்ளன. இது எளிதான காரியமல்ல, பாராட்டப்பட வேண்டிய சாதனை.”

– ஏழாவது உலக வங்கி ஆய்வு குழு,
– டிசம்பர் 2009

“மக்கள் கற்றல் மையங்களின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டு இம்மையங்கள் மூலம் தரமான தேவையை குறைந்த கட்டணத்தில் மக்கள் பெற வழிவகை செய்து, நல்ல முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது”.

– ஏழாவது உலக வங்கி ஆய்வு குழு,
– டிசம்பர் 2009

### 8.8 நிதி நிலை செயல்பாடு

இத்திட்டத்தின் தொடக்கம் முதல் 31.3.2010 வரை ரூ.388.44 கோடி செலவிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் (2010–2011) இத்திட்டச் செயல்பாட்டிற்காக வரவு செலவு மதிப்பீட்டில், ரூ.184.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.9 உலக வங்கியிடம் கூடுதல் நிதி பெற முன் மொழிவுகள்

கிராமங்களில் குறுகிய காலத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. திட்டம், மக்களை முன்நிறுத்தி மாற்றத்திற்கு அவர்களை பொறுப்பு வகிக்க மேற்கொண்ட அணுகுமுறை சிறந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது. திட்ட செயலாக்கத்தை இடைக்கால ஆய்வு மேற்கொண்ட தனியார் நிறுவனம், திட்டம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை தாண்டி வியத்தகு முன்னேற்றத்தை எட்டியுள்ளது என தெரிவித்துள்ளது. இம்மாநிலத்தில் பின்தங்கியுள்ள பிற வட்டாரங்களில் இத்திட்டத்தை விரிவு செய்வதன் அவசியம் தெளிவாகிறது. இதற்கான தமிழ்நாடு அரசின் ரூ. 950 கோடி கூடுதல் நிதி ஆதாரம் கோரும் முன் மொழிவுகள், மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஆதாரத்தை பயன்படுத்தி திட்டத்தின் பலன்களை தக்க வைத்துக் கொள்வதுடன், திட்டத்தை



ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் 4 புதிய வட்டாரங்களிலும், புதிதாக 10 மாவட்டங்களில் 46 வட்டாரங்கள் ஆக மொத்தம் 50 வட்டாரங்களில், திட்டம் விரிவுப்படுத்தப்பட உள்ளது. உலக வங்கி, கூடுதல் நிதி ஆதாரத்திற்கான முன் மொழிவுகளை விரைவில் ஏற்று, உத்தரவு பிறப்பிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 9. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

### 9.1 முன்னுரை

26.12.2004 அன்று இந்தோனேசியாவுக்கு அருகில் தோன்றிய சுனாமி என்னும் ஆழிப்பேரலை, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பெருத்த சேதத்தை விளைவித்தது. சேதமடைந்த சாலைகள் மற்றும் பொது கட்டமைப்புகளை மீளக் கட்டவும், பாதிக்கப்பட்ட மக்களுக்காக புதிய வீடுகள் கட்டவும், அவர்களின் வாழ்வாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வரவும் தமிழ்நாடு அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டது.

சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்தி வருகின்றன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதினாலும் பணிகள் பரவலாக இருந்ததினாலும் இத்திட்டத்தின் செயலாக்கத்தை

மேற்பார்வையிட ஒரு திட்ட செயலாக்க அலகு தனியே ஏற்படுத்தப்பட்டு, 01.8.2005 முதல் செயல்பட்டு வருகின்றது.

சுனாமி திட்ட செயலாக்க அலகால் மாவட்ட செயலாக்க அலகுகள் மூலம் கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(I) 292.94 கோடி ரூபாய் நிதியில் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் மற்றும் மான்யத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம். (Tsunami Emergency Assistance Project).

(II) சுமார் 716 கோடி ரூபாய் மத்திய அரசு மான்யத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தரும் இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் (Rajiv Gandhi Rehabilitation Package).

(III) சுமார் 670 கோடி ரூபாய் நிதியில் உலக வங்கிக் கடனுதவியுடன் கடலோர சமுதாயத்தின் பாதிப்புகளை குறைக்கும் நோக்கத்துடன் (Vulnerability Reduction of Coastal Communities) எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டுதல் மற்றும் வெளியேறும் சாலைகள் அமைக்கும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project).



சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ் 13.5.2006 வரை 4.95 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. பணிகளை விரைந்து முடிக்க இந்த அரசு தந்த உந்துகையினால் 31.03.2010 வரை 864.84 கோடி ரூபாயாக செலவினம் உயர்ந்துள்ளது. (சுனாமி அவசர கால உதவித் திட்ட செலவு 292.94 கோடி ரூபாய் மற்றும் இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்ட செலவு 571.90 கோடி ரூபாய்). மேலும் 13.5.2006 வரை 61 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்ட நிலையில் சுனாமி திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த ஏதுவாக 331 பணியிடங்களை இந்த அரசு நிரப்பியுள்ளது.

## 9.2 ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)

இத்திட்டம் 292.94 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 6.4.2005 அன்று துவங்கப்பட்ட இத்திட்டம் 31.10.2009 வரை நீட்டிக்கப்பட்டது. இந்த நிதி, கடலோர குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்களையும், சேதமடைந்த உள்கட்டமைப்புகளையும் மீட்கவே பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இதனால் 12 கடலோர மாவட்டங்களில் 257 கடலோர கிராம ஊராட்சிகளில் உள்ள 1,602 குடியிருப்புகள் பயன்பெற்றுள்ளன.

**1. வாழ்வாதார உட்கூறு**

இந்த சிறப்பு உட்கூறின்கீழ் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு சுழல் நிதி உதவி, பொருளாதார கடன் உதவி, மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு உதவி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்காக 183.20 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அ) சிறப்புத் திட்டங்கள்**

திறன் வளர்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை பெருக்கத் தேவையான சமுதாய



உள்கட்டமைப்புகளை உருவாக்கிட கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- 15.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக்கள் வளாகம், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டப்பட்டு வருகிறது. இப்பணியினை ஜூன் மாதம், 2010க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1.62 கோடி ரூபாய் செலவில் நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- நாகர்கோயிலில் 250 கைத்தறிகள் கொண்ட கைத்தறி நெசவாளர்கள் தொகுதி 61.09 லட்சம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக, 9 பெரிய பால் குளிரூட்டும் கலன்கள், 37 பாலகங்கள் மற்றும் 160 பால் கூட்டுறவு சங்கங்கள் 4.06 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

- உள்ளூர் கைவினைத் தொழில்கள் மேம்பாட்டிற்காக, 67.49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம்

மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- 93 மீனவ சங்கங்களுக்கு நடைமுறை மூலதன உதவியாக 2.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- 20,000 மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடல் பாதுகாப்பு முறைகளில் 1.13 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**ஆ) திறனாக்க மேம்பாடு**

இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் செயல்திறன் மிக்க குழுக்களாக விளங்கும் வகையில் அடிப்படைப் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிகளுக்காக 4.47 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**2. ஊரக உள்கட்டமைப்பு**

**அ) சாலைகள் மற்றும் வடிகால்**

கடலோர கிராம ஊராட்சிகளில் 699 கி.மீ. நீளமுள்ள 610 சாலைப் பணிகள் சுமார் 89 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**ஆ) பொதுக் கட்டிடங்கள்**

கடலோர கிராம ஊராட்சிகளில் உள்ள கிராம ஊராட்சி அலுவலகக் கட்டிடங்களில் புனரமைத்தல் மற்றும் விரிவாக்கம் செய்து தரம் உயர்த்தும் வகையில் 196 பணிகள் 5.54 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**3. சுகாதாரம்**

ஊரகப் பகுதிகளில் கழிவறை உபயோகம் மற்றும் தன் சுத்தம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 21 குறும்படங்கள் ரூபாய் 67.28 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 9.3 மத்திய அரசு நிதி உதவியுடன் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)

இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. இத்திட்டம் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் வரை அமைந்துள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் அனைத்து வீடுகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், சிங்கார வேலர் மீனவர் குடியிருப்புத் திட்டம் போன்ற அரசு திட்டங்களில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1000 மீட்டருக்குள் கட்டப்பட்டு 01.01.2006 அன்று 10 ஆண்டுகள் பழமையானதாக அமைந்துள்ள வீடுகள் அனைத்தையும் மீளக் கட்டிடவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகளும் இத்திட்டத்தின் மூலம் செய்து தரப்படுகின்றன.

**இத்திட்டத்தின் முக்கிய உட்கூறுகள் பின்வருமாறு:-**

1) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட வீடுகள் உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தருதல்.
2) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகளைக் கட்டுதல்.
3) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகள் உள்ள பகுதிகளில் அடிப்படை வசதி செய்தல்.
4) எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய வீடுகளுக்கு பதிலாக உறுதியான வீடுகளை மீளக்கட்டுதல்.
5) எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய வீடுகளை மீளக் கட்டும் பகுதிகளில் அனைத்து கிராம



அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வழிகாட்டுதலின் படி அடிப்படை வசதிகள் செய்தல்.

**அட்டவணை – 26**

**இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதி பணிகளின் முன்னேற்றம்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | பணிகள் விவரம் | எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் | ஒதுக்கீடு | செலவினம் | செலவின சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டுதல் | 18,302 | 12,665 | 499.22 | 377.15 | 76 |
| 2 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகளை மீளக் கட்டுதல் | 2,687 | 2,687 | 65.76 | 63.09 | 96 |
| 3 | **அடிப்படை வசதிகள்** | | | | | |
| | i) சாலைகள் | 976 (638 கிமீ) | 915 (542 கிமீ) | 96.09 | 82.32 | 85 |
| | ii) பொதுக் கட்டிடங்கள் | 316 | 291 | 5.25 | 4.14 | 79 |
| | iii) தெரு விளக்குகள் | 5,699 | 5,699 | 2.50 | 2.50 | 100 |
| | iv) சுகாதாரம் | 5,922 | 5,800 | 4.70 | 4.38 | 93 |
| | v) இதர பணிகள் | 307 | 284 | 16.66 | 12.78 | 77 |
| 4 | இதர செலவினங்கள் (இடமாற்றுப் படி, வீட்டு வாடகைப் படி மற்றும் காப்பீடு) | | | 25.54 | 25.54 | 100 |
| | **மொத்தம்** | **34,209** | **28,341** | **715.72** | **571.90** | **80** |

## 1) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருதல்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் அவர்களால் மேற்கொள்ளப்படாத அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி, சுகாதாரம் மற்றும் பள்ளங்களில் மண் நிரப்பி சமன்படுத்துதல் போன்ற 169 அடிப்படை வசதிப் பணிகள் 57.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு 31.3.2010 வரை 49.41 கோடி ரூபாய் செலவில் 161 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 2) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகளைக் கட்டுதல்

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீளக் கட்டித் தருவதாக சில தொண்டு நிறுவனங்கள் முதலில் ஏற்றுக்கொண்டனர். ஆனால், சுனாமி ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆன பின்பும் 2,687 வீடுகளைக் கட்டாமல் கைவிட்டனர். இறுதியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 17 குடியிருப்புகளில் 63.09 கோடி ரூபாய் செலவில் இந்த வீடுகளைக் கட்டி முடித்துள்ளது.



## 3) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகள் உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகள் உள்ள பகுதிகளில் 56 அடிப்படை வசதிப்பணிகள் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் 6.08 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

## 4) எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வீடுகளை மீளக்கட்டுதல்

எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளைப் பல்வேறு இயற்கை இடர்பாடுகளைத் தாங்கும் தன்மை கொண்டதாக மீளக் கட்டித் தருதலே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். 146 கடலோர கிராம ஊராட்சிகளில் உள்ள 333 குடியிருப்புகளில் 18,302 வீடுகள் மீளக் கட்டுவதற்காக எடுக்கப்பட்டுள்ளன (17,207 அதே இடத்து வீடுகள் மற்றும் 1,095 மாற்று இட வீடுகள்). இதுவரை 12,665 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன (69%). எஞ்சிய 5,637 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 499.22 கோடி ரூபாய் ஒப்பந்த மதிப்பீட்டில் இதுவரை 377.15 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது (76%).

நிலுவையாக உள்ள அனைத்து வீடுகளையும் செப்டம்பர், 2010க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வழிகாட்டுதலின்படி எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டும் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல்**

கடலோரப் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டும் இடங்களில் சிமெண்ட் கான்க்ரீட் சாலைகள், தெரு விளக்குகள், கிராம ஊரணி / குளங்கள் மேம்பாடு, பொதுக் கட்டிடங்கள், மயான மேம்பாடு / சுடுகாடு கூரை அமைத்தல் போன்ற 3,238 அடிப்படை வசதிப் பணிகள் 68.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்டுள்ளன. 31.3.2010 வரை 3,138 பணிகள் முடிக்கப்பட்டு 52.55 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது (77%). எஞ்சிய பணிகள் அனைத்தும் மே மாதம் 2010க்குள் முடிக்கப்படும்.



**ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் இதர முக்கிய அம்சங்கள்**

**i) இடமாற்றுத் தொகை மற்றும் வாடகைத் தொகை வழங்குதல்**

எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளில் வசித்த அதே இடப் பயனாளிகளுக்கு புதிய வீடுகள் மீளக் கட்டப்படும் வரை மாற்று இடத்தில் இருப்பதற்காக வீடு ஒன்றுக்கு 1,000/– ரூபாய் இடமாற்றுத் தொகையாகவும், 18 மாதங்களுக்கு வாடகைத் தொகையாக மாதம் 500/– ரூபாய் வீதமும் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 17,207 அதே இடப் பயனாளிகளுக்கு 17.49 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

**ii) காப்பீட்டுத் தொகை வழங்குதல்**

10 ஆண்டுகளுக்கு 14 வகை இயற்கை இடர்பாடுகளிலிருந்து 20,989 வீடுகளைப் பாதுகாப்பதற்காக காப்பீட்டுத் தொகையாக 2.10 கோடி ரூபாய் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**iii) மாநில தர மேற்பார்வையாளர்கள்**

இத்திட்டத்தின் கீழ் வீடுகட்டும் பணிகள் மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளின் தரத்தை உறுதி செய்வதற்காக மாநில அளவில் தர மேற்பார்வையாளர்கள்,

ஓய்வு பெற்ற கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் நிலையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**iv) குடிநீர் கைபம்புகள் அமைத்தல்**

மத்திய திட்டக்குழு மான்ய நிதியிலிருந்து இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் 1,002 கைபம்புகள் 86.07 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

## 9.4 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் – கடலோர சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டம் (ETRP-VRCCP)

சுனாமியால் கடலோரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் அவசர கால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட சுமார் 17,000 வீடுகளை உலக வங்கியுடன் கலந்து சுமார் 670 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீளக் கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசாணை நிலை எண்.475, வருவாய் (என்.சி.4–1)



துறை நாள் 15.12.2009–ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த 31.12.2011 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

**திட்டத்தின் கூறுகள்**

**அ) எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல்**

கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் சுமார் 17,000 வீடுகளை மீளக் கட்டித் தருதல்.

**ஆ) வெளியேறும் சாலைகள் அமைத்தல்**

அவசர காலத்தில் எளிதாக வெளியேறிப் பாதுகாப்பான இடங்களை அடைய தேவையான வெளியேறும் சாலைகள் அமைத்தல்.

**கொள்முதல் விதித்தளர்வுகள்**

உலக வங்கியின் கொள்முதல் வழிமுறைகளில் இருந்து பின்வரும் இனங்களில் விதித்தளர்வுகள் தமிழ்நாடு அரசால் கோரப்பட்டன. 1) ஒப்பந்ததாரர்களின் வருடாந்திர பணிகளின் மொத்த மதிப்பு, 2) ஒப்பந்ததாரர் நிறைவேற்றிய ஒரு தனிப்பட்ட கட்டுமானப் பணியின் மதிப்பிற்கான வரம்பு, 3) ஒரு ஒப்பந்ததாரர் குறைந்தபட்சம் செய்த பணிகளின் மதிப்பு, 4) மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதை உலக வங்கி முன் ஆய்வு செய்தல் மற்றும் 5) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த

ஒப்பந்ததாரருடன் பேச்சு வார்த்தை நடத்துதல். கோரப்பட்ட 5 விதித்தளர்வுகளில் 3 இனங்களுக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்தது. மேலும், முடிக்கப்படும் பணிகளின் அடிப்படையிலான விடுவிப்புக்கு பதிலாக, செலவின அறிக்கை அடிப்படையில் நிதியைக் கோரப்பட்டவாறு விடுவிக்கவும், இத்திட்டத்தின் நிறைவு நாளை டிசம்பர் 31, 2010 என்பதற்கு பதிலாக டிசம்பர் 31, 2011 எனவும் உலக வங்கி ஒப்புதல் அளித்தது. மேலும் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை 2.78 லட்ச ரூபாயில் 80% தொகையை மட்டும் உலக வங்கி வழங்கும் என்பதற்குப் பதிலாக கட்டப்படும் வீட்டிற்கு ஆகும் செலவில் 80% வழங்கவேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையையும் உலக வங்கி ஏற்றுக் கொண்டது.

**மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

**i) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் – மூன்றாம் நிலை எளிதாக்குநர்கள்**

11 கடலோர மாவட்டங்களில் பயனாளிகள் பங்கேற்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் 11 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூன்றாம் நிலை எளிதாக்குநர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பயனாளிகள் தேர்வு, சமூகத் தணிக்கை, சமுதாய பங்கேற்பு மற்றும் வீடுகளின் அமைப்பில் மாற்றங்களை கண்காணித்தல் ஆகியவை தன்னார்வ தொண்டு



நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய பணிகளாகும். பயனாளிகளைத் தேர்வு செய்யும் பணி, பயனாளிகளுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணி ஆகியவற்றை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இதுவரை முடித்துள்ளன.

**ii) பயனாளிகள் தேர்வு**

இத்திட்டத்தின் கீழ் வருவாய் துறையால் கண்டறியப்பட்ட பயனாளிகளை மூன்றாம் நிலை எளிதாக்குநர்களாக நியக்கப்பட்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மறுஆய்வு செய்து எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்ட தகுதியானவர்கள் என 15,056 பயனாளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளனர். பயனாளிகளின் பட்டியலைத் தொடர்புடைய ஊராட்சிகளின் கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**iii) கொள்முதல் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள 15,056 வீடுகள், 157 தொகுப்புகளாகப் பிரித்து தயாரிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**iv) மண் பரிசோதனை செய்தல்**

இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ள எல்லாக் குடியிருப்புகளிலும் தேவையான

அடித்தள அமைப்பு வகையை உறுதி செய்ய மண்பரிசோதனை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

### v) கடலோரக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான அனுமதி (CRZ Clearance)

கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 500 மீட்டர் வரை உள்ள பகுதிகளில் 6,145 வீடுகளை மீளக்கட்டுவதற்காக இந்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் / மாநில கடலோரப் பகுதி மேலாண்மை அமைப்பின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

### vi) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள்

மொத்த வீடுகள் அடங்கிய 157 தொகுப்புகளுக்கும் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றில் 11 முன் ஆய்வுத் தொகுப்புகளுக்கு உலக வங்கியின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. இவை இறுதி செய்யப்பட்ட பின்னர், வீடுகள் கட்டும் பணி தொடங்கப்படும்.

## 10. வரவு செலவுத் திட்டம் 2010–2011

2010–2011 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.8,013.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ. 5,009.22 கோடி மற்றும் மூலதனச் செலவினம் ரூ. 3,003.99 கோடி ஆகும்.



## 11. முடிவுரை

கடந்த நான்காண்டுகளாக பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. மேலும், திட்டங்கள், ஊராட்சி அமைப்பு மற்றும் பணியமைப்பு ஆகியவற்றில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு திருப்புமுனை முயற்சிகளும், அமைப்பு முறையில் முன்னேற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, உச்ச நீதிமன்றமே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்படுவதை பாராட்டியதோடு மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களும் தமிழ்நாட்டின் செயல்பாடுகளை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட விருதுகளை 2007–08–ம் ஆண்டில் மூன்று மாவட்டங்களும், 2008–09–ம் ஆண்டில் இரண்டு மாவட்டங்களும் பெற்றுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை, மொத்த நிதிப் பயன்பாட்டில் தமிழ் நாடு அகில இந்திய அளவில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது (1993 முதல் 97.14 சதவீதம் நிதிப் பயன்பாடு). முழு சுகாதார இயக்கத்தின்கீழ் 2006–07 முதல் 2008–09 வரையிலான மூன்று ஆண்டுகளில் 1,966 கிராம ஊராட்சிகள் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதினை பெற்றுள்ளன. புதுமையான மாநில திட்டங்களான

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் அனைத்து தரப்பிலிருந்தும் மிகுந்த பாராட்டைப் பெற்றுள்ளன. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் 2011–ம் ஆண்டில் நாட்டிலேயே ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒரு நூலகம் மற்றும் ஒரு விளையாட்டு மையம் அமையப் பெற்ற ஒரே மாநிலம் என்ற தனிச்சிறப்பை தமிழ்நாடு பெறும். தமிழகத்தின் மாபெரும் திருப்பு முனைத் திட்டமான கலைஞர் வீட்டு வசதித் திட்டம், தமிழக கிராமப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடிசைகளையும் நிலையான வீடுகளாக மாற்றியமைத்து, 2016–ம் ஆண்டில் நாட்டிலேயே குடிசைகள் இல்லாத முதல் மாநிலம் தமிழ்நாடு எனும் பெருமையை அளிக்கும்.

ஊராட்சி அமைப்பு முறையை சீரமைப்பதற்காக இந்த அரசு பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழகத்தில் ஊராட்சிகளின் நிலை குறித்த ஆண்டறிக்கை சமர்ப்பித்தல், காலாவதியான ஜமாபந்தி முறையை ஒழித்தது, ஊராட்சி ஒன்றியங்களில் நியமனக் குழுக்களை மீண்டும் ஏற்படுத்தியது, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் விதிமுறைகளை ஊராட்சிகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் தண்டனைகளை அதிகப்படுத்தியது,, ஊராட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்படும் மாநில நிதிக் குழு



மான்யம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது, நிதி விடுவித்தல் சீரமைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட நிதி வருவாயை மாநில அளவில் ஒருங்கிணைத்து அதில் ஒரு பகுதியை ஊராட்சி அமைப்புகளுக்கு பிரித்தளித்து எஞ்சிய நிதியினை சிறப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்தல், அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தொலைபேசி மற்றும் கணிணி வசதி ஏற்படுத்தியது, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு வாகன வசதி, ஊராட்சி பிரதிநிதிகளுக்கு நிலையான பயணப்படியினை உயர்த்தியது, ஊராட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அடையாள அட்டை வழங்கியது, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1–ம் தேதி ‘‘உள்ளாட்சிகள் தினமாக‘‘ அறிவிக்கப்பட்டது, சிறப்பாக செயல்படும் ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது நிறுவப்பட்டது, சமூக பொறுப்புணர்வு விருதுகள் நிறுவியது மற்றும் நான்காவது மாநில நிதிக் குழுவினை உரிய காலத்திற்கு முன்னதாகவே அமைத்தது – என பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த நான்காண்டுகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நிர்வாக அமைப்பினை பலப்படுத்தவும், சீரமைக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை களை மறுசீரமைத்தது, அனைத்து விரிவாக்க அலுவலர் நிலை அலுவலர்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாக்கியது, துறையின் பொறியாளர் பிரிவினை

அனைத்து நிலையிலும் பலப்படுத்தியது, திட்ட செயல்பாடுகளின் தரத்தினை உயர்த்தவும், முறையாகக் கண்காணிக்கவும் அனைத்து நிலையிலும் நிர்வாகப் பணியிடங்களை பெருமளவில் உருவாக்கியது, மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கியது. அனைத்து பிரிவு பணியாளர்களையும் உரிய நேரத்தில் தேர்வு செய்தல் மற்றும் பதவி உயர்வு வழங்கியது, வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநர், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் ஆகியோர்களின் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்களை முறையாக வழங்கியது மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன முதல்வர் மற்றும் கூடுதல் இயக்குநர்கள் அனைவருக்கும் வாகன வசதிகள் ஆகியன பணியமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான சீர்திருத்தங்களாகும்.

சுய உதவிக் குழு இயக்கத்தில் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதியில் வசிப்போர் போன்ற ஏழை எளியவர்களை இணைக்கும் வகையில் சுய உதவிக் குழு இயக்கத்தின் செயல்பாடுகள் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளன. சுழல் நிதி மானியத்திற்கான ஒதுக்கீட்டை அரசு கணிசமாக அதிகப்படுத்தி வழங்கி வருவதால் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி



பெறுவதற்கு ஆறு மாதங்கள் முதல் நான்கு வருடங்கள் வரை காத்திருந்த நிலை வெகுவாகக் குறைந்து தற்போது காத்திருப்பு காலம் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக் குழுக்களின் அடுத்த கட்ட வளர்ச்சியாகும். இக்கூட்டமைப்புகளை மேலும் மேம்படுத்தும் வகையில் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி, அவர்தம் பங்கேற்புடன் வெளிப்படையாகச் செயல்படும் வகையில் மறுசீரமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சுய உதவிக் குழுக்களால் தனித்து மேற்கொள்ள முடியாத பெரிய அளவிலான தொழில்களை கூட்டமைப்புகள் எடுத்து நடத்திடவும், மேலும் வங்கிகளுக்கும் சுயஉதவிக் குழுக்களுக்கும் இடையேயான நிதி இடையீட்டாளர் பணியினை சிறப்பாகச் செய்திடவும் அரசு ஊக்குவிக்கின்றது. சிறப்பாகச் செயல்படும் சுயஉதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வங்கிகளை சிறப்பு செய்யும் விதமாக அரசு தோற்றுவித்துள்ள விருதுகள் இவ்வமைப்புகளிடையே ஓர் ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துவதோடு, மற்றவர்கள் பின்பற்றக் கூடிய பல முன்மாதிரிகளையும் உருவாக்கி உள்ளன.

ஏழை எளியோர், நலிவுற்றோர், மாற்று திறன் படைத்தோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரை, கிராம அளவில் முக்கிய முடிவுகளுக்கு பொறுப்பாகும் மக்கள் அமைப்புகளில் இணைத்து, ஆற்றலளிப்பு அளிப்பதில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் அமோகமான வெற்றி கண்டுள்ளது. சிறந்த நிர்வாகத்திற்கு பெயர் பெற்ற கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் தோன்ற துணை நின்றதோடு, சமூக வல்லுநர்கள், சுய உதவிக்குழு பயிற்றுநர்கள், கணக்காளர்கள், மாற்று திறன் படைத்தோருக்கான சமூக ஒருங்கிணைப்பாளர்கள் போன்ற சார்பு வல்லுநர்களை உருவாக்கி சமூக மூலதனம் ஏற்பட இத்திட்டம் உதவியுள்ளது. தொழிற் நிறுவனங்களில் நிலவும் மனித வள தேவைகளை பயன்படுத்தி கொள்ளும் வகையில் தக்க தகவல் பரிமாற்றத்தின் மூலம் ஏராளமான கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்கு தேவையான தொழிற் பயிற்சிகளை இத்திட்டம் அளிக்கிறது. கிராமப்புற நலிந்த குடும்பங்களின் வருமானம் பெருகிட வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்தடுத்து வருகை தந்துள்ள உலக வங்கி ஆய்வு குழுக்கள் திட்ட செயல்பாட்டை பெரிதும் பாராட்டியுள்ளதன் அடிப்படையில், இத்திட்டத்தை மேலும் 50 வட்டாரங்களுக்கு விரிவு படுத்த தேவைப்படும் கூடுதல் நிதி கோரும் விண்ணப்பம் மத்திய



அரசின் பரிந்துரையுடன் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட சுனாமி அவசரகால உதவித்திட்டம் 31.10.2009 உடன் முடிவு பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோர் வாழ்வாதார உதவிகள் பெற்று மிகுந்த பயனடைந்துள்ளனர். மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் சுமார் 565 கோடி ரூபாய் மதிப்பில் 20,989 வீடுகள் மீளக் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், சுமார் 150 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. எடுக்கப்பட்ட பணிகளில் 83 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு நிதி ஒதுக்கீட்டில் 80 சதவீத செலவினமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டம் - கடலோர சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டத்தின் (ETRP–VRCCP) கீழ் 15,056 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்ட எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து வீடுகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளதுடன் விரைவில் பணிகள் துவக்கப்படவும் உள்ளன.

கடந்த மே, **2006–**ல் இந்த அரசு பொறுப் பேற்றபோது பெருமளவிலான முடிக்கப்படாத நிலுவைப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு சவால்களை சந்தித்தது, எல்லா நிலைகளிலும் ஏராளமான காலியிடங்கள் இருந்தன. முக்கியமான திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வாழ்ந்து காட்டுவோம், சுனாமி அவசரகால உதவித் திட்டம், ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம், அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் ஏறத்தாழ தொடங்கப்படவே இல்லை. கடின முயற்சி மற்றும் தளராத அர்ப்பணிப்பின் காரணமாக, இச்சவால்களில் நாம் வெற்றி பெற்றதோடு, வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள், மத்திய அரசு மற்றும் மாநிலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதில் பாராட்டுகளையும் பெற்றோம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களின் சிறப்பான பணிகள் பல்வேறு தரப்பினரின் பாராட்டைப் பெற்றுள்ளன. புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாக திறப்பு விழாவின்போது மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் அவர்கள், தமிழ்நாடு 'ஊரக வளர்ச்சியில் நாட்டிலேயே முன்னோடியாக உள்ளது' என்று தெரிவித்துள்ளார். இவையனைத்தும் கடந்த நான்கு வருடங்களில் எய்தப்பட்ட சாதனைகளாகும் என்பதை எண்ணி மனநிறைவு கொண்டாலும் ஊரக மேம்பாடு மற்றும்



வறுமை ஒழிப்பு என்பது ஒரு தொடர்முயற்சி என்பதை உணர்ந்துள்ளோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் ஊரக ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றும் பணிகளை தொடர்ந்து செய்வோம்.

**மு.க. ஸ்டாலின்,**

**துணை முதலமைச்சர்**